www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI

U.K. 30p
France FF 5.00
Germany DM 1.50
Swiss SF 1.50
Norway Kr 5.00

ஓசை : 1
ஒலி : 1

லண்டன் ஆங்கீரச ௵ ஆனி ௴ 19௳ (3-16 .7.1992) : 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


## இலங்கையின் தமிழ்ப்பகுதிகளில்
# இராணுவ நடவடிக்கைகள் தீவிரம்
## சமாதானத்துக்கு நிர்ப்பந்திக்கும் முயற்சி

(கொழும்பிலிருந்து நமது அரசியல் நிருபர்)

**இலங்கையில் தொடரும் இனப்பிரச்சனைக்கு தீர்க்கமான - நியாயமான ஓர் அரசியல் தீர்வினைக் காணும் முயற்சிகள் இழுபட்டுக் கொண்டு போகின்ற வேளையில், அரச பாதுகாப்புப்படைகள் வடக்கிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் தமது இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்து சமாதான உடன்படிக்கை ஒன்றுக்கு அவர்களை நிர்ப்பந்திக்க முயற்சிக்கின்றன.**

கடந்த இரண்டு மாத கால யுத்தத்தில் இருதரப்பினரிடையேயும் பலத்த இழப்புகள் ஏற்பட்டாலும் பாதுகாப்பு படைகள் குறிப்பிடத்தக்க விதத்தில் முன்னேறி வடக்கில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பல இடங்களைக் கைப்பற்றியும் கிழக்கில் பல தளங்களை அழித்துமுள்ளன.

ஊனமுற்ற தமது வீரர்களை மாற்றீடு செய்ய புதிதாக ஆள்சேர்க்க இயலாத நிலையில் புலிகளின் இழப்பு ஒப்பீட்டளவில் அதிகமானதே. காயமடைந்த ஏராளமான புலிப்படை வீரர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் காத்திருப்பதாகவும் பல கஷ்டங்களை அநுபவிப்பதாகவும் வடக்கிலிருந்து வரும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கிறார்கள். 'மிகப் பரிதாப கரமான நிலை' என்று வருத்தந் தெரிவித்த வெளிநாட்டு உதவியாளர் ஒருவர் அத்தியாவசிய மருந்து வகைகள் அங்கு இல்லை என்றார். இந்த விதத்தில் அரச படையினர் காயமுற்றவர்களை தெற்குக்கு அனுப்ப முடிவதில் அவர்களின் நிலமை ஒப்பீட்டளவில் முன்னேற்றமானதே.

புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள வீரர்கள் பற்றாக்குறை தீவிர கட்டாய ஆள்சேர்ப்புக்கு அதனைத் தூண்டுகிறது. இளம் யுவதிகளே இப்போது இதற்கு இலக்காகியிருப்பவர்கள். புலிகளுக்கு ஏற்பட்டுள்ள மற்றொரு பாரிய பிரச்னை ராஜிவ் காந்தி கொலைக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து விநியோக பாதைகள் துண்டிக்கப்பட்டதால் புதிய ஆயுத விநியோகத்தை அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

முடுக்கிவிடப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை ஒன்றை உணர்த்துகிறது. அதாவது, பாதுகாப்புப்படையின் முடிவு அரசியல் தாக்கங்களால் மாற்றமடையவில்லை. புலிகளுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு அநுமதியளித்து அதேவேளை அரசு சிலர்மூலம் புலிகளுடன் இரகசிய உடன்படிக்கை ஒன்றுக்காக இரகசியப் பேச்சுக்களையும் நிகழ்த்தி வருவதாகவே சந்தேகிக்கப்பட்டது. புலிகளையும் பயங்கரவாதத்தையும் முற்றாக ஒழித்து வடக்கிலும் கிழக்கிலும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தினாலன்றி நிரந்தர சமாதான தீர்வு சாத்தியமில்லை என்பதே கொழும்பில் இராணுவ வட்டாரங்களிலே அதிகரித்துவரும் எண்ணமாகும்.

வடபகுதி தாக்குதல்களின் போது முப்படைத் தளபதிகளினது பிரசன்னமும் புலிகளின் தளங்கள் மீது தரை, வான், கடல் தாக்குதல்களுக்கு திட்டமிடுவதும் அவர்களின் இந்த உறுதியை வெளிப்படுத்துகின்றன. அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் இத்தகைய இராணுவநடவடிக்கையுடன் இணைந்து மேற்கொள்ளப்படவேண்டும் என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, 'எமது சிங்கள போர் வீரர்களே நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக தங்கள் உயிரைப் பணயமாக்குகிறார்கள். அவர்களின் தியாகம் இந்த அரசியல் நடவடிக்கைகளால் வீணாகக் கூடாது' - இப்படி உயர்மட்ட வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

எப்படியெனினும் பாதுகாப்புப் படையினர் தங்கள் நடவடிக்கையில் பலத்த அவமானங்களையும் அடைந்திருக்கின்றனர். உதாரணத்துக்கு தெல்லிப்பழை நகருக்கு நகர்ந்த அவர்கள் யூனியன் கல்லூரிக்கு அப்பால் முன்னேறமுடியவில்லை. காரணம் அவ்விடத்தில் பலத்த கண்ணிவெடிகள். இருப்பதாக அவர்கள் பயந்தார்கள். பொது இடங்கள், வழிபாட்டு நிலையங்கள் மீதான தாக்குதல்கள் புலிகளின் பிரசாரத்துக்கு வாய்ப்பாகும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

எப்படியெனினும் புலிகளுக்கு இப்போ தம்மை மீளமைக்க சற்று அவகாசம் தேவைப்படுகிறது. இது ஒன்றில் போர் நிறுத்தமூலமோ அல்லது பாதுகாப்புப் படையினரின் கவனத்தை வேறு திசையில் திருப்புவதன் மூலமோ தான் ஏற்பட முடியும். சிலவேளைகளில் புலிகள் எல்லை புறங்களிலும் தெற்கிலும் சில தாக்குதல்களை மேற்கொள்ளலாம். ஆனால் மற்றுமொரு இனக்கலவரம் தெற்கில் மூண்டால் உலக அபிப்பிராயத்தை வெல்லலாம் என்பதில் புலிகளே மிகுந்த மகிழ்ச்சி கொள்வார்கள்.



## மகாராஜபுரம் சந்தானம் கார் விபத்தில் மரணம்

(சென்னை)

பிரபல கர்நாடக இசைக்கலைஞர் மகாராஜபுரம் சந்தானம்(64) விழுப்புரம் அருகே கார் விபத்தில் மரணமடைந்தார். இவ்விபத்தில் சந்தானத்துடன் அவரது நண்பர் ராமநாதனும், ராமநாதனின் பேத்தி அகிலாவும் (9) உயிரிழந்தனர். கார் டிரைவரும் உரிமையாளருமான அலெக்ஸ் (22) காயமடைந்தார்.

இவர்கள் அனைவரும் கும்பகோணத்திலிருந்து காரில் சென்னைக்கு வந்து கொண்டிருந்தனர். புதன் கிழமை காலை விழுப்புரம்- திண்டிவனம் இடையே உள்ள கூட்டேரிப்பட்டு என்ற இடத்தில் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிராக்டர் மீது கார் மோதியது. தலை நசுங்கி சந்தானம் இறந்தார். அவரது நண்பர் ராமநாதன் திண்டிவனம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் மரணமடைந்தார்.

விபத்தில் காயமடைந்த சந்தானத்தின் மனைவி ஞானாம்பாளும் அகிலாவும் சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சை பலன்தராமல் அகிலா இறந்தார்.

1923-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதி பிறந்த சந்தானம் பத்மஸ்ரீ உள்பட பல்வேறு விருதுகளைப் பெற்றவர். பிரபல கர்நாடக இசை மேதை மகாராஜபுரம் விஸ்வநாதய்யரின் புதல்வரான அவர், மெலட்டூர் சாமா தீட்சிதரிடமும் தனது தந்தையிடமும் பயிற்சி பெற்றவர்.

உலகின் பல்வேறு நாடுகளில் கச்சேரிகள் செய்து கர்நாடக இசையின் பெருமையைப் பரப்பிய சந்தானம் 1989-ம் ஆண்டு கௌரவம் மிக்க சங்கீத கலாநிதி பட்டத்தையும் 1990-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருதையும் பெற்றார்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள ராமநாதன் அகாதெமியில் சங்கீத ஆசிரியராகவும் சந்தானம் பணியாற்றியுள்ளார்.

விபத்தில் மரணமடைந்த இசைக் கலைஞர் மகாராஜபுரம் சந்தானத்தின் உடல் மாம்பலம் சிவஞானம் தெருவில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டுவரப்பட்டது. அங்கு ஏராளமானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதிச்சடங்குகள் 25 ஆம் தேதி காலை நடைபெற்றது.

### ஜெயலலிதா அனுதாபம்

மகாராஜபுரம் சந்தானம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து அவர் மனைவி ஞானாம்பாளுக்கு முதல் அமைச்சர் ஜெயலலிதா அனுப்பியுள்ள செய்தியி கூறியிருப்பதாவது:-

கார் விபத்தில் உங்கள் மதிப்பிற்குரிய கணவர் மகாராஜபுரம் சந்தானத்தின் துயர மறைவு செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்து ஆழ்ந்த துயருற்றேன். அவருடைய மறைவு எப்போதுமே நிரப்பப்பட முடியாத அளவு கர்நாடக இசை உலகில் ஒரு வெற்றிடத்தை விட்டு விட்டு சென்று இருக்கிறது. கர்நாடக இசை வளர்ச்சிக்கு அவர் எவ்வளவோ சேவை செய்து இருந்தாலும் இந்திய கர்நாடக இசை வரலாற்றில் அவர் தமக்கென ஒரு நிரந்தர இடத்தை உருவாக்கி இருந்தார். அவருடைய ஆன்மா சாந்தி அடையட்டும். நீங்கள் உங்கள் காயங்களில் இருந்து விரைவில் குணமடைய வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த துயரத்தை நீங்கள் தாங்கிக் கொள்ள போதுமான அளவு பலத்தை இறைவன் உங்களுக்குத்தர பிரார்த்திக்கிறேன். மேற்கண்டவாறு அந்த செய்தியில் முதல் அமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

### பீஷ்ம நாராயணசிங்

சந்தானம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து தமிழக கவர்ணர் பீஷ்ம நாராயண்சிங் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் "மகாராஜபுரம் சந்தானத்தின் மறைவு கர்நாடக இசை உலகிற்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்" என்று குறிப்பிட்டு உள்ளார்.

### சி.சுப்பிரமணியம்

சந்தானம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, மராட்டிய மாநில கவர்ணர் சி.சுப்பிரமணியம் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார். அதில் அவர், "சந்தானம் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். அவருடைய இழப்பு இசை உலகுக்கு ஈடு செய்ய முடியாதது ஆகும்"என்று கூறி உள்ளார்.

### இயல் இசை நாடக மன்றம்

மகாராஜபுரம் சந்தானம் மறைவுக்கு தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம் இரங்கல் தெரிவித்துள்ளது. இது குறித்து மன்றத்தின் தலைவர் குன்னக்குடி வைத்தியநாதன், செயலாளர் ஆர்.எஸ்.மனோகர் ஆகி

2ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மகாராஜபுரம்

1ம் பக்க தொடர்ச்சி

யோர் வெளியிட்டுள்ள அறிக்கையில் "இசை உலகில் அரை நூற்றாண்டுக்கும் மேல் புகழ் பெற்று விளங்கியவரும், குடியரசு தலைவர் விருது, மத்திய அரசின் சங்கீத நாடக அக்கடமி விருது, சங்கீத கலாநிதி, தமிழக அரசின் கலைமாமணி விருது போன்ற எண்ணற்ற விருதுகளைப் பெற்று சிறந்து விளங்கியவர். மகாராஜபுரம் சந்தானத்தின் திடீர் மறைவு கலை உலகிற்கு குறிப்பாக இசைத்துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அன்னாரது குடும்பத்திற்கு மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கிறது. அனைத்துஇந்திய சங்கீத கலைஞர் சங்கம் சார்பில் அதன் பொதுச் செயலாளர் எம்.எஸ்.ராஜேந்திரன் இரங்கல் செய்தியில் "கர்நாடக இசையை பாமர மக்களும் கேட்டு ரசிக்கும் வகையில் ஜனரஞ்சமாக பாடி, இசைத்தமிழின் பெருமைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட சந்தானத்தின் மறைவு சங்கீத உலகுக்கு பேரிழப்பாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மதுரை மாநாட்டில்

3ம் பக்க தொடர்ச்சி

முதல்வர் அதிகாலை 4.30க்கு திரும்பினார்.

இந்திய வரலாற்றிலேயே இது போன்ற ஒரு ஊர்வலம் நடந்தது இல்லை. யாருமே 14 மணிநேரம் பொறுமையாக உட்கார்ந்து பார்த்தது இல்லை. இது ஒரு சரித்திர நிகழ்ச்சியாகும்.

ஊர்வலத்தில் எந்தவிதமான பெரிய அசம்பாவிதமும் இல்லை. 81 அலங்கார வண்டிகள் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டன. 50 லட்சம் பேர், 24ஆயிரம் வாகனங்கள் ஊர்வலத்தில் பங்கேற்றன. ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களையும், வாகனங்களையும் முதல்வர் ஹெலிகாப்டரில் 60 கி.மீ சுற்றளவுக்கு ஒரு மணி நேரம் பார்வையிட்டார்.

முதுகில் அலகு குத்துதல் போன்ற உடலை வருத்தும் செயல்களில் அ.தி.மு.க. தொண்டர்கள் ஈடுபட வேண்டாம்" என்று முதல்வர் ஜெயலலிதா பரிவுடன் கேட்டுக் கொண்டார்.

மதுரையில் நடந்த அ.தி.மு.க. மாநாட்டில் கலந்து கொண்ட சில தொண்டர்கள் முதுகில் அலகு குத்திக் கொண்டும் கிரேனில் தொங்கிய படி பறவைக்காவடி எடுத்தும் வந்தனர். நேற்றிரவு மாநாட்டு நிறைவு நிகழ்ச்சியில் பேசிய ஜெயலலிதா இந்த நிகழ்ச்சியை குறிப்பிட்டார். ஜெயலலிதா பேசியபோது:

அ.தி.மு.க. ஊர்வலத்தில் சில தொண்டர்கள் தங்கள் உடலில் அலகு குத்தியும், உடலை வருத்திக்கொண்டு வந்ததையும் கண்டேன். என் நெஞ்சு கனத்தது. இப்படியா, உடலை துன்புறுத்திக் கொள்வது. உங்களின் அளவிட முடியாத பாசத்தை நான் அறிவேன். அதற்காக இப்படியெல்லாம் உடலை வருத்த தேவையில்லை. இனி கட்சி ஊர்வலத்தில் இதுபோல அலகு குத்திக் கொண்டு வருவதை அ.தி.மு.க. தொண்டர்கள் தவிர்க்க வேண்டும். இதே போல உடல் ஊனமுற்றோரும் மூன்று சக்கர வண்டியில் மிகவும் சிரமப்பட்டு ஊர்வலத்தில் வந்தனர். வயது முதிர்ந்த மூதாட்டிகளும் தள்ளாத வயதிலும் தளராமல் வந்தனர். வியப்புதான் மேலிட்டது. இப்படி தங்களை வருத்திக்கொண்டு வரவேண்டாம் என்று இவர்களையும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஜெயலலிதா கூறினார்.

## கிங்ஸ்ரனில் இசைவிழா

கிங்ஸ்ரன் முதலாவது இசைவிழா இம்மாதம் 5ஆம் தேதி மாலை சேர்பிற்றன் மப்பிள் றோட்டிலுள்ள சேர்பிற்றன் அசெம்பிளி மண் டபத்தில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிகளில் திருமதி.அம்பிகா தாமோதரத்தின் பாட்டும் சாந்தி தயாபரன், பார்திபன் ஜெகநாதன் ஆகியோரின் 'பரதாஞ்சலி'யும் சந்திரசேகர், சிவசங்கர்,முத்து சிவராஜா, சிதம்பரநாதன், அஞ்சலோ குமாரதாசன் ஆகியோரின் 'வாத்ய ரஞ்சனி'யும் இடம்பெறுகின்றன.

## பிறென்ற் தமிழ்ச்சங்க கலைவிழா

(நமது நிருபர்)

பிறன்ற் தமிழ்ச் சங்கத்தின் கலைவிழா ஜுலை மாதம் 4ஆம் சனிக்கிழமை மாலை வெம்பிளி கொப்லன்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது.

பிறன்ற் தமிழ்ச்சங்கம் அல்பேட்டன் உயர் பாடசாலையில் ஞாயிறு தினங்களில் நடாத்தும் தமிழ்ப் பாடசாலை மாணவ மாணவியரின் 'தப்பி வந்த தாடி ஆடு' நாடகம் இக்கலைவிழாவில் இடம்பெறும். அவைக்காற்று கலைக்கழகத்தின் ஆதரவுடன் தயாரிக்கப்பட்ட இந்நாடகத்தை க.பாலேந்திரா நெறிப்படுத்தியுள்ளார்.

தெற்கு லண்டன் நாடக சங்கம் அளிக்கும் 'பொண்ணு பாக்க மாப்பிள்ளை வந்தாச்சு' நாடகம், லக்ஷமி கலாலயத்தின் பரதநாட்டியம் என்பனவும் நடைபெறுகின்றன.

## 'ஸ்கொட்' கலை நிகழ்ச்சி

(நமது நிருபர்)

ஸ்கொட் நிறுவனம் அளிக்கும் கலைநிகழ்ச்சிகள் இரண்டு ஜுலை 11 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கார்ஷல்ரன் சாள்ஸ் கிறயர் தியேட்டரில் நடைபெறுகிறது. தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகத்தினரின் மன்னிக்கவும், யுகதர்மம் என்ற இரு நாடகங்களும் திருமதி லக்ஷமி ஜயன், அரவிந்தன் ஜயன் ஆகியோரின் இருவயலின் இசையும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றன.

ஈழத்தமிழர்களின் சமூக, பொருளாதார தேவைகளுக்காக 15 ஆண்டுகளாக இயங்கி வரும் ஸ்கொட் நிறுவனம் அதன் நிதிசேகரிப்புடன் கலைஞர்களை ஊக்குவித்தும் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

# பிரேமதாசா தேர்தல் மனு தீர்ப்பு ஒத்திவைப்பு

### 527 தினங்கள் தொடர்ந்த விசாரணை

(நமது கொழும்பு நிருபர்)

ஜனாதிபதி பிரேமதாசாவின் எதிர்காலத்தை நிச்சயிப்பதாய் அமையும் அவரின் தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணையின் தீர்ப்பை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இலங்கையின் வரலாற்றில் மிக நீண்ட வழக்கான இதன் தொகுப்புரை கடந்த செவ்வாய் முடிவடைந்தது. ஐந்து நீதியரசர்களைக் கொண்ட நீதிமன்றம் இவ்வழக்கை விசாரித்து வந்தது.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, 1988 ஜனவரி 19ஆம் தேதி நடைபெற்ற திரு பிரேமதாசாவின் தேர்தலை ஆட்சேபித்து அவர்மீதும், தேர்தல் ஆணையாளர் திரு ஆர்.கே.சந்திரானந்த டி சில்வா மீதும் இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார். 1989 மார்ச் 13ஆம் தேதி இம்மனு மீதான விசாரணையை எதிர்த்து திரு பிரேமதாசாவின் வழக்கறிஞர் பூர்வாங்க ஆட்சேபணை கிளப்பினார். 1989 மே 29ஆம் தேதி உயர்நீதிமன்றம் அதனை நிராகரித்ததைத் தொடர்ந்து ஜுன் 19ஆம் தேதி மனுமீதான விசாரணை ஆரம்பித்தது. 527 தினங்கள் தொடர்ந்த விசாரணைகளில் 977 பேர் சாட்சியமளித்தனர். 27 ஆயிரம் பக்கங்களைப் பதிவேடு கொண்டிருந்தது.

நாடளாவிய வன்செயல்கள், சுமார் 23 லட்சம் மக்கள் வாக்களிக்க முடியாதபடி தடுத்ததாகவும் இவ்வெண்ணிக்கை திரு பிரேமதாசாவின் அதிகப்படி வாக்கைவிட 7 மடங்கு அதிகமானவை என்றும் திருமதி சிறிமாவோ ஆட்சேப மனுவில் தெரிவித்திருந்தார்.

திரு பிரேமதாசாவின் சிரேஷ்ட வழக்கறிஞரான திரு கே.என்.சொக்ஸி 52 தினங்கள் வாதிட்டிருந்தார். திருமதி சிறிமாவோவின் வழக்கறிஞர் திரு எச்.எல்.டி சில்வா 8 தினங்கள் மட்டுமே இவ்வழக்கில் வாதிட்டார்.

## ஆனி மாத விரதங்கள்

**சதுர்த்தி விரதம். ஆனிமீ 19ம் நாள் (3.7.92) வெள்ளிக்கிழமை**

மாதந்தோறும் வரும் விரதங்களில் சதுர்த்தி விரதமும் ஒன்று. இந்த விரதம் விநாயகப் பெருமானுக்குரியது. இந்த விரதம் இருபத்தியொரு வருடம் இருப்பது நன்று. இயலாதவர்கள் ஏழு வருடம் இருக்கலாம் அல்லது இருபத்தொன்றுக்குக் குறையாமல் மாத சதுர்த்தி விரதமிருந்து அதை அடுத்து வரும் ஆவணிச்சதுர்த்தியில் நிறைவு செய்யலாம். அன்றைய தினம் ஆலயம் சென்று விநாயக வழிபாடு செய்யவும்.

**ஆனி உத்தர விரதம். ஆனிமீ 22ம் நாள் (6.7.92) திங்கட்கிழமை**

உத்தர நட்சத்திரம் நடராஜப்பெருமானின் பெருநாள். வருடத்தில் வரும் ஆறு நடேசர் அபிஷேகங்களில் இதுவும் ஒன்று. விரதம் இருந்து சிவவழிபாடு செய்ய வேண்டியது.

## பொன்விழா ஆண்டில் வெள்ளையனே வெளியேறு இயக்கம்

(புதுடில்லி)

இந்திய விடுதலைக்கு வழிசமைத்த வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் பொன்விழா இந்தியா முழுவதும் கொண்டாடப்படவிருக்கிறது.

நாடு முழுவதையும் ஒருங்கிணைத்து ஐந்து ஆண்டுகளாக நிகழ்திய தீவிர கடைசி கட்ட போராட்டங்களில் 1947 ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்தியா சுதந்திரத்தைப் பெற்றது. இந்திய தேசிய காங்கிரஸ் அதன் பம்பாய் மாநாட்டில் 1942 ஆகஸ்ட் 9 ஆம் தேதி வெள்ளையனே வெளியேறு தீர்மானத்தை நிறைவேற்றியது.

பொன்விழா அமைப்புக்குழு அதன் தலைவர் பிரதமர் திரு.பி.வி. நரசிம்மராவ் தலைமையில் கூடியபோது 1993 ஆகஸ்ட் 9 ஆம் தேதிவரை ஓராண்டு

காலத்துக்கு இவ்விழாவைக் கொண்டாடுவதற்கு தீர்மானித்துள்ளது. மத்திய மாநில அரசு மட்டங்களில் இவ்வைபவங்கள் நடைபெறும்.

# பிரபாகரனை ஒப்படைக்க இந்தியா கோரவில்லை!

(கொழும்பு நிருபர்)


ராஜிவ் காந்தி கொலைவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனையோ அல்லது வேறெவரையுமோ இந்தியாவுக்கு ஒப்படைக்கும் சம்பிரதாயமான கோரிக்கை எதனையும் இந்தியா விடுக்கவில்லை என்று இந்திய பத்திரிகைச் செய்திகளுக்கு வெளிநாட்டு அமைச்சு மறுப்பு தெரிவித்துள்ளது. அத்துடன், இந்திய மத்திய புலனாய்வுத் துறையினருக்கு இலங்கை அரசு அநுமதி மறுத்ததாக வெளியான செய்திகளையும் அது மறுத்துள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் இவர்களை ஒப்படைப்பது தொடர்பான விவகாரங்கள் பற்றிப் பேசுவதற்கு புலனாய்வுத்துறையினரின் வருகை குறித்து ஒரு கோரிக்கையை மட்டுமே விடுத்ததாக அமைச்சு அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது. வெளிநாட்டு அரசாங்கமொன்று இத்தகைய ஒப்படைத்தலுக்கு கோரும்போது அதற்கான சாட்சியங்களின் அடிப்படையில் இலங்கை நீதிமன்றத்தில் அதனைச் சமர்ப்பிக்கலாமா என்பது பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு சட்ட ஆலோசகர்கள் அறிவிப்பார்கள் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை ராஜிவ் காந்தி வழக்கு தொடர்பாக இந்திய அதிகாரிகளுடனும் இலங்கைக்கு வந்த புலனாய்வுத் துறையினருடனும் இலங்கை நெருக்கமாக ஒத்துழைத்தே வந்திருப்பதாகவும் மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை இந்திய பொலீசைச் சேர்ந்த 4 பேர்குழு ஒன்று ராஜிவ் காந்தி கொலை தொடர்பான விசாரணைகளைத் தொடர்வதற்காக பத்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த திங்களன்று கொழும்பு வந்துள்ளது. இக்குழு இலங்கை அரசின் பாதுகாப்பிலுள்ள சந்தேக புலி தீவிரவாதிகளிடமிருந்து புதிய வாக்குமூலங்களைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்



திரு.ஞானராசா இராசகுமார்

நெடுந்தீவு காலஞ்சென்ற திரு .திருமதி ஞானராசா (காந்தி மாஸ்டர்) தம்பதிகளின் மூத்தபுதல்வரான திரு இராசகுமார் அவர்கள் (கட்டட பொறியியலாளர்) 25.06.92 இல் லண்டனில் காலமானார். இவர் சரோஜினிதேவி(கணக்காளர்)யின் அன்புக் கணவரும், லாவண்யா, பேபி இராசகுமார் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், பாஸ்கரகுமார் (நோர்வே), குமுதினி(கனடா), சுலோஜினி(கனடா), கேதீஸ்வரகுமார் (கனடா), ராகினி(லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரரும், கசில்டா, சண்முகரத்தினம், யோகநாதன், பாலகிருஷ்ணன் ஆகியோரதும், கனடாவைச் சேர்ந்த சிவலோகநாதன்,கணேசபிள்ளை, ஸ்கந்தராஜா ஆகியோரதும் அன்புமைத்துனரும் திரு திருமதி சோமசுந்தரம் தம்பதிகளின் (கனடா) அன்பு மருமகனுமாவார்.

ஈமக்கிரியைகள் 02.07.92 வியாழக்கிழமை நடைபெற்று Hither Green மயானத்தில் அவரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. நண்பர்கள், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், ஏற்கனவே இத்துயரில் நேரிலும் தொலைத் தொடர்புகள் மூலமும் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

33, Castell House,
Deptfordchurch Street,
London SE8 4SD
Telephone/Fax:081-691-7178

THAMPA
SOLICITORS
16 Welbeck Road, West Harrow
Middx HA2 ORW Tel: 081 422 8248
* CONVEYANCING * LITIGATION
* IMMIGRATION MATTERS * LAND LORD & TENANT
* LIQUOR LICENSING * PERSONAL INJURY
* WILLS & PROBATE * MATRIMONIAL MATTERS
LEGAL AID WORK UNDERTAKEN



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மதுரை மாநாட்டில் முதல்வருக்கு வெள்ளி சிம்மாசனம்!

(மதுரை)

மதுரையில் அ.தி.மு.க மாநாடு பிரம்மாண்டமான வகையில் நடந்தது. இந்தியாவிலேயே எந்த அரசியல் கட்சியும் நடத்தி காட்டாத வகையில் அ.தி.மு.க வின் இந்த இரண்டு நாள் மாநாடு நடந்தது. கடந்த ஞாயிறு பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்கிய ஊர்வலம் மறுநாள் காலை வரை நடந்தது. விடிகாலை 4.30 மணி வரை மாநாட்டு மேடையில் முதல்வர் ஜெயலலிதா சோர்வின்றி நின்று பேரணியை பார்த்தார்.

அலை அலையாக கட்டுக்கடங்காமல் கூட்டம் நெருக்கி தள்ளியது. பேரணியில் வந்தவர்கள் ஜெயலலிதா நிற்கும் மேடையின் அருகே வந்ததும், மேடையை நோக்கி போக முயன்றனர். இதனால் பேரணி முன்னேறி செல்வதில் சிக்கல் ஏற்பட்டது. உடனே ஜெயலலிதா எழுந்து, "உடன் பிறப்புகளே, தாய்மார்களே, வாழ வைக்கும் தெய்வங்களே உங்களுக்கு பின்னால் மனித ஜீவநதி போல மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே விரைவாக சென்று ரேஸ் கோர்ஸ் திடலை அடையுங்கள்" என்று கூறினார். இதைக் கேட்டதும், தொண்டர்கள் உற்சாக மிகுதியுடன் விரைவாக பேரணியில் சென்றனர். மதுரைக்குள் வரும் எல்லா வழி தடங்கலிலும் லாரிகளும் வாகனங்களும் சாரிசாரியாக நின்றிருந்தன. பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

போராட்டம் என்ற பெயரில் பொது வாழ்வின் அமைதியை குலைக்க தி.மு.க., பா.ம.க. போன்ற எதிர்க்கட்சிகள் செயல்படுவதை வன்மையாக கண்டிக்கிறோம்.

அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்தினால் அதனால் உண்டாகும் சேதங்களையும், நஷ்டத்தையும் சம்பந்தப்பட்ட கட்சியே ஏற்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டதால் இப்போது அது போன்ற சேத இழப்புகள் ஏற்படவில்லை. இதற்காக தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம்.

89ம் ஆண்டு தேர்தலில் சந்தர்ப்பவசத்தால் கருணாநிதி தலைமையில் தமிழகத்தில் ஆட்சி அமைந்தது. பொறுப்பற்ற முறையிலும், தாய் நாட்டை காட்டிக் கொடுக்கும் வகையிலும் கருணாநிதி நிர்வாகத்தை நடத்தியதால் வெளிநாட்டு பயங்கரவாதிகள் தமிழகத்திற்குள் ஊடுருவினர். பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் தமிழ் நாட்டை துண்டாடவும் திட்டம் தீட்டினர். ஆனால், ஜெயலலிதா ஆட்சி அமைத்த ஆறு மாதத்திற்குள் பிரிவினைவாதிகள் ஒடுக்கி இந்தியாவின் இறையாண்மையையும், தமிழ் நாட்டின் மானத்தையும் காத்தார். அதற்கு நன்றி செலுத்துகிறோம்.

### காவிரி பிரச்னை:

காவிரி பிரச்னையில் உறுதியான நிலை எடுத்த முதல்வரின் செயலுக்கு பாராட்டு தெரிவிக்கிறோம். தமிழ்நாட்டில் மத்திய பல்கலைக் கழகம் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்க வேண்டும். மதுரையில் ஹைகோட் கிளை ஒன்றை நிறுவ வேண்டும், சட்டசபைக்கும், கோர்ட்டுக்கும் இடையே எழும் பிரச்னையை தீர்க்க அரசியல் சட்ட திருத்தம் கொண்டு வரப்படவேண்டும் என்பன உட்பட 36 தீர்மானங்கள் இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன .மாநாட்டின் நிறைவாக தமிழக முதல்வர் ஜெயலலிதா நிறைவுரை ஆற்றினார்.

அலைபோல் மாநாட்டில் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் முதல்வர் பேச்சைக் கேட்டு அவ்வப்போது கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

முன்னதாக வெள்ளிச் சிம்மாசனம் உட்பட பல அரிய பரிசுகளை அ.தி.மு.க. சார்பில் முதல்வருக்கு வழங்கப்பட்டன.

சித்திரைத் திருவிழா கூட்டத்தைப் போல மூன்று மடங்கு கூட்டத்தை ஒருசேர மதுரையில் பார்த்து மக்கள் அதிசயித்தனர். அவ்வாறு காணாத அளவில், அலைகடலென கூட்டம் வந்தும் எந்த வித அசம்பாவிதமும் நடக்காதது குறிப்பிடத்தக்கது.



### கட்–அவுட்

மதுரையில் 200 இடங்களில் ஜெயலலிதாவின் 'கட்–அவுட்' வைக்கப்பட்டுள்ளது. ஒரு 'கட்–அவுட்'டுக்கு குறைந்த பட்சம் 15ஆயிரம் ரூபாய் செலவானதாக கூறப்படுகிறது. ஆக 200 'கட்–அவுட்'களுக்கு 30 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இதே போன்று 200 அடி தூரத்திற்கு ஒன்று வீதம் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

### துணை நடிகைகள்

அ.தி.மு.க. மாநாட்டில் வெள்ளைப் புடவை, வெள்ளை ரவிக்கை அணிந்த பெண்கள் அ.தி.மு.க. கொடியுடன் அணிவகுத்துச் சென்றனர்.

பதவி பறிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் இரண்டாவது நாள் அவர் மாநாட்டு மேடைக்கு வந்தார்.ஆனால் முன்னாள் அமைச்சரான ராசாராம் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தார்.

மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் ஜெயலலிதா கலந்து கொள்வதால் வெள்ளிக்கிழமை "ரிலீஸ்" ஆன ரஜனிகாந் நடித்த படத்தின் சுவரொட்டிகளை ஒட்ட போலீசார் தடை விதித்தனர். ஏற்கனவே ஒட்டப்பட்ட சுவரொட்டிகளையும் கிழித்து எறிந்தனர்.

மதுரையில் அ.தி.மு.க. வினரால் ஓட்டல் ஒன்று சூறையாடப்பட்டது. இது தொடர்பாக நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் 10 பேர் காயம் அடைந்தனர்.

மதுரை அ.தி.மு.க. மாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள திராவிட வரலாறு கூறும் கண்காட்சியில் சினிமா படம் ஒன்றுக்காக ஜெயலலிதா பாட்டுப்பாடியபோது எடுத்த படம் அவரது பிறந்தநாளின் போது தாயார் சந்தியா அவருக்கு முத்தம் கொடுத்தபோது எடுத்த படம் காஷ்மீரில் சினிமா படப்பிடிப்பின் போது ஜெயலலிதாவை எம்.ஜி.ஆர். போட்டோ பிடித்தபோது எடுத்தபடம் ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன. இந்தப் படங்களுக்கும் திராவிட இயக்க வரலாற்றுக்கும் என்ன சம்பந்தம் எனக் கேட்டு பிரபல ஆங்கில நாளேடான இந்தியன் எக்ஸ்பிரஸ் கிண்டல் செய்துள்ளது.

அ.தி.மு.க. வரலாற்றில் 1977ல் எம்.ஜி.ஆர்.முதலமைச்சர் பொறுப்பை ஏற்றது ஒரு திருப்புமுனை ஆகும். ஆனால் அவர் முதல்வராகப் பதவி ஏற்றது குறித்து ஒரு போட்டோ கூடக் கண்காட்சியில் இடம் பெறவில்லை.

ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாபத்தின் காரணமாகத்தான் கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. மகத்தான வெற்றியைப் பெற்றது என்று கூறுவது சரியல்ல என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

அ.தி.மு.க. மாநாட்டில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ராஜீவ் காந்தி மரணமடையாதிருந்தாலும் இதே வெற்றியை அ.தி.மு.க. பெற்றிருக்க முடியும். ராஜீவ் காந்தி மீது எனக்கு அளப்பரிய மரியாதையும், அன்பும் உண்டு. அவர் இறந்திருக்கக் கூடாது என்று எண்ணுகிறேன். எனினும், அவரது மரணம் தான் எங்கள் வெற்றிக்குக் காரணம் என்று கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவ்வாறு கூறுபவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1989–ம் ஆண்டில் நடைபெற்ற மக்களவைத் தேர்தலின்போது புதுவை உள்பட மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 39–ல் வெற்றி பெற்றோம். அப்போது யாருடைய மரணத்தாலும் அனுதாபம் ஏற்படவில்லை.

1989–ம் ஆண்டு மக்களவைத் தேர்தலிலும் சரி, 1991–ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் சரி தமிழக வாக்காளர்கள் மத்தியில் இருந்த ஒரே உணர்வு எனக்கு தீங்கிழைத்துக் கொடுமைப்படுத்தியவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்பது தான்.

அந்த காலகட்டத்தில், தமிழக மக்கள் எம்.ஜி.ஆரின் பொற்கால ஆட்சியை மீண்டும் அமைக்க முடிவுசெய்திருந்தனர். அந்த முடிவை யாராலும் தடுத்திருக்க முடியாது.

### 21–ம் நூற்றாண்டுக்கு....

அ.தி.மு.க. மாநாட்டில் மக்கள் சக்தி திரண்டதைப் பார்க்கும்போது, 21–ம் நூற்றாண்டுக்கு மக்களை அழைத்துச் செல்லும் பெரும் பொறுப்பைத்தான் பெற்றதாகத் தெரிவதாக முதல்வர் ஜெயலலிதா கூறினார்.

"இந்த, மாநாட்டின் வெற்றி பெரியார், அண்ணா எம்.ஜி.ஆரின் வெற்றியாகும். முழு வெற்றியும் ஏராளமாக இங்கு கூடியுள்ள தொண்டர்களையுமே சாரும்" என உரத்த குரலில் அவர் தெரிவித்தார்.

"பெரியார், அண்ணா, எம்.ஜி.ஆர். வகுத்த பாதையில் அ.தி.மு.க. வெற்றி நடைபோட்டு வருகிறது. தமிழகத்தின் அ.தி.மு.க. ஆட்சியை எம்.ஜி.ஆருக்குக் காணிக்கையாகப் படைக்கிறேன்.

### எம்.ஜி.ஆர். விட்டுச் சென்ற சொத்துகள்

அ.தி.மு.க.விற்காக புதுச்சேரியில் ரூ.20 லட்சம் மதிப்பில் வசதியான கட்டடம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது என்றும் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்ததார்.

### ஜெயலலிதாவின் காலை தொட்டு வணங்கி பேசினர்.

மாநாட்டில் எம்.ஜி.ஆரின் பெயர் உச்சரிக்கப்பட்ட போதெல்லாம் மாநாட்டு அரங்கில் பலத்த கரவொலி எழுந்தது. முதல்வர் ஜெயலலிதாவும், மாநாட்டில் பேசியவர்களும் எம்.ஜி.ஆரின் பெயரையோ, அவரைப் பற்றியோ, அவரது சாதனையைப் பற்றியோ குறிப்பிட்ட போதெல்லாம் பலத்த கரவொலி எழுந்தது.

ஜெயலலிதாவைத் தவிர மற்றவர்கள் பேசும்போது, எம்.ஜி.ஆரைப் பற்றி புகழ்ந்து பேசவில்லை. மாறாக ஜெயலலிதாவை எம்.ஜி.ஆருக்கும் மேலாக புகழ்ந்து பேசினார்கள். ஒரு சிலர் தமிழ்த்தாய், மீனாட்சி அம்மன், ஆதிபராசக்தியையும் விட ஜெயலலிதாவை உயர்த்தி, பாராட்டிப் புகழ்ந்தனர்.

மாநாட்டில் பேசியவர்களில் பெரும்பாலானோர் தாங்கள் பேசத் துவங்குவதற்கு முன்பாக முதல்வரின் கால்களைத் தொட்டு வணங்கினர்.

### கருணாநிதி இல்லாத திராவிடர் வரலாறு

பிளவுபடாத அ.தி.மு.க.வில் ஜெயலலிதா ஆதரவு அணிக்குத் தலைமை வகித்த முன்னாள் அமைச்சர் எஸ்.திருநாவுக்கரசு இடம் பெற்றுள்ள சில படங்கள் கூட கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. ஆனால் முன்னாள் முதல்வர் கருணாநிதி இடம் பெற்றுள்ள ஒரு படம்கூட (திராவிடர் இயக்க வரலாறு கூறும் கண்காட்சியில்) இடம் பெறவில்லை.

மதுரை மாநாட்டுக்கு அரசு பஸ்களில் அ.தி.மு.க.வினர் ஓசிப்பயணம் சென்றனர். ஏராளமான பஸ்கள் மாநாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டதால் பொது மக்கள் அவதி அடைந்தனர்.

### போலீசார் விநியோகம்

சசிகலாவின் கணவர் நடராஜன் நடத்தும் தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று மதுரை மாநாட்டில் போலீசாரால் விநியோகம் செய்யப்பட்டது. முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா. இவருடைய கணவர் நடராஜன் தமிழ் வார ஏடு ஒன்று நடத்துகிறார்.

மாநாட்டுக்கு வந்த அ.தி.மு.க. வினருக்கு தேவையான உணவுப் பொட்டலங்கள்போலீசாரால் வழங்கப்பட்டது.

### 200 தற்காலிக பிராந்திக் கடைகள்

மாநாட்டுப் பேரணியை ஜெயலலிதா பார்வையிடுவதற்காக தல்லாகுளம் தந்தி அலுவலகம் அருகே எழுப்பப்பட்டு இருந்த தனிக் கட்டிடத்துக்குப் பின்னால் 200 பிராந்திக் கடைகள் தற்காலிகமாகத் திறக்கப்பட்டிருந்தன.

### 16 பேர் காயம்

மதுரையில் மாநாடு நடைபெற்ற ரேஸ்கோர்ஸ் மைதானம் அருகே வைக்கப்பட்டிருந்த ஜெயலலிதாவின் ராட்சத கட்–அவுட் நேற்று காலை சரிந்து விழுந்ததில் பதினைந்து பேர் படுகாயமடைந்தனர்.

### கின்னசில் இடம்பெறும் ஊர்வலம்

மதுரையில் நடைபெற்ற அ.தி.மு.க. வீர வரலாறு வெற்றி மாநாட்டு பேரணி கின்னசில் ( உலக சாதனை புத்தகம்) இடம் பெறும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்த பேரணியை முதல்வர் ஜெயலலிதா 14 மணி நேரம் உட்கார்ந்து பார்த்தார்.

அமைச்சர்கள் செங்கோட்டையன், அழகு திருநாவுக்கரசு, கண்ணப்பன் ஆகியோர் நிருபர்களிடம் கூறியதாவது:

"நேற்று (ஞாயிற்றுக் கிழமை) நடந்த ஊர்வலம் "கின்னஸ்" சாதனையில் இடம்பெறப் போகிறது. ஊர்வலத்தை மதியம் 2.30 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை 14 மணிநேரம் முதல்வர் உட்கார்ந்து பார்த்தார். அதிகாலை 4.30க்கு மேலும் 23 கி.மீ தூரத்துக்கு வாகனங்கள் நின்று கொண்டிருந்தன.அதற்கு மேலும், முதல்வர் பார்க்க விருப்பப்பட்டார்.

ஆனால் மறுநாள் காலையிலும் மாலையிலும் மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டி இருந்ததால்


( 2ம் பக்கம் பார்க்க )





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஹர்ஷத் மேத்தா விவகாரம்:

# இந்தியா வளரும் நாடு அல்லவா!

கல்யாணப் பத்திரிகை கருமாதிப் பத்திரிகை தவிர அனைத்துப் பத்திரிகைகளிலும் இப்பொழுது அடிபடும் பெயர் ஹர்ஷத் மேத்தா. இலக்கியப் பத்திரிகைகள், ஜோதிடப் பத்திரிகைகள் கூட இவரை விட்டுவைக்கவில்லை. வணிகப் பத்திரிகைகளோ பல கோணங்களில் இவரைப் பற்றி இதழ்தோறும் எழுதுகின்றன. சில மாதங்களுக்கு முன்பு உழைப்பால், புத்திசாலித்தனத்தால் உயர்ந்த பங்குத்தரகர் என்ற முறையில் பல ஏடுகளில் அட்டைப்படமானார். இன்றும் இடம் பெறுகிறார் 'ஊழல் நாயகன்' என்ற குற்றச்சாட்டுடன். இங்கே பள்ளிப் பிள்ளைகளுக்கெல்லாம் அவரது பெயர் தெரிந்திருக்கிறது - பங்குச் சந்தை பற்றி எதுவுமே தெரியாத போதிலும். பொது இடங்களில் அலுவலகங்களில் நான்கு பேர் கூடினால் ஹர்ஷத் மேத்தா பற்றியே பேச்சு. 'போபோர்ஸ்' போன இடம் தெரியவில்லை. அமிதாப் பச்சனும் பமீலா போர்டசும் கூட செய்திகளில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஹர்ஷத் மேத்தா பற்றியும் அவர் சாதித்துள்ளதாகக் கூறப்படும் வெற்றிகள், ஊழல்கள் பற்றி அல்ல, ஆனால் இந்த ஹர்ஷத் மேத்தா விவகாரம் கிளப்பியுள்ள சில சமூக, அரசியல் பிணைப்புகள், பத்திரிகைகளின் போக்கு, மக்களின் சமூக, அரசியல், பங்குச்சந்தை ஈடுபாடுகள் பற்றி சில புதிய கோணங்களைப் பார்ப்போம்.

சென்ற வருடம் இதே காலகட்டத்தில் ஹர்ஷத் மேத்தா, அவரது சகோதரர், வேறுசிலர் வணிக இதழ்களின் முகப்புப்படக் கட்டுரை நாயகர்கள் ஆனார்கள். வணிக ஏடுகள் அவர்களது மாளிகை, வாகனங்கள், அலுவலகங்கள் பற்றி வியந்து வியந்து எழுதித்தள்ளின. ஒரே சமயத்தில் எல்லா வணிக ஏடுகளும் இப்படி எழுதியதால் பல பொது ஏடுகள் அதே செய்திகளை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்து 'ஆதாரம் இது என்று சொல்லியும் சொல்லாமலும் வெளியிட்டன. 'அட அவரது கார் வெளிநாட்டுக் கார், விலை 45 லட்சம்; மொத்தம் 29 கார்கள் வைத்திருக்கிறார்' என்று எழுதின. மக்கள் மூக்கில் விரலை வைத்தார்கள். தன் முன்னேற்றம் பற்றி ஹர்ஷத் மேத்தா என்ன சொன்னாரோ அதை மட்டுமே பத்திரிகைகள் எழுதின.

புலனாய்வுச் செய்திகள் எழுதுவதற்கென்றே பிறப்பெடுத்துள்ளதாகக் கூறிக்கொள்ளும் இதழ்களும் பத்திரிகையாளர்களும அவர் எப்படி இவ்வளவு சொத்துக்கள் குவித்தார், வழிவகைகள் என்ன, அவை நியாயமானவையா என்றெல்லாம் அறிந்து கொள்ள, அறிவிக்க அக்கறை கொள்ளவில்லை.

ஹர்ஷத் மேத்தா பற்றிய அறிமுகச் செய்திப் புயலை அடுத்து வருமான வரித்துறையினர் அவர் வீட்டைச் சோதனை(ரெய்டு) செய்ததாகச் செய்தி வந்தது. அப்போதும் இந்த புரோக்கர் திலகத்தைப் பற்றிப் புலனாய்வுத் திலகங்கள் அலட்டிக் கொள்ளவில்லை. எங்கோ எப்படியோ வங்கிகளுக்கிடையேயான அரசுப் பத்திரிகைகள் பரிமாற்றம் பற்றி விபரங்கள் இடிக்கின்றன; கண்க்கு ஒத்துவரவில்லை என்றதும் விவகாரம் வெளியே தலைகாட்டியது. அப்புறம் எழுதத் தொடங்கி விட்டார்கள். ஆனால் இன்னமும் ஹர்ஷத் மேத்தா விவகாரம் என்பது ஐந்து குருடர்கள் முழுமையாக உணர்ந்து கொள்ளாத, உணர்த்தாத கதையே!

'ஹர்ஷத் மேத்தா' பிரச்னை உச்சகட்டத்தை அடைந்தபோது பங்குச் சந்தை பற்றித் தெளிவாகத் தெரிந்தவரும், தேசீய வீட்டு வசதி வங்கியின் தலைவருமான மனோஹர் பெர்வாணி மர்மமாக இறந்து போனாரே, அவரைப் பற்றி ஏன் பத்திரிகைகள், குறிப்பாக வணிகப் பத்திரிகைகள் அதிகம் எழுதவில்லை? இங்கே முன்னாள் டிஜிபி துரை திடீர் என்று

நமது சென்னை நிருபர்

மரணமடைந்ததும் அரசியல் பத்திரிகைகள் சந்தேகங்களைக் கிளப்பினவே; ஏன் பெர்வாணி விஷயத்தில் பல பத்திரிகைகள் மௌனமாக இருக்கின்றன? யாருக்கு யாருடன் கூட்டு? என் ஒருவரும் வாய் திறக்கவில்லை?

நமது பத்திரிகைகளுக்குப் பரபரப்பான செய்திகள் வேண்டும். சாதாரணச் செய்தியாக இருந்தாலும் அதற்குப் பரபரப்பு என்ற ஊட்டச் சத்து ஊட்டியே பழக்கம். ஒரே மாதிரியான, யந்திரகதியில் உள்ள அன்றாட வாழ்க்கையிலிருந்து விடுபட்டு உடல் அளவில் வெளியிடம் செல்ல முடியாத மக்களுக்கு இந்த பரபரப்புச் செய்திகள் சுவையான மனமாற்றம் தருகின்றன-திரைப்படங்களைப் போல.

இதுவரை அரசியல்வாதிகளுக்கும் திரைப்பட நட்சத்திரங்களுக்கும் மட்டுமே கிடைத்து வந்த இந்த 'வம்புப் புகழ்' இப்பொழுது பங்குச்சந்தைப் பெரும்புள்ளிகளையும் சூழ்ந்திருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் பங்குச்சந்தை பற்றி மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் மக்களுக்குத் தகவல் அறிவு இப்பொழுது நிறைய போதிக்கப்படுகிறது என்பதே.

ஏதோ இப்படி ஒரு ஊழலைச் சாக்கிட்டாவது மக்களின் தகவல் பசி அரசியல், திரைத்துறைகளிலிருந்து திரும்பினால் சரி என்று நாம் மகிழ்ந்து போய்விட முடியாது. முதலில் ஹர்ஷத் மேத்தா என்ற தனிநபரைச் சுற்றி வீசப்பட்ட குற்றவளையப் பாசக்கயிறு சில பெரிய வங்கிகளின் தலைவர்கள், உயர் அதிகாரிகளையும் பிணைத்திருக்கிறது. அடுத்த சுற்றில் சில அரசியல்வாதிகளும் அகப்படலாம். அப்பொழுது மேலும் ருசிகரமான தகவல்கள் வெளிவந்து அடுத்த தேர்தலுக்குக் காரணமும் தீனியும் ஆகலாம்.

இப்போ 55 வயதைக் கடந்தவர்கள் மட்டுமே நினைவேட்டில் புரட்டிப் பார்க்கக்கூடிய 'ஹரிதாஸ் முந்த்ரா' விவகாரம் பத்திரிகைகளில் மறு அவதாரம் எடுத்திருக்கிறது.

'அட, இன்னமும் இவர் சாகவில்லையா?' என்று பலரது புருவங்களை உயர்த்த வைத்திருக்கிறார் முந்த்ரா. பிணத்தைத் தோண்டியெடுப்பது போல சில பத்திரிகைகள் முந்த்ரா விவகார வரலாற்றுப் பின்னணியையும் தருகின்றன. முதலில் ஒரு பத்திரிகை; பிறகு அதைப் பல பத்திரிகைகள் நகலெடுக்கின்றன. பாவம், முந்த்ரா! தானே நடந்ததை எல்லாம் மறந்து வாழ்வின் மாலைப் பொழுதில் இருப்பவர்; காலம் கெட்ட காலத்தில், தான் எந்த விதத்திலும் சம்பந்தப்படாத ஒரு விவகாரத்தில் அவர் மறுமுறை பெறும் நினைவூட்டல் அபகீர்த்தி இது.

அன்றும் அரசியல்வாதிகள், நிதி நிறுவனங்கள் அந்த ஊழலில் தொடர்பு; இன்றும் அப்படியே. காலதேச வர்த்தமானங்களை ஒட்டி ஊழலில் அளவு வேறுபடுகிறது. பணவீக்கம், அரசிய ல்வாதிகளின் தொகை உயர்வு, வங்கிகள் தேசீயமயம் என்ற வளர்ச் சிக்கேற்ப ஊழலில், வளர்ச்சியும் இல்லாவிட்டால் இந்தியாவை எப்படி 'வளரும் நாடு'என்பது?

**பணவீக்கம், அரசியல்வாதிகளின் தொகை உயர்வு, வங்கிகள் தேசீயமயம் என்ற வளர்ச்சிக்கேற்ப ஊழலில், வளர்ச்சியும் இல்லாவிட்டால் இந்தியாவை எப்படி 'வளரும் நாடு'என்பது?**



மேற்கு லண்டன் தமிழ்ப்பாடசாலை (வெம்பிளி)யின் முதுவேனில் விளையாட்டுப்போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெம்பிளி உயர் பாடசாலையில் நடைபெற்றபோது மகளிர் பங்கு கொண்ட கயிறிழுத்தல் போட்டியில் ஒரு கட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலக அரங்கில்
## இவ்வார அரசியல் கள கண்ணோட்டம்

-விமல் சொக்கநாதன்-

# 'மகாராணி மெச்சிய மாட்டுப்பொண்ணு'

பிரிட்டிஷ் பேராசியார் மாட்சிமை தங்கிய எலிசபெத் மகாராணியாருக்கு இது சோதனைக்காலம். நாட்டிற்கே உதாரணமாகத்திகழ வேண்டிய அவரது குடும்பத்தில், பிரிட்டனின் முதல் குடும்பத்தில் கருவேப்பிலைக் கொத்து போல மூன்று ஆண் குழந்தைகள்; ஒரேயொரு பெண் குழந்தை, பெண் குழந்தை இளவரசி ஆனும், ஆண்களில் ஒன்று இளவரசர் ஆண்ருவும் விவாகரத்துக் கோரியிருக்க மற்ற ஆண் குழந்தை திருமணமே வேண்டாம் என்று அடம்பிடிக்க–மூத்த புதல்வர் சார்ள்ஸ் அவரது மனைவி டயானா இவர்களின் திருமண வாழ்விலும் சலிப்புத்தட்டி விட்டதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் சில வாரங்களாக தண்டோரா போட்டு வருகின்றன. நான்கு சுவர்களுக்குள் இருக்க வேண்டிய விஷயங்களை நாலுபக்க போஸ்டரில் அடித்து சந்தியில் ஒட்டாத குறையாக உளறிக்கொட்டியுள்ளன பிரிட்டிஷ் பத்திரிகைகள்.

இந்த உளறல்களுக்கு காரணம் "டயானா– அவரது உண்மைக்கதை!" என்ற நூல். ஆண்று மோர்ட்டன் என்ற ஒரு நிருபர் எழுதிய நூல்தான் இத்தனை சர்ச்சையையும் கிளப் பியிருக்கிறது. 'டயானா தற்கொலை செய்து கொள்ள 5 தடவை முயற்சி எடுத்திருக்கிறார். கணவரின் பாராமுகம் இதற்கு முக்கிய காரணம்' என்று இந்த நூல் சாடியிருக்கிறது. கமில்லா என்ற திருமணமான பெண்ணுடன் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் நேரத்தை அதிகமாக செலவிடுகிறார் என்றும், டயானா வைத்திருமணம் செய்த அன்று கூட கமில்லாவுக்கு ஒரு பரிசு அனுப்பி "என்றும் உந்தன் சார்ள்ஸ்" என்று எழுதியிருந்தார் என்றும் நூல் விபரிக்கிறது. டயானாவினதும் அவரது நெருங்கிய நண்பர்கள் தோழிகள் ஆகியோரின் உதவியுடனும் தான் இந்த நூல் எழுதப் பட்டது. டயானாவின் தனிப்பட்ட பிரத்தியேக ஆல்பத்திலிருந்து முன்னர் பிரசுரிக்கப்படாத புகைப்படங்களும் மோர்ட்டனுக்கு வழங்கப்பட்டதாக தெரிகிறது.

### யார் இந்த மோர்ட்டன்?

அரச குடும்பம் பற்றி கிசுகிசு மோப்பம் பிடிக்கும் றோயல் றிப்போட்டர் என்றால் யார்? டெயிலி ரெலிகிறாப் பத்திரிகையின் மாக்ஸ் ஹேஸ்ரிங்ஸ்சின் வார்த்தையில்:–"..... ஒரு விபச்சார விடுதியில் பியானோ வாசிக்கும் வேலை கூட உனக்கு கிடைக்கவில்லையா?... மனந்தளராதே! நீ றோயல் றிப்போர்டர் ஆக வந்து விடலாம்!." என்று கிண்டல் செய்திருக்கிறார் ஹேஸ்டிங்ஸ். ஆண்ரு மோர்டன் – தமக்கு ஒரு காலத்தில் இளவரசி டயானா மீது இரக்கம்–கிறுக்கம் மயக்கம் எல்லாமே இருந்ததாக தன் சகாக்களிடம் கூறியிருக்கிறார். இந்த புத்தக விற்பனை மூலம் அவர் கோடீஸ்வரர் ஆகி விடுவார். சன், சண்டே ரைம்ஸ் ஆகியன வெளியிடும் ருபேர்ட் மேடொக் நிறுவனம் மோர்ட்னுக்கு 2 1/2 லட்சம் பவுண்கள் கொடுத்து நூலின் சுருக்கத்தை வாராவாரம் வெளியிட்டு வருகிறார்கள். இங்கிலாந்தின் உயர்தர வழக்கறிஞர்கள் இந்த நூலை இப்போது ஆராய்ந்து வருகிறார்கள். அரச குடும்பத்திற்கு மான நஷ்டம் ஏற்படக்கூடிய விஷயங்கள் இருக்கின்றனவா என்று ஆராய் கிறார்கள்.



எது எவ்வாறாயினும் 'வரம்பு மீறிய பத்திரிகைச் சுதந்திரம் எவ்வளவு ஆபத்தானது என்பதற்கு டயானா–சார்ள்ஸ் கிசுகிசு ஒரு சிறந்த உதாரணமாகும். பிரிட்டிஷ் மக்கள் தமது சுதந்திரத்தை – தமது எழுத்து சுதந்திரத்தை தமது உயிரினும் மேலாக மதிக்கிறார்கள். ஆனால் பிரிட்டிஷ் பத்திரிகைகளோ பிரிட்டிஷ் மக்களின் ரசனையை மிக மட்டமாக கருதுகின்றன. நாள்தோறும் டயானா, சார்ள்ஸ், பேஜி, கமிலா இவர்களின் படங்கள் செய்திகள் அருவருப்பான விபரங்கள் வெளியாகாத "ஜனரஞ்சகப்" பத்திரிகைகள் இல்லை. உலக அழகியான டயானாவை விட்டு திருமணமான பெண்ணான கமில்லாவை இளவரசர் சார்ள்ஸ் நாடுவது ஏன்? "திருமணமான பெண்களை நான் விரும்புவதற்கு காரணம்– அவர்களை இலகுவாக கையாளலாம், பக்குவமாக கையாளலாம்!..." என்று டயானாவிடம் சொன்னாராம் முடிக்குரிய இளவரசர். மோர்ட்டனின் நூலில் வெளியான ஒரு பகுதி இது. இது உண்மையாக இருந்தாலும், கணவன் மனைவிக்குள் ஆயிரம் ரகசியங்கள் பேசப்படும்! அதை மோர்ட்டன் போன்றவர்கள் நூலாக வெளியிட்டு தலைக்குனிவு ஏற்படுத்துவதா?...

மூன்றாவது உலக நாடுகளில் காணப்படும் பத்திரிகைக் கட்டுப்பாடு (தணிக்கை அல்ல) பிரிட்டனிலும் வந்தால் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

மூன்றாவது உலக நாட்டிலிருந்து வந்த என்னைப்போலவே... பிரிட்டனின் அதிமேற்றிராணியார் மற்றும் பல பிரமுகர்களும் சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

காலம் கடந்த சிந்தனை!

'தமிழோசை' அச்சுக்குப் போகும் நேரத்தில் மோர்ட்டனின் நூலினால் அரச குடும்பத்தினுள் ஏற்பட்டுள்ள வாதப்பிரதிவாதங்கள், பிரிட்டிஷ் அரசியற்சாசன நெருக்கடி ஆகியன பற்றி செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

இளவரசன் ஆண்ரு, இளவரசி ஆன் ஆகியோரின் மணமுறிவுகள் வெறும் "கிசுகிசு"க்களே! மாறாக சார்ள்ஸ் – டயானா விவகாரமோ–பிரிட்டனின் எதிர்கால மன்னர் பற்றியது. எனவே இது வெறுமனே அரசகுடும்பம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல. இதுபற்றி மிகுந்த வேதனை கொண்டிருக்கும் பிரிட்டிஷ் பேரரசியார் தமக்கு நெருங்கிய சட்ட ஆலோசகர்களை வரவழைத்து ஆலோசனை கேட்டு வருகிறாராம்.

மணவாழ்வின் சிறு பிரச்சினைகளைத் தாங்க மாட்டாமல் பலதடவை தற்கொலை முயற்சிகளை மேற்கோண்ட டயானா மன்னரின் பக்கத்துணையாக அரியாசனம் ஏற தகுதியானவர் அல்லர் என்பது இப்போது பரவலாக உறுதியாகி வருகிறது.

பக்கத்துணையை விட்டுப் பிரிந்த ஒருவர் பிரித்தானிய மாமன்னராக செங்கோல்ஏந்த முடியுமா? எனவே இளவரசர் சார்ள்ஸ் மணிமுடிக்கான தமது உரிமையை இரண்டாவது வாரிசான (தமது புதல்வர் 10 வயதான) இளவரசர் வில்லியத்திடம் இப்போதே விட்டுக்கொடுத்து கௌரவமாக விலகினால் என்ன?

பிரிட்டிஷ் பேரரசியாருக்கு மனக்கவலையை ஏற்படுத்திய இந்த சந்ததியிலிருந்து யாருமே மகுடம் சூட்டாமல் மகாராணி ஓய்வு பெற்றதும் மகுடம் நேரடியாக அடுத்த சந்ததிக்கு போகட்டுமே?

இவையெல்லாம் இன்று கேட்கப்படும் கேள்விகள். மகாராணியார் இந்த ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாக பேசப்படுகிறது! சுருங்கச் சொன்னால் இளவரசர் சார்ள்ஸ்க்கு வரவேண்டிய பிரிட்டிஷ் மணிமுடியை தட்டி விடப்போவது பேரழகி டயானாவின் பொல்லாத போக்கா? பத்திரிகையாளர் ஆன்றூ மோர்ட்டனின் வம்புத்தனமான நூலா?

### பொஸ்னியாவின் பரிதாப நிலை

வல்லாதி வல்லரசு என்று கருதப்பட்ட மாபெரும் சோவியத் கூட்டமைப்பு உருக்குலைந்து, திக்குக்கு ஒன்றாக திசை திரும்ப ஆரம்பித்து ஒருவருடம் பூர்த்தியாகப்போகிறது. கிழக்கு ஜேர்மனி என்ற சொற்றொடர் அரசியல் அகராதியிலிருந்து மறைய ஆரம்பித்த கையோடு உலகின் கம்யூனிச நாடுகள் சரிய ஆரம்பித்தன. போலந்து, ருமேனியா, ஹங்கேரி இப்படி ஒரு நீண்ட பட்டியல்!

நான் கம்யூனிஸ்ட் அல்ல; முதலாளித்துவ ஆதரவாளனும் அல்ல. நான் "அணி சாராதவன்!" என்று முழங்கிக் கொண்டு 'நான் அலயின்ட்' அணிசேரா இயக்கத்தை ஆரம்பித்தார் அப்போதைய அரசியல் ஜாம்பவான்– யூகோஸ்லாவிய அதிபர் டீட்டோ..

உருவத்தால் உள்ளத்தால் பெரியவர்–மார்ஷல் டீட்டோ மறைந்த கையோடு யூகோஸ்லாவியா ஆட்டம் காண ஆரம்பித்தது. சோவியத்யூனியன் என்பது பல்வேறு சிறிய குடியரசுகளின் ஒரு கூட்டமைப்பு என்பது போல யூகோஸ்லாவியாவும் பல்வேறு சிறிய குடியரசுகள்–மொத்தம் 8 குடியரசுகளின் கூட்டமைப்பாக இருந்தது. ஆனால் சோவியத் குடியரசுகள் கழன்று தன்னாட்சிப்பிரகடனம் செய்தது போல யூகோஸ்லாவியாவில் செய்வது இலகுவாக இருக்கவில்லை. காரணம் யூகோஸ்லாவிய கூட்டமைப்பின் முக்கிய நாடு சேர்பியா. அங்கு 85 சதவிகிதமானவர்கள் சேர்பியர்கள்.

எஞ்சிய 7 நாடுகளிலும் சேர்பியர்கள் பெரும்பான்மையாக இல்லாவிட்டாலும் கணிசமான எண்ணிக்கையினர் இருந்தார்கள். எனவே அந்த நாடுகள் கூட்டமைப்பிலிருந்து விலகி சுயாட்சி, தன்னாதிக்கம் கொண்ட குடியரசுகளாக மாற முற்பட்டபோது ஆங்காங்கு வாழ்ந்த சேர்பியர்கள் கலகம் விளைவித்தார்கள். சேர்பிய அரசு அவர்களுக்கு உதவியது. படைகளை பீரங்கி வண்டிகளை அனுப்பி–சுயாட்சி கோரிக்கைகளை நசுக்கியது.

சில மாதங்களுக்கு முன் குறோஏஷியா என்ற முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசு தனிநாடாக பிரகடனம் செய்ய முற்பட்டபோது இது தான் நடந்தது. இப்போது கடந்த சில வாரங்களாக உலக மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கும் மற்ற நாடு பொஸ்னியா–ஹேர்ஸ்கோலினா சுருக்கமாகக் கூறின் பொஸ்னியா: அங்கு 44 சதவிகிதமானோர் முஸ்லீம்கள். சுமார் 30 சதவிகிதமானோர் சேர்பியர்கள். எஞ்சியோர் குறோற் மற்றும் இதர இனத்தவர்கள்.

பொஸ்னியா தனிநாடாக தன்னைப்பிரகடனம் செய்தகையோடு கலகம் ஆரம்பித்தது. இதுவரை சுமார் 12 ஆயிரம்பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கானோர் காணாமற் போயிருக்கிறார்கள். 10 லட்சம் மக்கள் தமது வீடுகளை உடமைகளை இழந்து அகதிகளாக்கப்பட்டிருக்கிறார்கள். காலை நேர உணவான பாண் (றொட்டி) வாங்குவதற்காக கடைவாசலில் நின்/ பொஸ்னிய மக்கள் மீது 3 குண்டுகள் பீரங்கி மூலம் வெடிக்கப்பட்டன. 25 பேர் கொல்லப்பட்டார்கள், 100 பேருக்கு காயம்பட்டது.

"இனச்சுத்திகரிப்பு" செய்யப் போகிறோம் என்று அறிவித்துவிட்டு சேர்பியர் அல்லாத மக்களின் கிராமங்களை வீடுகளை ஒட்டு மொத்தமாகத் தீக்கிரையாக்குகிறார்கள் சேர்பியர்கள்.

இந்தக் கலவரத்தில் சமரசம் பேச முற்பட்ட ஐரோப்பிய குடும்ப நாடுகள் மூக்கறுக்கப்பட்டு திரும்பி வந்தன. "உங்கள் வேண்டுகோளுக்கிணங்க எனது சேர்ப்பியப்படைகளைத் திருப்பி அழைத்து விட்டேன்! அங்குலாவும் படையினர் அல்லாத சாதாரண சேர்பியர் நடத்தும் கலவரங்களை நான் எப்படி அடக்குவது என்று கேட்கிறார்– 'ஹிட்லரின் அண்ணன் ' என்று கருதப்படக்கூடிய சேர்பிய அதிபர் சுலோபடான் மிலோசெவிக்!

பொஸ்னியாவில் கலவரங்கள் மையமாக நடக்கும் இடம் தலைநகரான 'சறயேவோ'. நீண்ட பல வாரங்களாக அழிமிதிக்கு உள்ளாகிவரும் இத்தலைநகரம் இன்று வெறிச்சோடிய ஒரு இடமாக காட்சியளிக்கிறது.. எப்போதோ எடுத்திருக்க வேண்டிய நடவடிக்கையை உலக நாடுகள் இப்போது எடுத்திருக்கின்றன. ஐ.நா.மன்றத்தில், பாதுகாப்பு கழகத்தில் சேர்பியாவுக்கு எதிராக 'ஏற்றுமதித்தடைகள்' அறிவிக்கப்பட்டன.

குவேத்தை ஈராக் கைப்பற்றியபோது ஓடிச் சென்று அபயக்கரம் கொடுத்த மேற்குலக நாடுகள், பொஸ்னியாவை இன்னும் தவிர்க்க விடுவது ஏன்? பொஸ்னியாவில் எண்ணெய் வளம் இல்லை கேந்திர முக்கியத்துவம் இல்லை என்பது ஒரு காரணமாக இருக்குமா? கணவனைப் போரில் பறிகொடுத்த பொஸ்னியப் பெண்கள், அன்புத் தந்தையைக் காணாமல் தவிக்கும் அனாதைக் குழந்தைகள் இதனை அறியமாட்டா!

அதனால்தானோ என்னவோ அந்த அப்பாவிப் பெண்களும் குழந்தைகளும்– கண்களை மறைக்கும் கண்ணீர்த்திரை ஊடாக வானத்தை அடிக்கடி அண்ணாந்து பார்க்கின்றன– அரக்கர்களிடமிருந்து சீதையை மீட்க வானரப்படை வந்தது போல– சேர்பிய அரக்கர்களிடமிருந்து தம்மை மீட்க– மேற்குலகின் வானூர்திப்படை வராதா என்று ஏக்கத்துடன் பார்க்கின்றன!.........

### சின்ன விரலும் பச்சை குத்தலும்

'யக்கூஸா' என்பது ஜப்பான் நாட்டின் பயங்கரமான குண்டர்கள் கும்பலின் பெயர்! கொலை கொள்ளை கப்பம் வாங்குதல் இந்த கும்பலின் 'தொழில்'. ஜப்பான் நாட்டின் மாபியா என்று கருதப்படும் இந்தக் கும்பலில் சேர விரும்புவோர் முதலில் தமது விசுவாசத்தைத் தெரிவிக்குமுகமாக சின்னவிரலை வெட்டி துண்டு போட்டு சமர்ப்பித்து விசுவாசப்பிரமாணம் மேற்கொள்ள வேண்டும்.

கொள்ளைக்கூட்டத்தை விட்டு வெளியேறி மனம் திருந்தி நல்ல மனிதனாக நடக்கவிரும்பும் மனிதன் என்ன செய்வான்?

ஒரு டாக்டரிடம் போய் தனக்கு ஒரு புதிய விரல் வைத்து விட முடியுமா என்று கேட்பாராம், தாம் 'மாஜி–திருடன்' என்று சமுதாயம் தன்னை அடையாளம் காணக்கூடாது என்பதற்காக!

டோக்யோ நகரில் 'விரல் தைக்கும்' ஒரு மருத்துவ நிபுணரிடம் மாஜி யக்கூஸா உறுப்பினர்கள் அடிக்கடி வருவதுண்டாம்.



அண்மையில் தமிழ் நாட்டில் நடந்த சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வருகிறது. முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு விசுவாசம் தெரிவித்து அவரது பெண் அமைச்சர் ஒருவரின் தலைமையில் சுமார் இரண்டாயிரம் பெண்கள் தமது உடலில் "பச்சை குத்தி" க் கொண்டார்களாம்.

இந்தியாவில் அதுவும் தமிழ்

19ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தத்துவ மயமான விநாயகர்



காஞ்சி காமகோடிபீடம் ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகள்

விநாயக மூர்த்தியிலுள்ள ஒவ்வொரு சின்ன சமாசாரத்தைக் கவனித் தாலும் அதில் நிறையத் தத்துவங்கள் இருக்கின்றன.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? விக்நேசுவரர், தம்அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, "உன் சிரசையே எனக்குப் பலி கொடு" என்று கேட்டு விட்டாராம். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணிஞல்தான் மகாகணபதிக்குப் பிரீதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்ற அறிகுறியாகத்தான், ஈசுவரனைப் போலவே மூன்றுகண்கள் உடைய தேங்காயைச் சிருஷ்டித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும்படியாக ஈசுவரன் அநுக்கிரகித்திருக்கிறார்.

சிதறு தேங்காய் என்று உடைக்கிற வழக்கம் தமிழ் தேசத்துக்கு மட்டுமே உரியது. இப்படிச்சிதறிய துண்டங்கள் யாருக்கு உரிமை என்றால் குழந்தைகளுக்குத்தான். இந்த உண்மை ஒரு குழந்தை மூலமாகத்தான் எனக்கே தெரிந்தது. அப்போது (1941) நான் நாகைப்பட்டினத்தில் சாதுர் மாஸ்ய விரதம் அநுஷ்டித்து வந்தேன். அங்கே



கோயிலில் பிள்ளையாருக்கு நிறையச் சிதறுகாய் போடுவது வழக்கம். காயை உடைக்கவே இடம் கொடுக்காத அளவுக்குக் குழந்தைகள் ஒரே நெரிசலாகச் சேர்ந்துவிடும். திபுதிபு என்று அவை ஓடி வருவதில் என்மேல் விழுந்துவிடப்போகின்றனவே என்று என்கூட வந்தவர்களுக்குப் பயம். அவர்கள் குழந்தைகளிடம் "இப்படிக்கூட்டம் போடாதீர்கள், விலகிப் போங்கள்" என்று கண்டித்தார்கள். அப்போது ஒரு பையன் டாண் என்று, "பிள்ளையாருக்குத் தேங்காய் போட்டுவிட்டு, அப்புறம் எங்களை இங்கே வராதீர்கள் என்று சொல்ல உங்களுக்கு என்ன பாத்தியதை இருக்கிறது? சிதறுகாய் போட்டால் அது எங்கள் பாத்தியதை தான். அதை எடுத்துக்கொள்ள நாங்கள் வரத்தான் செய்வோம்" என்றான். அவன் பேசிய ஜோர். அதிலிருந்த உறுதியைப் பார்த்தபோது தான் எனக்கே, 'வாஸ்தவம் தான், குழந்தை ஸ்வாமியின் பிரஸாதத்தில் குழந்தைகளுக்குத்தான் முழு பாத்தியத்தையும்' என்று தெரிந்தது.

அகங்கார மண்டையோட்டை உடைத்தால் உள்ளே அமிருத ரஸமாக இளநீர் இருப்பதை இந்தச் சிதறுகாய் உணர்த்துகிறது.

கணபதியைக்காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு, யானையின் தலை. பெரிய வயிறு. பெரிய உடம்பு. அவருக்கு ஸ்தூல காயர் என்ற ஒரு பெயர். மலைபோல் இருக்கிறார். ஆனாலும் அவர் சின்னக்குழந்தை! சரி, குழந்தைக்கு எது அழகு? குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறையச் சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம்கூட இளைக்கக்கூடாது. ஒரு சந்நியாசி நிறையச் சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந்தால் அது அவருக்கு அழகல்ல. வயசாகி விட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப்பது அழகா? குழந்தை என்றால் தொந்தியும் தொப்பையுமாகக் கொழுகொழுவென்று இருந்தால்தான் அழகு. நிறையச் சாப்பிடுவதுதான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதை இந்தக் குழந்தைச்சாமியே காட்டிக்கொண்டிருக்கிறார், கையில் மோதகத்தை வைத்துக்கொண்டு. இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர்விரோதமான சின்னஞ் சிறு ஆகிருதி உடையது மூஞ்சுறு. இதை அவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஸ்வாமிகளுக்காவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒரு பட்சி என்று வாகனம் இருக்கிறது.

இவரோ தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ, அத்தனைக்கு அத்தனை சின்னவாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். சுவாமி எதை வாகனமாக வைத்துக்கொண் டாலும்

## தேங்காய் உடைப்பதும் தோப்புக்கரணம் போடுவதும் ஏன்?

வாகனத் தினால் சுவாமிக்குக் கௌரவம் இல்லை. சுவாமியால் தான் வாகனத் துக்கும் கௌரவம். வாகனத்துக்குக் கௌரவம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி நெட்டிப்பிள் ளையார் மாதிரியாகக் கனம் இல்லாமல், இருக்கிறார். அதற்குச் சிரமம் இல்லாமல், ஆனல் அதற்கு மரியாதை, கௌரவம் எல்லாம் உண்டாகும்படியாகத் தம் உடம்பை வைத்துக்கொண்டிருக்கிறார். ஸ்தூல காயரான போதிலும், பக்தர்கள் இருதயத்தில் கனக்காமல் லேசாக இருப்பேன் என்று காட்டுகிறார்.

ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வோர் அங்கத்தில் அதிகக் கௌரவம் இருக்கும். சவுரிமான் (கவுரிமான்) என்று உண்டு. அதன் கௌரவம் வாலில். மயில் என்றால் அதற்குத் தோகை விசேஷம். தோகையை மயில் ஜாக்கிரதையாக ரட்சிக்கும். யானை எதை ரட்சிக்கும்? தன் தந்தத்தை தீட்டி வெள்ளைவெளேர் என்று வைத்திருக்கும். இந்தப் பிள்ளையார் என்கிற யானை என்ன பண்ணுகிறது என்றால், அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்து, அதனால் மகாபாரதத்தை எழுதிற்று. தன்அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும், தர்மத்தைச் சொல்கிற ஒன்றுதான் பெரிது என்பதை இவ்விதம் இந்த யானை காட்டியது. நியாயத்துக்காக, தர்மத்துக்காக, விந்தைக்காக எதையும் தியாகம் பண்ணவேண்டும் என்பதைத்தானே தந்தத்தைத் தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது. ஸ்வாமிக்குக் கருவி என்று தனியாக ஒன்றும் வேண்டியதில்லை. எதையும் கருவியாக அவர் நினைத்தால் உபயோகித்துக் கொள்வார் என்பதற்கும் இது உதாரணம். ஒரு சமயம் தந்தத்தாலேயே அசுரனைக் கொன்றார். அப்போதும் அது ஆயுதம். பாரதம் எழுதும் இப்போது அதுவே பேனா.

நமக்குக் பார்க்கப் பார்க்க அலுக்காத வஸ்துக்கள் சந்திரன், சமுத்திரம், யானை ஆகியன. இவற்றையெல்லாம் எத்தனை தடவை, எத்தனை நேரம் பார்த்துக்கொண்டிருந்தாலும், அலுப்புச் சலிப்பில்லாத ஆனந்தம் பொங்கும். அதனால்தான் குழந்தைஸ்வாமி தன்னைப் பார்க்கிற ஜனங்களுக்கு எல்லாம், பார்க்கப் பார்க்க ஆனந்தம் எப்போதும் பொங்கிக்கொண்டிருக்கும்படியாக யானை உருவத்தோடு இருக்கிறார். அது ஆனந்த தத்துவம்; ஆராத ஆசையின் தத்துவம். அவர் பிறந்ததே ஆனந்தத்தில். பண்டாசுரன் விக்னயந்திரங்களைப் போட்டு அம்பாளின் படை தன்னை நோக்கி வரமுடியாதபடி செய்தபோது, பரமேசுவரன் அவளை ஆனந்தமாகப் பார்த்தபோது, அவளும் ஆனந்தமாக இந்தப் பிள்ளையைப் பெற்றாள். அவர் விக்னயந்திரங்களை உடைத்து அம்மாவுக்கு சகாயம் செய்தார்.


அவர் பார்வதி பரமேஸ்வரர்களுக்குப் பிள்ளை, இந்த உலகத்துக்கே மூலத்திலிருந்து ஆவிர்ப்பவித்ததனால், அவரை நாம் "பிள்ளையார்", "பிள்ளையார்" என்றே விசேஷித்து அழைக்கிறோம்.

எந்த ஸ்வாமியை உபாஸிப்பதானாலும் முதலில் விநாயகருடைய அநுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால் தான் அந்தக் காரியம் விக்கினம் இல்லாமல் நடைபெறும். அவரையே முழுமுதற் கடவுளாக, பிரதான மூர்த்தியாக வைத்து உபாசிக்கிற மதத்துக்கு காணபத்தியம் என்று பெயர்.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறோமே, அதை நமக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தவர் மஹாவிஷ்ணுதான் என்று ஒருகதை இருக்கிறது. ஒரு சமயம் மஹாவிஷ்ணுவினுடைய சக்கரத்தை அவரது மருமானான பிள்ளையார் விளையாட்டாகப் பிடுங்கிக்கொண்டு தம் வாயில் போட்டுக் கொண்டுவிட்டாராம். பிள்ளை யாரிடமிருந்து திரும்பப் பிடுங்குவது முடியாது. அவர் மிகவும் பலம் உடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால், அவரைச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டு விடலாம் என்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டு விட்டார்.

"தோர்பி: கர்ணம்" என்பதே தோப்புக்கரணம் என்று மாறியது. "தோர்பி" என்றால் "கைகளினால்" என்று அர்த்தம். 'கர்ணம்' என்றால் காது. "தோர்பி: கர்ணம்" என்றால் கைகளால் காதைப் பிடித்துக்கொள்வது.

விக்நேசுவரருடைய அநுக்கிரகம் இருந்தால்தான் லோகத்தில் எந்தக் காரியமும் தடையின்றி நடக்கும் தடைகளை நீக்கிப் பூரண அநுக்கிரகம் செய்கிற அழகான குழந்தைத் தெய்வம் பிள்ளையார். அவரைப் பிரார்த்தித்து, பூஜை செய்து, நாம் விக்கினங்கள் இன்றி நல்வாழ்வு வாழ்வோமாக.



யாழ்பாணம் குருநகர் புனித யாகப்பர் பங்கைச் சேர்ந்த திரு திருமதி கிறகரி வெல்லம் கில்லறி தம்பதிகளின் புதல்வரான கில்லறி கிறகோரி கடந்த மாதம் 28ஆம் தேதி பாரிஸ் புனித சீர்–புனித யுலித்த தேவாலயத்தில் குருத்துவப்பட்டம் பெற்றார். அதி வண. மேற்றிராணியார் மிஷேல் முற்றெல் இவ்வைபவத்தை நிகழ்த்தினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

## காலத்தின் தேவை

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"
–திருமூலர் அருளிய திருமந்திரம் இது.

இந்த மந்திர வாக்குக்கு ஒரு வடிவமாகத் திகழ்ந்தவர் தனிநாயக அடிகளார். உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை அமைத்து, உலகளாவியரீதியிலே தமிழாராய்ச்சிக்கு கால்கோள் இட்டார்.

ஆராய்ச்சிக்கு அப்பால், அன்றாட வாழ்விலும் தமிழோசை உலகெலாம் பரவ வேண்டிய காலம் இன்று.

"ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்"–என்ற திருமூலரின் மற்றொரு மந்திரத்தையும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்றுப் பாடலடியையும் வாழ்வில் காண்கின்ற காலம். பிறிதொரு பக்கத்தில் வெளியாகியுள்ள உலகத்தமிழர் பற்றிய நூல் மதிப்புரை இதனை உணர்த்தும்.

ஆக, அப்படி அமைந்த ஒரு கால தேவையே 'தமிழோசை'. இந்தியாவில் திருவாரூரில் அரசாண்ட சோழமன்னன் அரண்மனை வாயிலிலும், இலங்கையில் அநுராதபுரத்தில் அரசு செலுத்திய தமிழ் மன்னன் எல்லாளன் அரண்மனை வாயிலிலும் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியின் சின்னத்தோடு 'தமிழோசை' உங்களை நாடி வருகிறது.

அத்துடன், 'உண்மைகள் புனிதமானவை; ஆனால் கருத்துரைகள் சுதந்திரமானவை' என்று மஞ்செஸ்டர் கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த சி.பி.ஸ்கொட் என்பார் வகுத்த பத்திரிகா தர்மம் பிறந்த இங்கிலாந்திலிருந்து வெளியாகிறது. எனின், நீதி வழுவாத–உண்மையின் பக்கமான உறுதியைச் சாற்றுகிறது.

தமிழ்கூறும் நல்லுலகுக்கு தேவையான செய்திகளை திரட்டித்தருவதுடன், தமிழபிமானிகளின் இலக்கிய, கலாசார அம்சங்களையும் தர முன் வருகிறது 'தமிழோசை.'

**"பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்களின் கடமை ஜனங்களுக்குப் பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக் கொள்ளக்கூடாது. அவர்களின் அறிவை, மனத்தை உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும் – இதைச் சுவரசியமாகச் செய்யவேண்டும். உத்தமமான விஷயங்களை புதுப்புது விதங்களில் உணர்த்தவேண்டும். பத்திரிகையாளர்கள் வாழ்நாள் முழுவதும் மாணவர்களாகவே இருந்தால்தான் தாங்களும் இப்படிப் புதுப்புது விஷயங்களை அறிந்து மற்றவர்களுக்கு பிரசாரம் செய்யமுடியும். நம்மையும் உயர்த்திக்கொண்டு, நம் வாசகர்களையும் நாம் உயர்த்த வேண்டும் என்ற கடமை உணர்ச்சியை பத்திரிகையாளர்கள் பெற வேண்டும்"**

என்ற காஞ்சிப் பெரியவரின் இந்த அருள் வாக்கையே இங்கு நினைவில் கொள்கிறோம்.

## இலங்கையிலும் இந்தியாவிலும் கே.ஜி.பி. தலைமையீடு

(மொஸ்கோ)

இந்தியாவிலும் இலங்கையிலும் சோவியத் உளவுப்பிரிவான கே.ஜி.பி. இன் தலைமையீடுகள் இருந்ததாக ரஷ்ய வாரப்பத்திரிகை 'மொஸ்கோ நியூஸ்' பல சம்பவங்களைக் குறிப்பிட்டு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்துதல் முதலான பல விசேட நடவடிக்கைகளுக்காக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் இரகசிய நிதியை வைத்திருந்ததாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1969இல் ஜெருசலத்தில் பள்ளிவாசல் ஒன்று எரிக்கப்பட்டதற்கு எதிராக பெரும் ஆர்ப்பாட்டமொன்றை புதுடில்லியில் ஏற்பாடு செய்வதற்கு கே.ஜி.பி.இன் தலைவர் திரு யூரி அன்ட்றொபோவ் சோவியத் தலைமைப் பீடத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார். இது தொடர்பாக அன்ட்றொபோவ் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவுக்கு எழுதிய இரகசிய கடிதத்தை இப்பத்திரிகை பிரசுரித்துள்ளது. அதற்கான செலவுத்தொகை 5 ஆயிரம் ரூபாவும் 1969–71 ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் விசேட நடவடிக்கைகளுக்கான மத்தியகமிட்டியின் ஒதுக்கீட்டிலிருந்து பெறப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மற்றைய விசேட நடவடிக்கைகள் என்ன என்பது பற்றி அப்பத்திரிகை எதுவும் தெரிவிக்கவில்லை.

இதுதவிர, அபிவிருத்தி அடையும் நாடுகளில் மத்திய குழுவின் நிதியுதவியோடு கே.ஜி.பி.இன் நடவடிக்கைகள் பற்றியும் 'மொஸ்கோ நியூஸ்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள பத்திரங்கள் குறிப்பிடுகின்றன. 1989இல், அப்போது கே.ஜி.பி.இன் தலைவராகவிருந்த விலடிமிர் கிறிவுஷ்கோவ் இலங்கையில் அந்த ஆண்டு முற்பகுதியில் நடந்த தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மத்திய குழுவின் நிதியுதவி, அத்தேர்தலில் அவர் எட்டு மடங்கு அதிகமான ஆசனங்களை பெற உதவியதாக கம்யூ.கட்சியின் பொதுச் செயலாளர் திரு மிக்காயல் கோர்பசேவுக்கு அறிவித்திருக்கிறார்.

அதே கடிதத்தில், கே.ஜி.பி. விசுவாசிகளான சுதந்திரக்கட்சியையும், ஐக்கிய தேசியக்கட்சியையும் சேர்ந்த இன்றும்பலருக்கும் அவர்களின் பாராளுமன்ற வெற்றிக்காக பணம் வழங்கப்பட்டதாக திரு கிறியுஷ் கோவ் தெரிவித்துள்ளார். திருமதி பண்டாரநாயக்கா தமக்கு அளிக்கப்பட்ட உதவிக்கு நன்றி தெரிவித்திருந்ததோடு, பாராளுமன்றத்தில் தமக்கு கிடைத்த அதிகரித்த பலத்தின்மூலம் மேற்குக்கு ஆதரவான வெளிநாட்டுக் கொள்கையையும் ஐ.தே.க.யின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் தடுக்க தாம் முயற்சிப்பதாக உறுதி தெரிவித்திருந்ததாகவும் கே.ஜி.பி. தலைவர் தெரிவித்திருக்கிறார்.

வெளிநாடுகளில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் இத்தகைய நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் கம்யூ.கட்சியைத் தடை செய்யும் அதிபர் திரு பொறிஸ் யெல்ற்சினின் ரஷ்ய அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகின்றன.

# பிரேமதாசாவுக்கு சோதனையாகும் தொண்டமான்!

**சௌ**மியமூர்த்தி தொண்டமான் யார்? இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஏக தலைவரும் ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கத்தின் செல்வாக்குமிக்க அமைச்சருமான இவர் பற்றிய கேள்வியே இப்பொழுது கொழும் பில் அரசியல் ராஜதந்திர வட்டாரங் களில் பெரிதும் எழுப்பப்படுகிறது. வடக்கு–கிழக்கு இணைப்பை முக்கியமாகக் கொண்டு தமிழ்ஈழத் துக்கு மாற்றாக ஒரு திட்டத்தை முன்வைக்கும் மற்றைய ஏழு அரசியல் கட்சிகள், குழுக்களுடன் அவர் தம்மையும் இணைத்துக் கொண்ட திடீர் நடவடிக்கை தான் இந்த கேள்வியை எழுப்பியுள்ளது.

இனப்பிரச்னைக்கான தீர்வின் குறைந்தபட்ச கோரிக்கைகளாக நாலு அம்சத் திட்டமொன்றை ஜனாதிபதி பிரேமதாசாவிடம் ஜுன் 15ஆம் தேதி சமர்ப்பித்துப் பேசவிருந்த போது அதற்குச் சில தினங்களுக்கு முன்னதாக தமிழர் கூட்டணி, ஏசிரிசி, ரெலோ,ஈஎன்டிஎல்எவ் ஆகியவற்றுடன் திரு தொண்டமான் எதிர்பாராதவிதத்தில் கரம் கோத்துக் கொண்டார்.

## நியாயமாகச் சிந்திக்கும் தலைவர்

தொண்டமான் இதுவரை காலமும் அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்துடன் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும்; ஏனையவை தமிழ் மக்களின் செல்வாக்கைக் கொண்டனவல்ல என்ற நிலையைக் கொண்டிருந்தவர். நியாயமாகச் சிந்திக்கும் இந்த மலையகத் தலைவருக்கு ஜனநாயக சூழலில் இயங்கக்கூடிய கூட்டணியைத் தவிர ஏனைய இந்த இயக்கங்கள் அனைத்தும் வெறும் பெயர்ப்பலகை இயக்கங்களே. இவற்றுடன் பேசுவது வீணானது என்றே அவர் கருதி வந்தார்.

அவரது இந்த நடவடிக்கைக்கான மற்றொரு காரணம் ஈபிஆர்எல்எவ், புளொட், ஈரோஸ் போன்றவை தோட்டத் தொழிலாளரிடையே உருவாகும், அவருக்கு எதிர்காலத்தில் சவாலாகக் கூடிய சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி போன்றவற்றுடன் சில விதங்களில் தீவிரமாக ஒன்றுபடுவது.

இந்த பின்னணியுடன் தான் திரு தொண்டமான் ஒரு சமாதான தூதராக கடந்த நவம்பரில் வெளியான அவரது சர்ச்சைக்குரிய 32 அம்ச திட்டங்களுடன் ஜனவரியில் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்காக யாழ்ப்பாணம் செல்ல தயாரானார். அவரது அந்த உத்தேச விஜயம் சிங்கள பெரும்பான்மையினரது, குறிப்பாக பௌத்த குருமாரது வன்மையான எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. ஆனாலும் புலிகள் அழைத்தால் தாம் இன்னமும் யாழ்ப்பாணம் செல்ல தயாராகவே இருப்பதாக தொண்டமான் ஜுன் முற்பகுதியில் தெரிவித்தார். புதிதாக அழைப்பு எதுவும் வேண்டியதில்லை என்றும் முன்னைய



அழைப்பையே ஏற்றுக் கொள்ளலாமென்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தொண்டமானின் இந்த திடீர் கருத்து மாற்றத்துக்கும் கடைசி வரை நிராகரித்து வந்த குழுக்களுடனான நட்புக்கும் அவரை தூண்டியது என்ன? எப்பொழுதுமே இந்தியாவின் நேசத்தைக் கொண்டவரான தொண்டமான், இந்திய தலைவர்களுடன் நெருங்கிய உறவையும் கொண்டவர். இந்தியாவினால் எப்பொழுதும் கலந்தாலோசிக்கப்படுபவரும், நம்பிக்கைக்குரியவருமென்பதோடு, இந்தியா செவிமடுக்கின்ற ஒருவராகவும் அவர் இருந்தார்.

ஆனால் , ராஜிவ் காந்தி பிரதமராகவிருந்த பின்னைய காலங்களில் தொண்டமான் தொடர்பாக புதுடில்லியில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. உதாரணமாக இந்திய வீசாவுக்காக தொண்டமானினதோ அல்லது வேறு இ.தொ.கா. முக்கியஸ்தர்களினதோ சிபார்சுகள் கொழும்பு இந்திய தூதரகத்தில் உதாசீனப்படுத்தப்பட்டன. இது ராஜிவ் காந்தி கொலையின் பின்னரும் நரசிம்மராவ் பதவியேற்ற பின்னரும் மேலும் வெளிப்படையானது.

## அரசியல் அரங்கின் சுவாரஸ்யம்

அரசியல் அரங்கத்தில் தற்போது நிகழும் காட்சிகள் சுவாரஸ்யமானவை. ராஜிவ் காந்தியும் ஜுனியஸ் ஜயவர்த்தனாவும் 1988 ஜுலையில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைக் கைச்சாத் திட்ட சமயம் நரசிம்மராவ் இந்திய வெளியுறவு அமைச்சராகவும், ஜெ.என்.மணி டிக்சிற் இலங்கையில் இந்தியத் தூதுவராகவும் இருந்தனர். டிக்சிற் ஈ.பீ.ஆர்.எல்.எவ் மற்றும் ஈ.என்.டி.எல்.எவ் போன்ற இயக்கங்களை ஊக்குவித்தார்.

இந்தியாவின் நேரடி ஆதரவுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ், தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட–கிழக்கு மாகாணத்தில் ஆட்சியில் நிறுவப்பட்டது. பெரும் கேள்விக்குரியதாகவிருந்த அந்தத் தேர்தலில் இந்திய அமைதி காக்கும்படை வாக்குப் பெட்டிகளை நிரப்புவதில் முக்கியபங்கு வகித்தது. டிக்சிற் தான் இலங்கை முஸ்லிம் காங்கிரசையும் இந்த தேர்தலில் போட்டியிடவைத்தார்.



இப்பொழுது தெற்காசியாவிற்கும், டிக்சிற்றுக்கும் கடமைப்பட்ட இந்த புலிகள் அல்லாத தமிழ்க் குழுக்களும் கூட்டணியும் இணைந்த ஏழு கட்சிக் கூட்டுடன் முஸ்லிம் காங்கிரசும் இரகசிய தொடர்பு கொண்டுள்ளது. ராவ் இப்பொழுது பிரதமர், டிக்சிற் புதுடில்லியில் வெளிநாட்டுச் செயலாளர். அத்துடன், ராஜிவின் சக்திவாய்ந்த பத்திரிகைச் செயலாளரான மணி சங்கர் ஐயர் லோக் சபா உறுப்பினர்.

ஆக, முன்னைய அதே அமைப்பு மீண்டும் அரங்கில் வந்திருக்கிறது. இவை அனைத்தும் பல வினாக்களை எழுப்புகின்றன. இந்த ஏழு கட்சிக் கூட்டு ராவ்–டிக்சிற் உருவாக்கலா? தொண்டமானின் இந்த மனமாற்றமும் உறவும் தன்னுடைய புலிகள் ஆதரவு போக்கை தான் கைவிட்டு விட்டேன் என்பதை டில்லிக்கு காண்பித்து இந்திய 'வேலி'யை புதுப்பிக்கும் முயற்சிக்கான சமிக்ஞையா? அல்லது தொண்டமான் இந்தியாவின் நெருக்குதலுக்கு உள்ளானாரா?

பக்குவப்பட்ட அரசியல் வாதியான தொண்டமான் தன்னுடைய 'துரும்பை'–5 லட்சம் மலையகத் தமிழர்களது வாக்கை–இந்தியாவின் ஆதரவை–அவர் கொண்டிருந்தாலொழிய அதை பாவிக்க இயலாது.

அவரது அரசியல் பேரத்தின் ஆற்றல் இந்த இரு தூண்களிலும் தான் தங்கியுள்ளது. இதில் ஒன்றை அவர் இழந்தாலும் அந்தக்கண்மே அவர் ஆற்றலற்றவராகி, ஐ.தே.க. அவரை கைவிட்டுவிடும். எப்படியெனினும், பிரேமதாசவைப் பொறுத்தவரையில் தொண்டமான் அவரது வாக்கு வங்கியுடன் அசைக்கமுடியாத ஒருவரே.

## நெருக்குதலுக்கு நெகிழ்வாரா?

1988 ஜனாதிபதி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெற்கிலும், யாழ்.மாவட்டத்திலும் கூடுதலான தொகுதிகளை வென்றார். எனினும் தமிழ்த் தோட்டத் தொழிலாளரதும், கிழக்கு மாகாண முஸ்லிம்களதும் வாக்குகளே பிரேமதாசாவுக்கு சாதமாக அத்தேர்தலை ஆக்கின. 1995ஜனாதிபதி தேர்தலை எண்ணி தொண்டமானின் நெருக்குதலுக்கு நெகிழ்ந்து பிரேமதாசா வடக்கு கிழக்கு இணைப்பை சிங்கள மக்களின் அபிப்பிராயத்துக்கு மாறாக ஏற்றால் சிங்கள தென்பகுதியையும் முஸ்லிம் கிழக்கையும் அவர் இழக்க நேரிடும். இணைப்பை இந்த இருசாராரும் வன்மையாக எதிர்க்கிறார்கள்.



அதேவேளை இணைப்புக்கான தொண்டமானின் கோரிக்கையை நிராகரித்தால் தோட்டத் தொழிலாளரதும் தமிழரதும் வாக்கை பிரேமதாசா எதிர்பார்க்க இயலாது. இருந்தாலும் இதில் இன்னுமொரு வினாவும் இருக்கின்றது. தொண்டமான் தொடர்ந்தும் தோட்டத்தொழிலாளரை தமது கட்டுப்பாட்டுள் வைத்திருப்பாரா? இனியும் அவரை தமது முடிசூடா மன்னனாக ஏற்க மறுத்து புதிதாக தோட்டத்தொழிலாளரிடையே உருவாகும் புதிய சத்திகள் இதனை உணர்த்துகின்றன.

ஆக, இது பிரேமதாசா எதிர்நோக்கும் பலவற்றில் ஒன்றே. ஐ.தே.க. ஏற்கனவே இரண்டாக பிரிந்து விட்டது. முன்னாள் அமைச்சர்கள் காமினி திசாநாயக்கா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் தலைமையிலான – பிரிந்த இந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, பிரேமதாசாவின் ஆளுகை, செயல்பாடுகளில் அதிருப்தியுற்ற ஐ.தே.க.வினரில் கணிசமானோரைக் கொண்டிருக்கிறது. அத்துடன், வயதானாலும் ஐ.தே.க. வை எதிர்த்து ஜனாதிபதி தேர்தலில் நிற்கக்கூடிய ஒரே ஒருவரான சிறிமா பண்டார நாயக்காவின் தலைமையில் ஒன்று சேர்ந்த இடதுசாரி எதிரணி ஒன்றும் உண்டு.

இத்தகைய ஒரு சிக்கலான சூழ்நிலையில் தொண்டமானின் கோரிக்கைகளை நிராகரிப்பதும் ஏற்பதும் பிரேமதாசாவுக்கு பெரும் அரசியல் சோதனையாகவே அமையும். சிங்கள பெரும்பான்மையினருக்கும் அவசியமான தோட்டத் தொழிலாள, தமிழ் வாக்காளருக்குமிடையேயும் மிகவும் அபாயகரமான கயிற்றின் மீது நடக்க வேண்டிய நிலையே அவருக்கு இருக்கிறது. எனின், சௌமியமூர்த்தி தொண்டமான் தொடர்ந்தும் ஒரு முக்கிய பிரமுகராகவே விளங்குகிறார். அதனால் தான் அவரது நடவடிக் கைகள் விடையில்லாத–சிலவேளைகளில் விடையே இல்லாத வினாக்கள் பலவற்றை எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

**ஏ.ஸி.எம்.சாலி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் ராசிபலன் எப்படி?

சோமசன்மா

உலகத்தின் எல்லா நாடுகளிலும், எல்லா மக்களிடையேயும் சோதிடத்தில் நம்பிக்கை இருப்பது, அவ்வப்போது கிரகங்கள் என்ன பலன் தருகின்றன என்பதை அறிய ஆவல் கொள்வதும் நடைமுறை வழக்கமாகிவிட்டது. அதனால் இப்போது எல்லா நாட்டுப் பத்திரிகைகளிலும், எல்லா மொழிகளிலும் ராசிபலன் கிரமமாக வெளியிடப்படுகின்றது. தமிழோசை வாசகர்களுக்கும் அந்தச் சேவையை வழங்க ஒரு சோதிட நண்பர் ஒப்புக்கொண் டிருக்கிறார். இப்போதைக்கு ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் ராசி பலன் வெளியிடப்படும்.

இங்கு தரப்படும் பலன்கள் சந்திரலக்கின கோசார பலன்கள். கோசாரபலன் என்பது ஒருவர் பிறந்த சமயத்தில் சந்திரன் எந்த ராசியில் இருந்தாரோ அந்த ராசியை முதலாக வைத்து, இப்பொழுது மற்றைய கிரகங்கள் எங்கெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதை வைத்துக் கணித்துப் பலன் சொல்வதாகும். உதாரணமாக, நீங்கள் பிறக்கும்போது அசுவினி நட்சத்திரம் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானால் சந்திரன் மேட ராசியில் இருக்கவேண்டும். இப்போது நடக்கும் ஜூலை மாதத்தில், சந்திரனைத் தவிர மற்றைய எட்டுக் கிரகங்களும் எங்கெந்த வீட்டில் இருக்கிறார்கள் என்பதைப் பஞ்சாங் கத்தில் பார்த்து, அந்த வகையில் சந்திரன் இருந்த வீட்டிலிருந்து,

ஒவ்வொரு கிரகமும் எத்தனையாவது வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து, அதன்படி பலன் சொல்ல வேண்டும்.

உங்களில் சிலருக்கு சந்திர லக்கினம் தெரியாமலிருக்கலாம். நட்சத்திரம் மாத்திரம் தெரியலாம். அப்படியானால், உங்கள் நட்சத்திரத்துக்குரிய ராசியைப் பின்வரும் அட்டவணை மூலம் தெரிந்துகொள்ளலாம்.

அசுவினி, பரணி,
கார்த்திகை முதல் கால்........................................மேடம்
கார்த்திகை பின் முக்கால், ரோகிணி,
மிருகசீரிடம் முன்னரை........................................இடபம்
மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை,
புனர்பூசம்
முன்முக்கால்........................................மிதுனம்
புனர்பூசத்து நாலாங்கால்,பூசம்,
ஆயிலியம்........................................கர்க்கடகம்
மகம், பூரம், உத்தரத்து
முதற்கால்........................................சிங்கம்
உத்தரத்து பின்முக்கால், அத்தம்,
சித்திரை
முன்னரை........................................கன்னி
சித்திரையின் பின்னரை, சுவாதி,
விசாகத்து முன்முக்கால்........................................துலாம்
விசாகம் நாலாங்கால்,
அனுஷம்,
கேட்டை........................................விருச்சிகம்
மூலம், பூராடம்,
உத்தராடத்து முதல்
கால்........................................தனு
உத்தராடத்து பின்முக்கால், திருவோணம்,
அவிட்டத்து முன்னரை........................................மகரம்
அவிட்டத்துப் பின்னரை, சதயம்,
பூரட்டாதி
முன்முக்கால்........................................கும்பம்
பூரட்டாதி நாலாங்கால், உத்தரட்டாதி,
ரேவதி........................................மீனம்

இனி, இந்த ஜூலை மாதப் பலன்களை,
உங்கள் ராசிக்கு அமைந் திருக்கும் வகையில் பார்க்கலாம்:

## மேடம்

பலநாள் அனுபவித்த பொருளா தாரச் சிக்கல் நீங்கக்கூடும். தந்தை வழிச் சொந்தக்காரர் உதவு வார்கள். ஆயினும் ஜாக்கிரதை நல்லது. வயிற்றுநோய் அனுகாமல் பார்த் துக்கொள்ளவும். வெளிநாட்டிலி ருந்து ஒரு முக்கியமான செய்தியை எதிர் பார்க்கலாம். வியாழக் கிழமையும் திங்களும் நல்ல நாட்கள்.

அதிஷ்ட எண் 6.

## இடபம்

சங்கடத்தை உண்டாக்கும் சனி பகவான் உங்களைப் பொறுத்த வரையில் பெரிய உதவியைச் செய்யக் காத்திருக்கிறார். அவரை நம்பலாம். வீடும் வாகனமும் வந்து சேரப்போவது உண்மையா? சகோ தரர்களால் நன்மை எதிர்பார்க் கவேண்டாம். கால் சம்பந்தமான நோய் அனுகாமல் பார்த்துக் கொள்ளவும். விவாகமாகாதவர் களுக்கு வழி பிறக்கப் போகிறது.

அதிஷ்ட எண் 3.

## மிதுனம்

கல்வித்துறையில் ஒரு புதிய திருப்பத்தை எதிர்பார்க்கலாம். உடலை அதிகம் வருத்த வேண்டாம். தாயாரின் உடல் நலத்தைக் கவனிக்கவும். எதிர் பாராமல் ஒரு புதிய செலவுக்கு இடமுண்டு. குடும்பப் பிரச்சினையைப் பெரி தாக்க வேண்டாம். குடும்பமே பெரிதாக இடமுண்டு.

அதிஷ்ட எண் 5.

## கர்க்கடகம்

பொதுவாக இம்மாதம் உங்கள் ஜாதகம் நல்ல ஜாதகம் தான். இருந்தாலும் வீதியில் வண்டி ஓட்டும்போது கவனித்து ஓட்டவும். கணவன் மனைவி ஊடல் தவிர்க்க முடியுமா? மாமனார் வழியில் சில சலுகைகள் கிடைக்கும். மாதக் கடைசியில் எதிர்பாராத ஒரு வரவை எதிர்பார்க்கலாம். மதுப் பழக் கமுள்ளவர்கள் உடலைக் கவனிக் கவும்.

அதிஷ்ட எண் 7.

## சிங்கம்

வீடு வாங்க அல்லது மாற்ற இது ஏற்ற சமயமல்ல. அவ்வேண்டிய பணமும் வராது. பொறுத்துக் கொள்ளுங்கள். சகோதரிவகையில் நன்மையை எதிர்பார்க்கலாம். குடும் பத்தில் மாறுதல் ஏற்படலாம். நல்லதுக்குத்தான். தொழிலில் கவ னம் செலுத்தவும், தலைவரின் கடாட்சம் வேண்டும். சரும வியா திக்கு இடமுண்டு.

அதிஷ்ட எண் 4.

## கன்னி

இந்த மாதம் உங்கள் சட்டைப் பை காலியாகாமல் இருக்க என்ன செய் வீர்களோ தெரியாது. கவிஞர்கள் பட்டினியோடு பாடு வார்கள். நண்பர்களை நம்பலாம். மனைவி மக்கள் சுகக் குறைவுதான், ஆயினும் மகிழ்ச்சியுடன் புதிய இல்லத்துக்கு மாற இடமுண்டு. மைத்துனர் உதவி உண்டு.

அதிஷ்ட எண் 5.

## துலாம்

கூறாமல் சன்னியாசம் கொள் என்ற உபதேசத்தை நினைக்கவேண்டி வரலாம். எதற்கும் கொஞ்ச நாள் அமைதியாயிருங்கள். குழந்தைகள் நன்மையுண்டு. வரவு செலவைக் கட்டுப்படுத்துவது கஷ்டம். நண்பர் கள் உதவுவார்கள். புதிய விருந்தினர் வருவார். விவாகப் பேச்சுகள் தடைப்படும்.

அதிஷ்ட எண் 9.

## விருச்சிகம்

இடமாற்றம் சொல்லப்படுகிறது. பணவரவை எதிர்பார்க்கலாம். மாணவர்களுக்கு நல்ல காலம். பெண்களுக்கு வரன் கிடைப்பது கஷ்டம். கொஞ்சம் பொறுத்துப் பார்க்கவும். தாய்மாமன் வழியில் துக்கச் செய்தி வரலாம்.

அதிஷ்ட எண் 6.

## தனு

குடும்பப் பிரச்சனை இருக்கலாம் சமாளித்துக் கொள்ளுங்கள். குருட்டு அதிஷ்டம் அடித்தாலும்

19ம் பக்கம் பார்க்க

# தொடர்கின்ற பயணம்

சுமார் பதினைந்து ஆண்டுகால நீண்ட பயணத்திலே மற்றுமொரு மைல்கல்லை அடைந்திருக்கிறார் பாலேந்திரா.

-லண்டனிலே தமிழ் நாடக மொன்று மண்டபத்தை நிறைத்தி ருக்கிறது. மண்டபத்துக்கு வந்து, அங்கேயே 'ரிக்கட்டு'களை வாங்கி, நாடகத்தைப் பார்க்கின்ற ஒரு நிலையை தமிழ் ரசிகரிடையே ஏற்படுத்த, இலங்கையிலே ஆரம் பித்து- லண்டனிலே கடந்த சுமார் ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்த முயற்சிலே பாலேந்திரா அதனைச் சாதித்திருக்கிறார்.

விம்பிள்டன் மேட்டன் மண்ட பத்தில் அண்மையில் நடைபெற்ற அவைக்காற்று கலைக்கழகத்தின் நாடக விழாவில் மண்டபம் நிறைந்திருந்தது. சிலர் நின்று கொண்டிருந்தார்கள்.

மேட்டன் மண்டபத்தினுடைய இருக்கை எண்ணிக்கை வினாவுக்குரிய விடயமல்ல. ஆனால், குழந்தைகள் படைப்பொன்றை அமைத்ததில் அது இந்த வெற்றிக்கு அவருக்கு துணைநின்றிருக்கலாம்; அவசியமான -நியாயமான யுக்தி.

-இந்த யுக்தி அவர்களோடு, லண்டன் போன்ற நாடுகளிலே வாழ்கின்ற தமிழ்ச்சிறார்கள்- பெற்றோர்களுக்கு மொழியைப் பயில்வதில் -பயிற்றுவிப்பதிலும் வாய்ப்பாகிறது.

'வேடரை உச்சிய வெள்ளைப் புறாக்கள்' என்று முன்னர் ஒரு சிறுவர் நாடகத்தைத் தயாரித்திருந்த பாலேந்திரா, 'தப்பி வந்த தாடி ஆடு' என்று மற்றொரு நாடகத்தை அன்று அளித்தார்.

பிறன்ற் தமிழ்ச்சங்க தமிழ்ப்பாட சாலையின் மொத்தம் 27 சிறுவர் சிறுமியர் பங்குபற்றிய நாடகம் அது. மௌனகுருவின் பிரதி; இசைப் பாடல்களும் வசனமுமாய் அமைந் தது.

-கதை சொல்வோரைத் தவிர அனைத்துப் பாத்திரங்களும் ஆடுகள், யானைகள், மான்கள், குரங்குகள், கரடி, பன்றி, நரி, சிங்கம் என்று அமைந்திருந்த போது, ஓவியர் ராஜாவின் எழிலான-பாத்திரங்களை எளிமையாக கோடி காட்டும் உடை-ஒப்பனைகளும், நடிப்பும் ரம்மியமூட்டின. அவையை ஈர்த்தது.

நாடகவிழாவின் மற்றைய நாடகங்களில் 'எரிகின்ற எங்கள் தேசம்' ஒரு கவிதா நாடக நிகழ்வு. முன்னர் சில தடவைகள் மேடையேறிய இது, இலங்கையின் சமகால நிகழ்வுகள் சிலவற்றை, அழகான ஒரு கவிதையைப் போலவே அற்புதமாக நயக்க வைப்பது.

இடைவேளைக்குப் பின்னர் 'பிரத்தியேகக்காட்சி', 'தரிசனம்' என்று ஈர் அங்கங்களாக இடம்பெற்ற 'மன்னிக்கவும்' என்ற நாடகம், பொதுவாக பாலேந்திரா ஈடுபாடு கொண்டுள்ள-எதிர்கொள்கின்ற மொழிபெயர்ப்பு நாடகம். செக்கொஸ் லவாக்கிய நாடக ஆசிரியரான வஸ்லாவ் ஹாவல் என்பார் எழுதியது. அவருடைய ஒரு சுயசரிதைப் பாங்காய் அமைந்திருந்தது.

சோவியத் ஆக்கிரமிப்புக் காலத் தில் செக்கொஸ்லவாக்கியாவில் வடிசாலை ஒன்றில் கூலியாளராக நாடகாசிரியர் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது அவருக்கு ஏற்பட்ட அச்சுறுத்த ல்களில் நொந்துபோன அந்த கோர மையான-மென்மையான சுபாவம்கொண்ட எழுத்தாளன் எதிர்கொள்ளும் இரண்டு வெவ்வேறு சம்பவங்கள் இவை.

முதலாவது அங்கமான 'பிரத்தியேகக்காட்சி'யின் யதார்த்தம் பொதுவாக எல்லோராலும் அநுப விக்கக்கூடியது. ஆனந்தராணி, மனோகரன், ராஜா மூவருமே பாத்திர அமைப்புகளோடு ஒன்றியிருந்தனர். மட்டமான ஒலியமைப்பு அந்த நாடகத்தின்போதுதான் ஆத்திரமூ ட்டியது. பாலேந்திரா போன்றவர்கள் இவற்றிற்கு காரணம் கற்பிக்க முடியாது.

'தரிசனம்' அதன் நாடகபாணியில் 'மொழிபெயர்ப்பு' என்ற குற்றச் சாட்டை மிக எளிதாக அவர்மீது சுமத்துகிறது. அதற்காக ரசிகர்கள் மீது பழியைச் சுமத்துது, தன்னை அவர்கள் மத்தியில் வாகை கொள்ள வேண்டும்.

எழுத்தாளனாக வரும் ஓவியர் ராஜா குணசித்திர பாத்திரமாக தெரிகிறார்.

பின்னணியில் நிர்மலாவின் பங்கு முழுநிகழ்ச்சியிலும் இழையோடுகிறது.

-பைரவி.



'தப்பி வந்த தாடி ஆடு' நாடகத்தில் ஒரு காட்சி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நூல்: அயல்நாடுகளில் தமிழர்**
**எழுதியவர்: முனைவர் எஸ்.நாகராஜன்.**
**வெளியிட்டோர்: தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**
**பக்கங்கள்: 446**
**விலை: ரூபா 74.**

## நூல் மதிப்பீடு

# உலகத் தமிழர் பற்றிய செய்திகள்

அயல்நாட்டுத் தமிழர்களைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அடங்கிய ஒரு நூல் வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. அயல்நாட்டுத் தமிழர்களை அறிமுகம் செய்யும் முறையில் முதலில், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, தென் ஆப்ரிக்கா, மொரீசியஸ், பிஜித்தீவு, பர்மா, ரீயூனியன், மர்தினிக் குவாடிலோப், கயானா, சீசெல்சு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் வாழும் தமிழர்களின் மொத்த எண்ணிக்கை, அந்த நாடுகளில் தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகள்,மற்ற இந்தியர்களுடன் ஒப்பிட்ட விழுக்காடு போன்ற தகவல்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மிகவும் அதிகமாக இலங்கையிலும் (37,35,740) மிகவும் குறைவாக சீசெல்சு தீவுகளிலும் (3,000) தமிழர்கள் வாழ்கிறார்கள். இந் நாடுகளைத் தவிர, உலகிலுள்ள மற்ற பல நாடுகளிலும் தமிழர்கள் வாழ்ந்துவருவதும் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் சுமார் ஒன்றேகால் கோடித்தமிழர்கள் வாழ்வதும் குறிப்பிடப்பட் டிருக்கிறது.

தமிழர்கள் ஏன் அயல்நாடுகளுக்குச் சென்றார்கள் என்ற கேள்விக்கும் விடை காணப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தெற்குப் பகுதியான வரண்ட சூழ்நிலை காரணமாகவும், முத்து, ரத்தினம், நறுமணப் பொருள்களைத் தேடியும், சில குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ள அயல்நாடுகளில் வாய்ப்புகள் அதிகம் இருந்ததாலும் சென்றார்கள்.

அயல்நாடுகளுக்குச் சென்ற தமிழர்கள் இருவகையினர். வரலாற்று ஆரம்ப காலத்திலும், குறிப்பாக பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முன்பு சென்றவர்கள் ஒருவகை. சென்ற ஒரு நூற்றாண்டுக் காலமாகச் சென்றவர்கள் இரண்டாவது வகை. இவர்களில் பலர் தமிழ்ப்பண்பாட்டை மறந்து தாம் குடியேறிய நாட்டுப் பண்பாட்டை ஏற்று வாழ்கிறார்கள். சிலர் தமிழ்ப் பண்பாட்டைத் தொடர்ந்து பாதுகாத்துப் பேணுகிறார்கள். கடல் கடந்து அயல்நாடுகளுக்குப் பரவிய தமிழ்ப் பண்பாடு பொதுவாக அமைதியான முறையில்தான் பரவிற்று என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார். புள்ளிவிவரங்களுடன் தமிழர்கள் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டதைத் தொடர்ந்து தமிழர்கள் அதிகமாக வாழும் அயல்நாடுகள் ஒவ்வொன்றிலும் காணப்படும் சிறப்பு அம்சங்கள் தனித்தனி அத்தியாயங்களில் மிகவும் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பிட்ட நாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் இருந்த வரலாறு உறவு, மக்கள் தொகை, கல்வியறிவு, அந்த நாட்டின் பண்பாட்டில் தமிழ்நாட்டின் பங்கு, சமூக அமைப்பு, சமயச் சூழ்நிலை,கோயில்கள்,பொருளாதார அமைப்பு, கல்வித்துறை,செய்திப் பரவல் தொடர்புச் சாதனங்கள், நூலகங்கள், செய்திப் பத்திரிகைகள், வானொலி அரசியல் அடிப்படையிலான சில பிரச்சனைகள் போன்ற விஷயங்கள் ஆராய்ச்சி அடிப்படையில் சான்றுகளுடனும் மேற்கோள்களுடனும் காணப்படுகின்றன.இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைப்பற்றிய அத்தியாயங்களில் இவை விளக் கமாகத் தொகுக்கப் பட்டிருக்கின்றன. மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்ந்த வரலாற்றைப் பற்றியும் இந்த நூலில் ஒருவாறு அறிந்து கொள்ளலாம். நாடகங்களைப் பற்றிய தகவலும் காணப்படுகிறது. இந்த நாடுகளில் வானொலியில் தமிழ் நிகழ்ச்சிகள் வகிக்கும் பங்கும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்தோ னேசியாவில் வாழும் தமிழர் களிடையே நிலவும் சமய மரபுகளைப் பற்றிச் சொல்லும் போதுசைவ சித்தாந்தத் தத்துவமும் அங்கு பரவியதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். தமிழ்நாட்டு சைவசித் தாந்தத்திற்கும், பாலினியர்களின் தத்துவத்திற்குமிடையே பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. 1960க்குப் பிறகு இந்தோனேசிய மொழி போதிக்கப்படாத பள்ளிக்கூடங்களுக்குத் தடை விதிக்கப்பட்டபோதுஅரசாங்கம் தமிழ்மொழிக்கு மட்டும் விதிவிலக்கு அளித்து தமிழர்கள் தங்களுடைய மொழியைக் கோயில்களில் வகுப்பு நடத்திக் கற்பிக்கலாம் என்று சலுகை அளித்தது. பர்மாவில் புத்தமதமே அரசு சமயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அங்கு உள்ள தமிழர்கள் 40க்கும் அதிகமான கோயில்களில் தங்கள் வழிபாட்டைச் செய்ய வாய்ப்பு உள்ளது. இங்கும் சட்டபூர்வமாகப் பள்ளிகளில் தமிழ் வகுப்புகள் இல்லையென்றாலும் சில கோயில்களில் மாலையில் தமிழ்க் கல்வி போதிக்கப்படுகிறது. ஆங்கில ஆட்சியின்போது பர்மாவுக்கு வணிக முறையில் பலதமிழர்கள் சென்றார்களென்றாலும், அவர்களையடுத்து அறிவுத் திறனுடைய ஆசிரியர்கள், டாக்டர்கள் போன்றவர்களும் தொழிலாளர்களும் சென்றனர். தமிழர்களுடைய நிலத்தில் விளையும் விளைச்சலில் பாதியை அரசாங்கமே வாங்கிக் கொள்வதால் நில உடைமையாளர்களின் பொருளாதார நிலை ஓரளவு நன்றாகவே இருக்கிறது.

> இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களில் சுமார் ஒன்றேகால் கோடித்தமிழர்கள் வாழ்கிறார்கள்.

> இந்தோனேசிய மொழி போதிக் கப்படாத பள்ளிக் கூடங்களுக்குத் தடை விதிக் கப்பட்ட போது அரசாங்கம் தமிழ் மொழிக்கு மட்டும்

> தாய்லாந்துக்குச் சென்று குடியேறிய தமிழ் மக்களின் பண்பாட்டுத் தாக்கத்தால் விளைந்த பலன்களில் ஒன்று அந்த நாட்டில் திருப்பாவை – திருவெம்பாவை உற்சவம் தேசீயத் திருவிழாவாகக்

> தென் ஆப்பிரிக்காவில் தமிழ்க் கல்வியை அறிமுகப் படுத்தியவர்கள் கிறிஸ்தவ சமயப் பிரமுகர்கள்.

தாய்லாந்துக்குச் சென்று குடியேறிய தமிழ் மக்களின் பண்பாட்டுத் தாக்கத்தால் விளைந்த பலன்களில் ஒன்று அந்த நாட்டில் திருப்பாவை–திருவெம்பாவை உற்சவம் தேசீயத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. மற்றும் நம்முடைய தீபாவளி, கார்த்திகை போன்ற விழாக்களும் தாய்லாந்து மக்களிடையே வழங்கி வருகின்றன. இந்த ஒற்றுமைகளை விளக்கும் பகுதி விரிவான ஆராய்ச்சியின் விளைவாக விளக்கப்பட்டிருக்கிறது. இவ்வகையில் பேராசிரியர் தெ.பொ.மீ. நேரில் கண்டு வர்ணித்த விஷயங்கள்சான்றாகக் காட்டப்படுகின்றன.

மற்றும் கம்பூசியா, லாவோஸ், வியட்நாம் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களின் நிலைபற்றிய தகவல்களும் இந் நூலில் அடங்கியுள்ளன. ஜப்பான், கொரியா நாடுகளில் ஈமச்சடங்கு, பொங்கல் விழா போன்ற நடவடிக்கைகளில் அங்குள்ள தமிழ் மக்களிடையேயும் அந்நாட்டு மக்களிடையேயும் நிலவும் ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழி, வாழ்க்கை பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் வற்புறுத்தியதும் நினைவு கூரப்பட்டுள்ளது. இதுவரை இத்தகைய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படாததன் காரணங்களும் ஆராயப்படுகின்றன. இது தொடர்பாக பல ஜப்பானிய அறிஞர்கள் கூறியிருக்கும் யோசனைகளும் பயன் தரும் வகையில் உள்ளன.

சீனாவில் தமிழர்கள் இல்லை என்றாலும், அங்குவானொலியில் தமிழ் மொழியில் ஒலிபரப்பு நடப்பதால் தமிழ் கற்கும் வாய்ப்புகள் உள்ளன. பீகிங் ஒலிபரப்புக் கல்லூரியில் தமிழ்க் கல்வி தொடங்கப்பட்டபோது இருபது மாணவர்கள் தமிழ் மொழி, இலக்கியம் போன்றவற்றைக் கற்றனர். பல சீனர்கள் தமிழ்மொழி அறிஞர்களாகவும் விளங்கினர்.

பிஜித் தீவுக்குச் சென்ற தமிழர்கள் ஏனைய இந்தியர்களைப் போலவே பிழைப்புக்காகக் கரும்புத் தோட்டங்களில் கூலி வேலை செய்யச் சென்றவர்கள். அந்தத் தீவில் வாழும் 70, 80 ஆயிரம் அளவிலான தமிழ் மக்களின் நிலையை உயர்த்த பல சமுதாய சேவைத் தலைவர்கள் முயன்றார்கள். 1927–ம் ஆண்டில் தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கத்தின் முயற்சியால் தொடங்கப் பட்ட பள்ளிகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைத்தது தென்றாலும் நாளடைவில் அது பாதிக்கப்பட்டது.1985–ம் ஆண்டளவில் தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்ச்சி தோன்றியதன் விளைவாக மீண்டும் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பொருளாதாரத் துறையில் இன்று பிஜியில் தமிழ் விவசாயிகள் வசதியுடனேயே வாழ்கிறார்கள். சமய வாழ்க்கையிலும் தமிழர்களுக்குப் பல கோயில்கள் வழிபாட்டுக்காகவும், விழாக்களுக்காகவும் பயன் படுகின்றன. தங்களுடைய பண்பாட்டு வழியில் வந்த பல சடங்குகளையும், பூஜைகளையும் தமிழர்கள் பின்பற்றி, சமய வாழ்வு நடாத்துகிறார்கள்.

இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் தமிழர்கள் வாழும் பிரிட்டனில் வணிகம், அரசியல், சமயம், கல்வி முதலிய காரணங்களால் தமிழர் ஆங்கிலேயர் உறவு தொடர்ந்து வளர்ச்சி அடைந்தது. தமிழ்நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும் அங்கு இருப்பதால் தமிழ் ஆராய்ச்சி வளர்வதற்கும் வாய்ப்பு உள்ளது. சில தமிழ்ச் சொற்களும் ஆங்கிலத்துடன் கலந்து பழக்கத்தில் வந்தன. பல கோயில்களும் பிரிட்டனில் தமிழர்களால் நிறுவப்பட்டிருக்கின்றன. தமிழர்களுக்காக 12 ஊர்களில் பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன. லண்டன் தமிழ்ச் சங்கம் பொங்கல்விழாவை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடுகிறது. பி.பி.சி. நிறுவனம் தனியாகத் தமிழோசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது. திரைப்படம், இசை,நடனம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் அங்கே அடிக்கடி நடைபெறுகின்றன.

அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்குப் பயன் தரும் வகையில் அங்கு சில பல்கலைக் கழகங்கள் தமிழ்ப் படிப்புக்கும் ஆராய்ச்சிக்கும் வாய்ப்புகள்ஏற்படுத்திக் கொடுக்கின்றன. பெரிய நகரங்களில் தமிழ்ச் சங்கங்கள் செயல்படுகின்றன. ஹிந்து சமய சம்பந்தமான நிறுவனங்களும் கோயில்களும் உள்ளன. வாஷிங்டனிலிருந்து ஒரு தமிழ் மாத இதழும், இன்றைய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக நடத்தப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வாழும் கனடாவில் நூலகங்களில் தமிழ் நூல்கள் உள்ளன. பல இலக்கிய ஆர்வலர்கள் தமிழ் இதழ்களை நடத்தி வருகின்றனர். ஆஸ்திரேலியாவில் மேற்குப் பகுதியில் மட்டும் 5000 தமிழர்கள் இருக்கிறார்கள். அந்த நாட்டில் ஒரு பெருமாள் கோயிலும், தமிழ்ச் சங்கமும் தமிழர் வாழ்வுக்கு வளம் கொடுக்கின்றன. இந்த நாடுகளைத் தவிர கரீபியன் நாடுகளிலும் தமிழர்களிடையே தமிழ்ப் பண்பாடு வளர்வதற்கான வாய்ப்புகள் பல உள்ளன. இந்த நாடுகள் சிலவற்றில் உள்ள தமிழர்கள் அந்தந்த நாட்டின் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். இந்த நாடுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யச் சென்ற இந்தியர்களில் தமிழரும் இருந்தனர்.

தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்ற தமிழர்கள் பெரும்பாலும் வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்கள். இங்கு, தமிழ்க் கல்வியை அறிமுகப்படுத்தியவர்கள் கிறிஸ்தவ சமயப் பிரமுகர்கள். 1984–ம் ஆண்டில் பள்ளிகளில் தமிழ்மொழிக் கல்வி பயிற்றுவிக்க அரசு ஆதரவு அளித்ததன் பயனாகத் தமிழ் மொழி வளர்ச்சிக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. தமிழ்ச் சங்கங்களும், செய்தி இதழ்களும் நடத்தப்படுகின்றன.

மற்றும் சீசெல்சு, மொரீசியஸ், ரீயூனியன் நாடுகளில் உள்ள தமிழர்களைப் பற்றியும் இத்தாலி, ஹாலந்து, மேற்கு ஆசியா போன்ற நாடுகளிலும் உள்ள தமிழர்களின் வாழ்க்கை, தாங்கள் வாழும்நாட்டுடன் அவர்கள் கொண்டுள்ள உறவு, தமிழ்ப் பண்பாட்டைப் பேணிக் காக்க அவர்கள் மேற் கொண்டுள்ள முயற்சிகள் எல்லாமும் புள்ளி விவரங்களுடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உலகத் தமிழர் நிறுவனங்கள் வகையில் 16 அமைப்புகளைப் பற்றிய விவரங்களும் அவற்றின் குறிக்கோள்களும் விளக்கப்பட்டிருக்கின்றன.

அயல் நாட்டார் தமிழுக்குச் செய்த தொண்டு என்ற அத்தியாயத்தில் நமது நாட்டிற்கு வந்து தமிழ் கற்று, தமிழ் இலக்கியத்திற்குப் பங்களித்ததோடு, பழைய ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பராமரித்த பல அறிஞர்களின் சாதனைகளை அறிகிறோம். மொழி, பழக்கவழக்கப் பண்பாடு போன்ற துறைகளில் தமிழருக்கும் அவர்கள் வாழும் அயல்நாட்டினருக்கும் உள்ள ஒற்றுமைகள் விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களைப் பற்றியும் பல செய்திகள் இந்த நூலில் அடங்கியுள்ளன.

1966ம் ஆண்டு கோலாலம்பூரில் தொடங்கி, பல இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகளின் நடவடிக்கைகள் தொடர்பாக உலகத்தில் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களைப் பற்றிய செய்திகள் சேகரிப்பதும் அவசியமாயிற்று. இந்த முயற்சியில் பல நூல்கள் வெளியாகி உள்ளன என்றாலும், உலகத் தமிழர்களைப் பற்றிய முழுமையான விவரங்களைத் தரும் முதல் நூல் இது என்று கொள்ளலாம். இந்த நூலை இயற்றிய பேராசிரியர் முனைவர் எஸ். நாகராஜன் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையில் பணியாற்றும் அனுபவத்தில் மிகவும் பயனுள்ள முறையில் தொண்டாற்றியிருக்கிறார். தமிழர் பண்பாடு உலகளவில் பரவி வளரும் வாய்ப்புகளில் ஈடுபாடு கொண்ட நிறுவனங்களுக்கு இந்த நூல் இன்றியமையாத கருவூலம்.

**சிட்டி சுந்தரராஜன்**

நன்றி: தமிழ்மணி


**UNIVERSAL AGENCY**
இலங்கையிலிருந்து இறக்குமதி
செய்யப்பட்ட உணவு, மற்றும்
பொருள்களுக்கும்
வீடியோ,
ஓடியோ கசெட்டுகள்,
CDகளுக்கும்
நாடுங்கள்
Universal Agency
Promenadenstr. 24-27
(Zolltorpassage)
4040 Neuss1
Teiefon: 02131/23198
Fax: 02131/275640




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

G COM

கோடை
விடுமுறையில்
சிறார்களின்
தொல்லையா?
தவிர்த்திடுவீர்!

பரிசளிப்பீர்!!



# 386SX , 386DX, 486

உங்கள் கம்ப்யூட்டர் தேவை எதுவாயினும் நாடுங்கள்

## கம்ப்யூட்டர் தயாரிப்பிலும், தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதிலும் ஆறு ஆண்டு கால அனுபவம் வாய்ந்த நிறுவனம்

**G-COM COMPUTERS LTD**
**253 Western Avenue, London, W3 OPP, United Kingdom.**

தொலைபேசி : 44-(0)81-992 8384

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புவியியல், அரசியல் எல்லைகள் கலைகளைக் கட்டுப்படுத்துவதில்லை

பரத முனிவரின் நாட்டிய சாஸ்திரத்தை 'பாரதிய நாட்டிய சாஸ்திரம்' என்ற பெயரில், 16 மி.மீ. திரைப்படமாக வெளிக்கொணர்ந்திருக்கிறார் டாக்டர் பத்மா சுப்ரமண்யம்.. வியப்பூட்டும் ஒரு பெரும் கலைப் பொக்கிஷத்தைத் திறந்து, நமக்காகக் காட்சிக்கு விட்டிருக்கிறார்கள்! தேசிய, சர்வதேச காட்சிக்காக 13 அங்கங்களாகத் தயாரிக்கப்பட்டுள்ள இது, இந்திய தொலைக்காட்சி 'தூர்தர்ஷனி'ல் தொடர்ச்சியாக ஒளிபரப்பாகி நிறைவாகியிருக்கிறது. டாக்டர் பத்மாவின் மூத்த சகோதரரான, விவரண படத்தயாரிப்பாளர் திரு.பாலகிருஷ்ணனே இதை 'நிருத்யோதயா' சார்பில் தயாரித்திருகிறார்.

இந்திய கலையுணர்வை வெளிப்படுத்தும் மிகப்பழமை வாய்ந்த- முழுமையான அரங்க நூலான நாட்டிய சாஸ்திரம், சமஸ்கிருதத்தில் 36 அத்தியாயங்களைக் கொண்டது. சுமார் நூறு ஆண்டுகளாக இந்திய, வெளிநாட்டு அறிஞர்கள் சிலர் இதன் பல்வேறு அம்சங்களுக்கு விளக்கமளித்தும் மொழிபெயர்த்துமிருக்கிறார்கள். டாக்டர் பத்மாவினுடைய இந்த முயற்சி, 'தேசி' என்கின்ற தற்போதைய இந்தியாவின் பல்வேறு பிரதேச கலை வடிவங்களுடனும் தொடர்பான 'மார்கி' என்கின்ற பொது வடிவத்தை விஞ்ஞான-செயற்பாட்டு ரீதியில் மீள வடிவமைத்து, அடையாளம் காட்டுகிறது.

உபநிஷதத்திலும் நாட்டிய சாஸ்திரத்திலும் உள்ளது போலவே கேள்வி, பதில்கள், உரையாடல்கள் என்பன மூலம் கனதியான பல அம்சங்களை இனிமையான காட்சிகளுடன் கனிவாக்குகிறார்கள். மீனாட்சி கல்யாணம், சிலப்பதிகாரம், கிருஷ்ணுயதுப்யம் நமஹ போன்ற பத்மாவின் மேடை தயாரிப்புகளும், பல்வேறு நடன வகைகளையும் சார்ந்த பேராசான்கள், கலைஞர்களின் விளக்கங்கள் - செயல்முறைகளும் இடம்பெறுகின்றன.

'கரணங்கள்' தொடர்பான தனது ஆராய்சிமூலம் தற்போதைய இந்திய நடனத் துறையில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்திய டாக்டர் பத்மா சுப்ரமண்யம், இந்த திரைப்படத்தில் அவரின் வலுவான வாதங்களின்மூலம் இன்னும் பல துறைகளில் அவரின் புலமையை வெளி ப்படுத்துகின்றார்.

ஆக ஓரளவுக்கு, நம்பியாண்டார் நம்பி திருமுறைகளை வகுத்தருளியது போன்றதான ஒரு காரியத்தைத்தான் பத்மா செய்திருக்கிறார் என்றே பட்டது. "மிகப் பெரிய வார்த்தை; நெஞ்சத்தை தொட்டுவிட்டது" என்றார் பத்மா.

-அவருடைய இந்த 'பாரதிய நாட்டிய சாஸ்திரத்தை'ப் பற்றியும் அவரின் 'பரத நிருத்தியத்தை'ப் பற்றியும் பத்மா அளித்த செவ்வி இது:

## செவ்வி: டாக்டர் பத்மா சுப்ரமண்யம்

**கேள்வி: இந்த தொலைக்காட்சித் தொடரை நீங்கள் தயாரிக்க நினைந்தது பற்றி சொல்வீர்களா?**

**பத்மா:** இந்த திரைப்படத்தை எடுத்தது என்னவோ ஒரு தெய்வ சங்கல்பம் என்றேதான் நினைத்தாலும், இந்திய அரசுக்கும், இந்திய தொலைக்காட்சி நிறுவனத்துக்கும்-விசேடமாக, மறைந்த பிரதமர் திரு. ராஜிவ் காந்திக்கும் நாம் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். ஏனெனில், அவர் பிரதமராக இருந்தபோது இந்திய சுதந்திரத்தின் 40 ஆண்டுகள் நிறைவையும் நேரு நூற்றாண்டையும் கொண்டாடுவதற்காக ஒரு



குழுஇருந்தது. இந்த வைபவங்களை எப்படிக் கொண்டாடலாம் என்பது பற்றி ஆராய்வதற்காக அந்தக்குழு டெல்கியில் கூடியபோது, இளைஞர்களதும் கலைத்துறையினதும் நோக்கில் இதனை எப்படிக் கொண்டாடலாம் என்று என்னுடைய கருத்தை ஜனாதிபதி திரு.ஆர்.வெங்கடராமன் கோரினார். அப்போது நான் சில கருத்துக்களைக் கூறினேன். அவற்றை அந்தக் குழு முழுமையாக வரவேற்றது.

"இந்தக் கருத்துக்கள் புதுமையானவையாக இருக்கின்றன. இவை எல்லா மக்களையும் சென்றடைய வேண்டும். அதற்கு ஏற்றாற் போல ஒரு தொலைக்காட்சித் தொடராக இதனை நீங்கள் தயாரித்துத் தர வேண்டும்" என்று திரு.ராஜிவ் காந்தி அப்போது கேட்டார். உடனேயே நானும் எனது சகோதரர் பாலகிருஷ்ணனும் அப்போது மத்திய தகவல் அமைச் சராகவிருந்த திரு.பகத்தும் ஒன்றாக கூடி ஆலோசித்து இந்த திரைப் படத்தை தயாரிக்க முடிவு செய்தோம்.

**கேள்வி: என்ன கருத்துக்களை நீங்கள் அங்கு முன்வைத்தீர்கள்?**

**பத்மா:** இந்திய வரலாறு இந்திய கண்ணோட்டத்திலே மீள எழுதப்பட வேண்டும். ஏனெனில், சுதந்திர மடைந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் கூட நாம் இன்னமும் எமது வரலாற்றை மேலைத்தேயத்தவரின் கண்ணோட்டத்திலே தான் படித்துக் கொண்டிருக்கிறோம். இதனால் பல பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக இந்த ஆரிய, திராவிட இன கொள்கை. இதற்கெல்லாம் நமது சம்பிரதாய பூர்வமான சான்றுகளிலே ஆதாரமில்லை. எனவே, பாரதீய கலாச்சாரம் முழு உபகண்டத்துக்கும் பொதுவாகவே இருந்திருக்கிறது. 'உபகண்டம்' என்னும் போது ஓரளவுக்கு இலங்கையையும் சேர்த்தே சொல்கிறேன். பல கண்ணோட்டத்தில் பார்த்ததில் இது என்னுடைய உறுதியான முடிவு; இந்த பொது கலாச்சாரம் இன்னமும் நிலைத்திருக்கிறது. ஆகவே, இந்திய கண்ணோட்டத்தில் கூட, தேசிய ஒருமைப்பாட்டை நாம் உருவாக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை; தேசிய ஒருமைப்பாடு பற்றிய விளிப்புணர்வைத் தான் ஏற்படுத்த வேண்டும். ஆக, அதற்கு நாட்டிய சாஸ்திரம் அத்தியாயத்துக்கு மேல் அத்தியாயமாக உதவுகிறது. அதை இந்த திரைப்படத்தைப் பார்த்தால் புரியும்.

சமஸ்கிருத மொழி பாரதீய கலாச்சாரத்துக்கு ஓர் இணைப்பு மொழியாக இருந்திருக்கிறது. ஏனைய பிரதேச மொழிகளோடு சமஸ்கிருதமும் சமகாலத்தில் நிலை பெற்றிருந்ததோடு, அம்மொழிகளுடன் தொடர்பையும் கொண்டிருந்தது. அதேபோல ஒரு பொதுவான சாஸ்திரீய கலை மரபும் இருந்திருக்கிறது; அதற்கு 'மார்கி' என்று பெயர். அது 'தேசி' என்று



சொல்லக்கூடிய பிரதேச கலைகளுடன் சேர்ந்து ஒன்றாகவே செழிப்புற்று வந்தது.

சுதந்திரத்துக்கு பின்னர் நாம் 'தேசி'களை சீரமைத்து விட்டோம். பரதநாட்டியம், மணிப்புரி, கதகளி, கதக் போன்ற இவை எல்லாமே அழகான தேசிகள். ஒன்றுக்கொன்று எந்த விதத்திலும் குறைந்தவை அல்ல; ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அழகு உண்டு.

அப்படிப் பார்க்கையில் கண்டிய நடனத்தையும் நான் அதிலேதான் சேர்ப்பேன். ஏனெனில் நான் கூறியபடி 'பொது பிணைப்பு' இருக்கிறது. சிங்களவர்களின் நடனம் தொடர்பான சில நூல்களிலே பரதரினதும் நாட்டிய சாஸ்தி ரத்தினதும் பெயர் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆக, இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? மேலும், இலங்கையில் 'கோலம்' என்று ஒரு கிராமிய நடனம் உண்டு. அந்த கோலம் பற்றி 'பஞ்சமரபு' என்கின்ற தமிழ் நூலிலே குறிப்பிடப்பட் டிருக்கிறது. இப்போ,



தமிழ் நாட்டில் அந்தக் கோலம் இல்லாமல் போயிற்று; ஆனால் இலங்கையில் இருக்கிறது.

ஆக, இப்படி கலைகள் என்று வரும்போது நாம் புவியியல், அரசியல் எல்லைகளைக் கடந்து சென்றுவிடுகிறோம். இந்த எல்லைகள் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. கலை, கலாச்சாரம் என்ற கண்ணோட்டம் வரும்போது-அதுவும் ஓர் ஆன்மீக உணர்வும் கலந்து வரும்போது இந்த எல்லைகள் எல்லாம் மறைந்து போய்விடுகின்றன.

**கேள்வி: உங்களுடைய நிகழ்ச்சிகளை நீங்கள் 'பரத நிருத்தியம்' என்று குறிப்பிடுகிறீர்கள். அதற்கான காரணம் என்ன?**

**பத்மா:** என்னுடைய நிகழ்ச்சிகளுக்கு நான் 'பரதநிருத்தியம்' என்று பெயரிட்டிருக்கிறேன். அதற்கு காரணங்கள் இரண்டு. ஒன்று; 'சதுர்' என்று அழைக்கப்பட்டு வந்த நடன வகையைத்தான் 'பரதநாட்டியம்' என்று பெயர் மாற்றம் செய்தார்கள். ஈ.கிருஷ்ணையர், ருக்மிணி அருண்டேல், எனது தகப்பனார் டைரக்டர் கே.சுப்ரமண்யம் போன்ற இவர்கள் எல்லோரும் இணைந்து ஆலோசித்து 'பரதநாட்டியம்' என்று பிரகடனப்படுத்தி 52 ஆண்டுகள் ஆகின்றன. சங்கீத வித்வத் சபையில் ஈ.கிருஷ்ணையர் செயலாளராக இருந்தபோது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றிலே இந்த பிரகடனத்தை செய்தார்கள்.

உண்மையிலே 'நாட்டியம்' என்ற வார்த்தை 'அரங்க கலை' அனைத்தையும் குறிப்பிடும். நாட்டியம் என்றால் அதில் சம்பாஷணை இருக்க வேண்டும். தமிழ்நாட்டின் தெருக்கூத்து இருக்கிறது; அது முழுமையான நாட்டிய வடிவம். என்னைக்கேட்டால் தெருக்கூத்துக்கு பரதநாட்டியம் என்று நான் பெயர் கொடுப்பேன். அனைத்து அம்சங்களிலும் பரதரின் நாட்டியத்துக்கு மிக அணித்தாக அது இருப்பதாக நான் நினைக்கிறேன். சில விஷயங்களில்-உதாரணமாக, உடல் கட்டுப்பாடு போன்றவற்றில் -சாஸ்திரீயத்தை பின்பற்றுவதில் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். இது ஏற்படுவதுதான். ஆனால் இதனைச் சீரமைத்தால் அதன் முழுமையான நாட்டிய வடிவம் நாட்டிய சாஸ்திரத்தை அப்படியே பின்பற்றுவதாக இருக்கும். ஏனெனில், தம் குரலில் தாமே பேசி, தாமே பாடி, தாமே ஆடுவர். இது தான் 'நாட்டியம்'. ஆனால் இப்போ பரதநாட்டியத்தில் அலாரிப்பு என்றால் நாம் வாயே திறப்பதில்லையே. முன்னரெல்லாம் சில தேவதாசிகள் சிறந்த பாடகிகளாகவும் இருந்தார்கள். தாமே பாடினார்கள்.



சுதந்திர மடைந்து 40 ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் கூட நாம் இன்னமும் எமது வரலாற்றை மேலைத் தேயத்தவரின் கண்ணோட்டத்திலேதான் படித்துக் கொண்டிருக்கிறோம்.

சிங்களவர்களின் நடனம் தொடர்பான சில நூல்களிலே பரதரினதும் நாட்டிய சாஸ்திரத்தினதும் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் தெருக்கூத்து இருக்கிறது; அது முழுமையான நாட்டிய வடிவம்.

செய்முறையில் நாம் ஆடுவதற்கு நிருத்யம் தான் பெயர். எனவே சாஸ்திரத்தையும் கற்று விட்டு 'நாட்டியம்' என்று சொல்வதற்கு என் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை.

- பத்மா

ஆனால் இப்போதைய பரதநாட்டிய சம்பிரதாயத்திலே பாடுவதென்பது முடியாத ஒரு விடயம். எனவே இது வெறும் 'நிருத்தியமே' தான்.

அதனாலே நான் நினைத்தேன் யாராவது ஒருவர் தைரியமாகச் சொல்ல வேண்டும். செய்முறையில் நாம் ஆடுவதற்கு நிருத்யம் தான் பெயர். எனவே சாஸ்திரத்தையும் கற்றுவிட்டு'நாட்டியம்' என்று சொல்வதற்கு என் மனசாட்சி இடம் கொடுக்கவில்லை. இது ஒரு காரணம்.

மற்றையது, என்னுடைய ஆடலில் 300 வருட சம்பிரதாயத்திலிருந்து என்னை அறியாமலே நான் வேறுபட்டேன். எனது ஆராய்ச்சியின் அடிப்படையில் எனது நிகழ்ச்சிகளை நான் அமைத் தேன். அது நாம் சாதாரணமாக பார்க்கின் பரதநாட்டியத்தை விட வித்தியாசமானதாக இருப்பதால் ஒரு 'குழப்பம்' ஏற்படாதிருப்பதற்காகவும் அதற்கு வேறு ஒரு பெயர் சூட்டினேன்.

-மாலி

படப்பிடிப்பு: ராஜா





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பழைய நினைவுகள்

## சோ.சிவபாதசுந்தரம்

சுவாமி விபுலானந்த அடிகளின் நூற்றாண்டு நிறைவைத் தமிழகத்திலும் இலங்கையிலும் பல அன்பர்கள் கொண்டாடும் வகையில் கட்டுரைகள் மூலம் தமது பிரார்த்தனையைச் செய்து கொண்டிருப்பதைப் பார்க்க மகிழ்ச்சிதருகிறது. நீண்ட நெடுங்காலமாக அந்த உத்தம புருடனுடன் பழகிய அனுபவங்களை இப்போது அசையிட்டுப் பார்க்கும் போது உள்ளம் பூரிக்கிறது.

1921ஆம் ஆண்டு எங்களூர் கரம்பன் சண்முகநாத வித்தியாசாலையில் ஐந்தாம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கையில் பரிசளிப்பு விழா ஒன்று நடந்தது. எங்கள் பள்ளிக்கூடத்தை, பிடியரிசி மூலம் பொருள் சேர்த்து ஸ்தாபித்த பெருமகன் பிரம்மசாரியாக வாழ்ந்து பின் சுவாமி மகாதேவா என்று வழங்கிய சைவப் பெரியார். இவர் எனது உறவினர்; எனது மாமாவின் மைத்துனர்.

பரிசளிப்பு விழாவுக்கு அந்த ஆண்டு, கல்கத்தா ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவராயிருந்த சுவாமி சர்வானந்தா அவர்களை மகாதேவா அழைத்திருந்தார். அவருடன் கூட எங்கள் விழாவுக்கு வந்தவர் ஆசிரியர் மயில்வாகனம். இவரும் சாமியாராகப் போகிறார் என்று சொல்லிக் கொண்டார்கள். எனது தந்தையாரும் மகாதேவாவும் அப்போது எங்கள் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாக இருந்ததால், மயில்வாகனத்துடன் அவர்கள் பழகும்போது, அன்றைய பரிசளிப்பில் ஆறு பரிசுகளை நான் ஒருவன் மாத்திரம் பெற்றுக்கொண்ட பெருமையில் மட்டக்களப்பு மயில்வாகன வாத்தியாரின் கடாட்சத்தை நானும் பெற்றுக் கொள்ளக் கிடைத்தது.

1938 முதல் 1942 வரை சுன்னாகத்தில் "ஈழகேசரி" வார இதழின் ஆசிரியப் பொறுப்பிலிருந்தபோது, முன்பு மயில்வாகனமாயிருந்த சுவாமி விபுலானந்தரின் அபிமான நட்புரிமை வளர்ந்தது. கேட்ட நேரமெல்லாம் ஏதாவது எழுதி அனுப்புவார். ஈழகேசரி வார இதழுடன் "கல்வி அனுபந்தம்" என்ற பெயரில் ஓர் இணைப்பை வெளியிட்டு வந்தோம். பள்ளி மாணவர்கள் கதைகள், கட்டுரைகள் எழுதிப் பழகுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட இந்த இணைப்பு வெளியீடு, முதல் ஆண்டுநிறைவடையும்போது பரந்துபட்ட செல்வாக்கைப் பெற்றதைக் கண்டோம். இந்தக் கல்வி அனுபந்தம் மூலமாகத்தான் அன்று சிறுகதைகள் எழுதிப் பழகிய கனக.செந்திநாதன், அ.செ.முருகானந்தன், வரதராசன், அ.ந.கந்தசாமி முதலியவர்கள் பின்னால் ஈழத்துத் தலைசிறந்த மறுமலர்ச்சி எழுத்தாளர்களாகத் திகழ்ந்தார்கள்.



## விபுலானந்த நண்பர் பிரான்

ஈழகேசரி கல்வி அனுபந்த ஆண்டுவிழாவில் தலைமை வகிக்கவும் பரிசு வழங்கவும் விபுலானந்த அடிகளை அழைத்திருந்தோம். கச்சிதமாகவும் சிறப்பாகவும் நடந்தேறிய விழாவின் முடிவில் பகல் உணவு வழங்கப்படடது.

நிகழ்ச்சி நடந்த இடம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயக் கட்டிடம். அதன் தலைமை ஆசிரியர் அம்பிகைபாகன். விழா நிகழ்ச்சிகளும் உணவும் முடிந்தது. பின் பக்கக் கட்டிடத்தில் நாங்கள் ஐந்தாறு பேர் விபுலானந்தருடன் பேசிக்கொண்டிருக்கையில் யாரோ ஒருவர் அம்பிகைபாகன் கையில் ரகஸ்யமாக எதையோ மறைத்துக்கொண்டு கொடுத்தார். அடிகளுக்காக வரவழைக்கப்பட்ட அந்தப் பொருள் என்ன என்ற எங்கள் ஆவலை அடிகளாரே தீர்க்கும் வகையில், "பரவாயில்லை, நண்பர் மத்தியில் ரகஸ்யம் எதுவும் வேண்டாம். இங்கே கொடுங்கள்" என்று சொல்லி அம்பிகைபாகன் கையி லிருந்த சிகரெட்டை வாங்கினார். "வடக்கே அல்மோராவில் பிரபுத்தபாரதா இதழின் ஆசிரியப் பொறுப்பிலிருந்த நாட்களில், மற்றைய துறவிகளோடு சேர்ந்து பழகிய பழக்கம்" என்று விளக்கினார் விபுலானந்தர். "நண்பர்கள் மத்தியில் ரகஸ்யம் கூடாது" என்று அந்த மகான் சொன்னது மறக்க முடியாத அனுபவம்.

1945இலோ 46இலோ இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பில் இருந்தபோது, அடிகள் வெள்ளவத்தையில் எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த ராமகிருஷ்ண மடத்தில் தான் தங்கியிருந்தார். அப்போது பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக கடமை பார்த்தார். அந்த நாட்கள் மிக நெருக்கமாகப் பழகிய நாட்கள். சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதையிலுள்ள மறைபொருளையெல்லாம் அடிக்கடி உணர வைப்பார். அல்மோராவில் இருந்த நாட்களில் சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சிந்தித்த ஒரு நாள், "ஈரேழ்தொடுத்த செம்முறைக் கேள்வி" என்ற தொடர் தெய்வதின் வாக்காக ஓர் புதிரை அவிழ்த்துக் கொடுத்ததாகச் சொன்னார்.

"ஈரேழ் தொடுத்த"என்றால் "பதினான்கு தொடுத்த" அதாவது பதினான்கு நரம்புகள் தொடுத்த, "செம்முறைக் கேள்வி" என்பதில் "கேள்வி என்ற சொல் வடமொழியில் கோஷம்" என்றாகும். செம்முறை என்ற சொல்லுக்கு இணையான வடமொழி "ச" என்ற அட்சரத்தைச் சேர்த்தால், "செம்முறைக் கேள்வி" என்பது "சகோஷம்". புதிர் விடுபட்டது!" ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி" என்று இளங்கோவடிகள் சொன்னது, "பதினான்கு நரம்புகள் தொடுத்த சகோடயாழே" என்ற விளக்கத்தை, தமிழும் வடமொழியும் கணிதமும் வான நூலறிவும் தெளிவுறத் தெரிந்த பௌதிகப் பேராசிரியர் விபுலானந்தர் பெற்றுக் கொண்டதில் ஆச்சரியமில்லை.

அடிகளாருடன் அடிக்கடி கலந்துரையாடிய சமயத்தில், அவருடைய யாழ் நூலில் கண்ட விளக்கத்தையனுசரித்து, இலங்கை வானொலியில் "ஆய்ச்சியர் குரவை" காட்சியை நான்கு வீணையில், "குரல் மந்தமாக இளி சமனாக வரன் முறையே துத்தம் வலியா" என்ற சிலப்பதிகாரத தொடரை அப்படியே எடுத்துக் கொண்டு, நான்கு ஸ்ருதியில் நான்கு வீணைகளையும் மீட்டி, ஸ்ருதி பேத அமைப்பில் ஓர் இசைச் சித்திரமாகப் பரீட்சித்த அனுபவமும் மறக்க முடியாதது. வெள்ளவத்தை மடத்தில் அப்போது இருந்த தலைவர் சித்தாத்மாநந்தா என்ற வங்காளி. பொதுவாக வங்காளிகள் தம்மைக் கொஞ்சம் உயர்வாகவே மதிப்பார்கள். விபுலானந்தருக்கு மடத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. வேறிடம் மாறி விட்டார்.

துறவியாயிருந்தாலும் சம நிலையில் நட்புரிமையுடன் பழகிய மேதை, அறிவுக்கடல், தமிழ்ப் பெரியார் விபுலானந்தர், ஈழம் தந்த தெய்வப் பிறவி.

---

# இலையுதிர்கால நினைவுகள்

## வ.ஐ.ச.ஜெயபாலன்

இன்பக் கனவுபோல்
தோன்றி மறைந்தது கோடை.
காற்றுக் குதிரைகளில்
குளிர்
சாட்டை சொடுக்கி வரும்.
வெய்யிற் சுகம் தேடி
வடதுருவப் பறவைகளும்
என் தாய் நாட்டின் திசைநோக்கி
தங்களது இறகசைக்கும்.
வான்நோக்கி
கையுயர்த்தித் தொழுகின்ற
கறுப்பர்களைப்போல
இலையுதிர்த்து நிற்கும்
ஓக் மரங்களின் கீழே
தனித்தலையும் மக்பை1 பறவை ஒன்று
இழிவாக எனை நோக்கும்.
"மக்பாய்! மக்பாய்!
எல்லாப் பறவைகளும்
என்னுடைய தாய் நாட்டின் திசைகளிலே
சூரியனைத்தேடிப் புலம்பெயரும்
குளிர்நாளில்
நீ மட்டுமிந்தத் துருவத்தில் தரித்ததென்ன?"
மக்பையோ உனக்கிவைகள் புரியாது
என்பதுபோல் தலையசைக்கும்.
"எனக்கிவைகள் புரியாதா?"
"உனக்கெப்படிப் புரியும்?

யாழ்நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி
வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினிலே
தமிழ்நாட்டில் என் அம்மா
சுற்றம் பிறாங்பேட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ
வழி தவறி அலாஸ்கா வந்துவிட்ட ஒட்டகம்போல்
ஒஸ்லோவில்
என்ன நம் குடும்பங்கள்
காற்றில்
விதிக் குரங்கு கிழித்தெறியும்
பஞ்சுத் தலையணையா?
பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழியவிட்டு
தொலைதேசம் வந்தவன் நான்.
என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான் பழத்தோட்டம்?
கடந்த வசந்தத்தில்
கின்னரங்கள் மீட்டி
எழிற் கன்னியர்கள் பாடுகின்ற
களியாட்டரங்குகளில்
கிண்ணங்கள் கொஞ்ச, மங்களம் கூறி
மது அருந்தும் வேளையிலும் கூட
துருவத்துப்பறவைகளே தேடுமுந்தன்
தாய்நாட்டை
வழிப்போக்கன்
குண்டி மண்ணைத் தட்டுவதுபோல்
தட்டிவிட்டு வந்தவன் நீ"
மக்பை சொல் தீக்கோலாய்
மனதில் குறிபோடும்.
"நில் மக்பாய்!" என்றேன்.
"நாமறிவோம்
இலங்கைத் தமிழருங்கள் நாகரிகம்
பிறருடைய பேச்சுச் சுதந்திரத்தை
என்றேனும்
ரசித்ததுண்டா நீங்கள்?"
என்றபடி மக்பை
எட்டப் பறந்து செல்லும்.
வானில் ஒரு பரதேசிபோல
குளிர்ந்துபோன சூரியனின் பரிதாபம்.
மண்ணில்
மஞ்சளாய் தரைநரைத்த மரங்களின் கீழ்
பொன்னாய் இறகசைத்து
வண்ணத்துப் பூச்சியாய்ப் பகட்டி
"பேர்ச்" இலைப் பழுத்தல் ஒன்று
புல்லில் தரையிறங்கும்
ஒரு புது அகதி வந்ததுபோல்.
உலகெங்கும்
வாழ்வை இழந்து வசதி பொறுக்குகின்ற
மனிதச் சருகுகளாய்ப் புரள்கின்றோம்.
என்ன நம் தாய்நாடு
ஓயாமல் இலை உதிர்க்கும்
உயிர்ப்பிழந்த முதுமரமா?

மனமுடைந்தேன் பரதேசி.
இது இயற்கையே விரக்தியுறும்
இலையுதிர் காலம்.
இனி நீர்கூடக் கல்லாகும்
நீண்ட குளிர்காலம்.
இன்னும் எத்தனை நாள்
இந்துக்கடல் மடியில்
வாடையும் மீட்ட இசைக்கின்ற
மரகத வீணையென
வடகிழக்காய் நீண்ட என் தாய்நாட்டை
நெஞ்சில் சுமந்து சுமந்து நான் ஏங்குவது?
நாட்டேக்கம் என்னுயிரை
நஞ்சாய் சமிக்கிறதே..
"நெஞ்சம் கலங்காதே" என்றபடி
நெருங்கி வந்த மக்பை
"அதோ தெரியுது பார்" என்று
விமானத் துறையின் வழிகாட்டும்.

1/*மக்பை: குளிர்காலத்திலும் இடம்பெயராத, ஒரு வகைக் காக்கையினப் பறவை./

நன்றி: துருவச் சுவடுகள்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏன் சிரித்தார்?

சி.வைத்தியலிங்கம்



அவர் ஏன் சிரித்தார்? அந்த நகை அறிமுகத்தினால் சாதாரணமாய் முகத்தில் பூக்கும் புன்னகை அல்ல. அப்படி இருந்தால் அதைப்பற்றி யார்தாம் கவனிக்கப் போகிறார்கள். ஒரு வேளை.....? மனத்தில் ஏதேனும் வைத்துக் கொண்டு....? சிச்சீ அப்படியிருக்காது. அப்படி நினைத்தாலே பாவம். என் நெஞ்சுதான் பாழாய்ப் போன நெஞ்சு. ஆனல், அந்தக்கண்கள்...அவைகளுமா பொய் சொல்லும்? கண்களின் கடையிலே ஒளிந்து நின்று குறும்பு செய்த பார்வை?

சின்னம்மா தோட்டத்திலே கீரைகொய்து தன் முன்றானையில் போட்டுக் கொண்டிருந்தாள். கோபாலபிள்ளை வரப்பு வழியே தன் பயிர்களைப் பார்த்த வண்ணம் வந்தார். அப்பொழுது தான் சின்னம்மா தலை நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். அவர் சிரித்தார். சிரித்தது இதுதான் முதல் தடவை. இன்னும் வெவ்வேறு தருணங்களில் கோபாலபிள்ளை அவளை மேலும் பார்த்துச் சிரித்தார்.

சின்னம்மாவுக்கு இதுஒரு புரியாதபுதிர் போல் இருந்தது. தோட்டக் கிணற்று நீர் போல் தெளிவாக இருந்த அவள் உள்ளத்திலே சிற்றலைகள் தோன்றத் தொடங்கின. அவர் ஏன் சிரித்தார்? தோட்டத்திலிருந்து சின்னம்மாவின் குடிசையைப் பார்க்கலாம். கூப்பிடு தூரத்திலிருந்த பனந்தோப்பை வாரி அணைத்துக் கொண்டு செல்கிறது ஒரு வெள்ள வாய்க்கால். அதைக் கடக்க வேண்டியதுதான். அந்தப் பனந்தோப்பில் கீழே வீழ்ந்து கிடக்கும் காவோலைகளுடன் ஒரு காவோலை போல் கீழே வீழ்ந்து கிடக்கிறது அவள் குடிசை. அவ்வளவு சிறிய எளிய குடிசை அது. அதில் தான் சின்னம்மா தன் புருஷன் சின்னப்பனுடன் குடித்தனம் செய்து வருகிறாள்.

கோபாலபிள்ளைக்கு நல்ல நிலபுலங்கள் இருந்தன. அவருடைய நிலங்களில் ஒன்றைக் குத்தகை எடுத்துச் சின்னப்பன் பயிர் செய்து வந்தான். சின்னம்மா கீரை, காய்கறி வகைகளை வீட்டுக்கு வீடு கொண்டுபோய் விற்று வருவாள். வரும்படியை பற்றிக் கேட்க வேண்டாம்– சின்னம்மாவின் கந்தல் புடவையும், சின்னப்பனின் உருக்குலைந்த தேகமுமே பதில் சொல்லும்.

ஏழைமையில் கிடந்து உழல்பவர்கள் செய்யும் ஒரு தொழிலும் உருப்படாது சீரழிந்து போய் விடுகிறது. இயற்கையின் சக்திகளும் அவர்களுக்கு எதிராக செயல்பட்டு, இருப்பதையும் சூறையாடிக்கொண்டு போய் விடுகின்றன. அவர்களின் மனக்குடம் நிறையாமல் வாழ்க்கை விரசமாகி வறண்டுபோய் விடுகிறது. இது உலக விசித்திரங்களுள் ஒன்று.

இருந்தாலும் அவர்கள் வாழ்க்கையிலே மலர்ச்சியும், பூரிப்பும் நிறைந்திருந்தன. சின்னம்மாவுக்கு அவள் ஏழைக் கணவனும், சிறிய குடிசையும் பனந்தோப்புமே அரும்பெருநிதியம். சின்னப்பனுக்குச் சின்னம்மாவே எல்லாம். அவர்களிடம் ஒன்றுமே இல்லாவிட்டாலும் எல்லாம் இருந்தது..

இங்ஙனம் நீர் ஊற்றுப்போல் தெளிவாய் ஓடிய அருவியிலே யாரோ ஒருவன் ஒருகல்லை வீசி எறிந்துவிட்டான். குமுழிகளும், சிற்றலைகளும் எழுந்து கொண்டிருந்தன. கோபாலபிளைக்கு நாற்பது வயசாகியும் இன்னும் கல்யாணமாகவில்லை. வாழ்க்கைப் புயலுக்கும், சுழலுக்கும் அஞ்சி விவாகம் செய்யவில்லை என்று அவர் சினேகிதர்கள் கேலிபண்ணுவார்கள். அவர் அவைகளைப் பற்றிக் கவலைப் படமாட்டார், உண்மையில் அவர் வாழ்க்கையை மிகவும் நேசித்தார். திரைக்குப் பின்னால் இருந்து மதுவுண்ணும் அனுபவம் அவருக்கு நிறைய இருந்தது. சின்னம்மா அவர் வீட்டுக்கு அடிக்கடி காய்கறிச் சுமையோடு போவாள். அவருக்கு அவளைக் காணும்போது விவித உணர்ச்சிகள் வேகமாய் சிறகடித்து வெளியில் வரத் துடித்துக்கொண்டிருக்கும்.

கோபால் தம்பலகாமத்தில் உள்ள தம்வயல்களை மேற்பார்வை பார்த்து வர ஓர் ஆளைத் தேடிக்கொண்டிருந்தார். சின்னப்பன் தான் அதற்குத் தகுந்தவன் என்று அவர் ஏன் நினைத்தார்?

சின்னப்பன் பயந்து போனான். சின்னம்மாவின் வாய் ஒரு கேள்விக்குறிபோல் திறந்து நின்றது. ஒரு நாளும் வராத .கோபாலபிள்ளை, அவர்கள் குடிசையின் முன் வந்து நின்றார்.

"சின்னப்பா, நீயும் இரவும் பகலும் மண்ணைக் கிண்டிக் கொண்டிருக்கிறாய். ஒன்றையும் காணவில்லை. தம்பலகாமத்திலே என் வயல்களைப் பார்க்க ஒருவருமில்லை. வருகிறவர்களும் பொய் புரட்டுக்காரராய் இருக்கிறார்கள். நீ போய் சில மாசங்களுக்கு அங்கே நின்றால் நல்லது. என்ன சொல்லுகிறாய்?"

சின்னப்பனுக்கு 'திக்' என்றது. சின்னம்மாவைப் பார்த்தான். அவள் முகத்தைக் கவிழ்ந்து கொண்டு ஒரு சிதைந்த சித்திரம் போல் நின்றாள். கோபாலபிள்ளைக்கு விளங்கி விட்டது.

"அவளைப்பற்றி யோசிக்க வேண்டாம் சின்னப்பா. நான் இருக்கிறேன். ஏதேனும் மாசாமாசம் கொடுத்து விடுகிறேன். அவளும் கெட்டிக்காரி. சமர்த்தாய் எல்லாம் பார்த்துக் கொள்வாள்"

கோபாலபிள்ளை போய்விட்டார். இது அவரது கட்டளையா? இல்லை, சின்னப்பன் அப்படி நினைத்தான்.

ஊரிலே பெரிய பணக்காரர். அவர் வாக்கு எவ்விடத்திலும் செல்லும். குடியிருப்பது அவர் பனந்தோப்பில், தோட்டக் குத்தகைப் பணம் இரண்டு வருஷமாய் பாக்கி நிற்கிறது. அவரை எப்படிப் பகைப்பது?

சின்னப்பன் தம்பலகாமத்துக்கு புறப்படும் போது "சின்னம்மா" நீதானடி எனக்கு சகலமும். உன் நினைவே எனக்கு ஒவ்வொரு நிமிஷமும் தாங்கமுடியாத வேதனை தரும். நீ என்னை மறந்திடுவாயா? என்று கேட்டான்.

இந்தக் கேள்வி அவன் வாயிலிருந்து தவறி வந்து விட்டது. அதற்கு மறுமொழியை அவன் எதிர்பார்க்கவிலலை. போய்விட்டான். அத்தருணம் சின்னம்மாவினால் ஒன்றும் பேச முடியவில்லை. அவள் எலும்பும் தசையும் உருகித்தவித்தாள்.

பின்புதான் "பாவி, கேட்ட கேள்விக்கு அவர் மனம் குளிர பேசாமல் இருந்து விட்டேனே" என்று நினைத்து நினைத்து மனம் கரைந்து போனாள்.

கோபாலபிள்ளையின் விருப்பப்படி சின்னம்மா தினமும் அவர் வீட்டுக்கு காய்கறி வகைகள், மற்றும் சாமான்கள் யாவும் வாங்கிக் கொண்டுபோய் கொடுத்துவந்தாள். சின்னம்மாவை ஒரு நாளேனும் காணாமல் இருக்க அவரால் முடியவில்லை. அதற்கு இது தான் அவர் செய்த வழி.

அவர் அவளிடம் பணம் கொடுக்கும் போது சில வேளைகளில் அவர் கை, அவள் கைகளின் மீது பட்டுவிடும். கோபாலபிள்ளை சிலிர்த்துப் போவார். அவளுடன் ஒரு பரிகாசப் பேச்சு, ஒரு புன்னகை, ஒரு கண் சிமிட்டு, பிள்ளையின் மனம் பூரித்துப் புளகாங்கிதமடையும்.

சின்னம்மாவுக்கு எரிச்சலாயிருக்கும், அவர் மேலும் பேச வேண்டும் போலவும் தோன்றும். "மூன்று மாதமாய்ப் போச்சு, போனவர் ஒரு கடிதமாவது போட்டிருக்கலாம். காட்டுரிலே காய்ச்சலோ, என்ன கஷ்டமோ"–பெருமுச்செறிவாள்.

சின்னப்பன் எழுதிய கடிதமெல்லாம், சாம்பலாகியதை, பாவம் சின்னம்மா எப்படி அறிவாள்?

தன் கணவன் கடிதம் போடவில்லையென்று சின்னம்மா பேசாமல் இருந்து விடவில்லை. யாரோ ஒருவரைக் கொண்டு இரண்டு மூன்று கடிதங்கள் எழுதி கோபாலபிள்ளையிடம் அவருடைய கடிதத்துடன் வைத்து அனுப்பும்படி கொடுத்திருந்தாள். ஆனால் அவர் அனுப்புவாரா?

'போனாரே, அவளும் தனிச்சிருக்கிறாள். பெண் பிள்ளை, உற்றாரோ உறவினரோ, ஏதோ அள்ளிக் கொடுக்கவேண்டாம். எப்படி இருக்கிறாள் என்றொரு கடுதாசி போடலாமல்லவா? பிள்ளையவர்கள் இருக்கிறாரே, யாரோ பிறத்தியான். அவருக்கு என்ன கரிசனம், எவ்வளவு அன்பு? அதில் ஒரு பாதி இவருக்கு..... இப்படிச் சின்னம்மாவின் மனம் அங்கும் இங்குமாய் ஊசலாடிக் கொண்டிருந்தது.'

சின்னப்பன் போய் ஒரு வருஷமாகப் போகிறது. அவனைப் பற்றிய தகவல் இவளுக்கு ஒன்றும் தெரியாது. தனிமையின் வெம்மை அவளைத் தாக்கியது. அவளால் எத்தனை நாட்களுக்கு இந்த ஏகாந்த வாழ்வின் கொடுமையைத் தாங்க முடியும்?

ஒரு நாள் கோபாலபிள்ளை அவளை அணுகி, "சின்னம்மா நானும் இங்கே தனிமையில் கஷ்டப்படுகிறேன். நீயும் அங்கே உன்குடிசையில் தனிய எத்தனை நாட்களுக்கு இருக்கப்போகிறாய். என் வீட்டுக் காரியங்களுக்கும் துணையாய் இருக்கும். இங்கே வந்து விடேன்" என்று சாடையாய்க் கேட்டார்.

## சிறுகதை

சின்னம்மா திடுக்கிடவில்லை. அவள் இதை எதிர்பார்த்திருந்தாள். ஒன்றும் பேசாமல் தன் குடிசைக்குப் போய் விட்டாள். தம்பலகாமத்துக்குப் போன சின்னப்பனுக்கு பெருந்திகிலைக் கொடுத்தது, சின்னம்மாவின் மௌனம். கோபாலபிள்ளை அவனுக்கு எழுதிய கடிதங்களும் அவனுக்கு சமாதானம் கொடுக்கவில்லை.

"நான் எழுதிய கடிதங்களுக்கு அவள் ஏன் மறுமொழி தரவில்லை. அவளைப் போய்க் காணலாமென்றால் கோபாலபிள்ளை இன்னும் சிலமாதங்கழித்து வரலாம். அவள் நல்ல சுகமாய் இருக்கிறாள் என்று ஏன் தடுக்கிறார். அவர் கட்டளையை எப்படி மீறுவது? அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. இன்னும் ஒருவாரம் பொறுத்துப் பார்ப்பம் என்று மனைசத் தேற்றிச் சமாதானப் படுத்தி கொண்டான்.

'ஒரு நாளைக்கா, இரண்டு நாளைக்கா? எத்தனை நாட்களுக்கு நான் தனிமையில் திண்டாடுகிறது. வருஷமும் ஒன்றாய்விட்டது. அவரைப்பற்றிய தகவல் ஒன்றுமே இல்லை. ஐயோ, அவர் எங்கே? கோபாலபிள்ளை தன் வீட்டில் வந்து இருக்கும்படி கேட்கிறார். அவருடன் நான் போய்இருந்தால் செல்வாக்கும், பவுசும்.... ஆனால் ஊர் சிரிக்குமே? ஓ, என் வறுமைப்பிணி?

அந்த நள்ளிரவிலே சின்னம்மா தோட்ட வெளி ஊடாகப் போகும் பொழுது இந்த எண்ணங்களே அவள் மனத்தைக் கலைத்துக் கொண்டிருந்தன. அவள் கோபாலபிள்ளையின் வீட்டை நோக்கிப் போகிறாள். அவருடன் இருக்க எண்ணித்தான் வெளிக்கிளம்பினாள்.

அவள் போகும் வழியிலே தங்கள் தோட்டத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும். தோட்டத்திலே முன்னர் சின்னப்பன் வழக்கமாய்க் கஞ்சி குடிக்கும் இடத்தைத் தாண்டிக் கொண்டிருந்தாள். அத்தருணம் மெல்லிய தென்றல் வீசிக் கொண்டிருந்தது. சின்னம்மாவுக்கு அவள் கணவன் அங்கே நிற்பது போல் தோன்றியது. அவள் உடல் நடுக்கமெடுத்தது. தான் ஏதோ மகா பாவத்தைச் செய்வதாயும், உலகம் முழுவதுமே தன்னைத் தூற்றிக் கேலி செய்வதாயும் உணரலானாள். இந்த உணர்ச்சி கனவு போல் மறையவே, திரும்பவும் கோபாலபிள்ளையின் தோற்றப் பொலிவு, பணம், சீர் சிறப்பு, புது வாழ்க்கை எல்லாம் கண் முன் வந்தன. தைரியங் கொண்டு மேலும் நடந்தாள்.

ஒரு கணம் அவள் மனச்சாட்சி அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும். 'துரோகமா, என்புருஷ ருக்கா,அவர் திரும்பி வருவாரா? சீ! மானங்கெட்டவளே,

19ம் பக்கம் பார்க்க

**உலகம் என்ன சொன்னால் நமக்கென்ன.பயப்பட வேண்டுமா, ஏன்? சில நாட்கள் வாயில் வந்தபடி பேசு வார்கள். நாளைக்கு எல்லாம் சரியாய்ப் போய்விடும். இது தான் உலகம்.........**

தமிழ் சிறுகதை வரலாற்றிலே மணிக்கொடி குழுவைச் சேர்ந்த படைப்பாளிகளோடு ஈழத்துப்படைப்பாளிகளும் யாழ்ப்பாணத்து ஈழகேசரி இதழ் மூலம்சிறப்பான கதைகளை எழுதி வெளியிட்டது இலக்கிய வரலாற்றில் கவனிக்கப்பட வேண்டியதொன்று. ஈழகேசரியில் புதியவகைச் சிறுகதைகளை எழுதி யவர்ககளில் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், க.தி.சம்பந்தன் ஆகிய மூவரும் "ஈழத்து சிறுகதை மூலவர்கள்" என்று மதிக்கப்பெற்றவர்கள். ஈழகேசரி மூலம் பிறந்த இவர்கள் தமது கீர்த்தியை நிலைநாட்டியது தமிழ்நாட்டு சஞ்சிகைகள் மூலம்; முக்கியமாக கலைமகள் மூலம்தான். அமரர் வைத்தியலிங்கம் தமது ஆதர்ச எழுத்தாளர் கு.ப.ரா என்று சொல்லிக் கொள்வார். அந்தக்கூற்றின் உண்மையை அவரது கதைகளில் காணப்படும் பாத்திர வார்ப்புக்களில் காணலாம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'தமிழோசை' சங்கரண்ணா


# மாதம் ஒரு மந்திரம்

குறிக்கோள் ஒன்றை நாடியே இந்த உலகம் சுழன்று கொண்டிருக்கிறது. உண்மையில் விளையாடிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை! ஒவ்வொ ருவருக்கும் ஒரு குறிக்கோள், இலட்சியம்! மனித குலத்துக்கு மட்டு மில்லை, பூமியில் உள்ள எல்லா உயிர்க்குலங்களும், சேதன, அசேதனப் பொருட்களும் அறிந்தோ, அறியாமலோ, புரிந்தோ புரியாமலோ இந்த அலகிலா விளையாட்டை, விளையாட்டாகவே விளையாடிக் கொண்டிருக்கின்றன! இது 'விம்பிள்டன்' பருவம்! ஒவ்வொரு 'டென்னிஸ்' வீரரும், வீராங்கனையும்



'வெற்றியீட்டுவது' என்ற குறிக்கோளில் ஆடுகிறார்கள்! 'ஒலிம்பிக்'–உலக மஹா அடலர் விழா வரப்போகிறது. அதில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் இப்போதே பயிற்சிக் களத்தில் உடலையும், உயிர் மூச்சையும் கசக்கிப்பிழிந்து கொண்டிருக்கிறார்கள்.

உடல் ஆற்றல்–அடலர் திறப்போட்டி இது!....மானிடர் திறத்தை மட்டும் அளாவியது. சிறுத்தைப்புலியின் வேகத்திற்கு



முன்னால் மானுடக் கால்கள் போட்டியிட முடியாது; வான் பருந்தின் 'கூரிய' – தொலைநோக்கும் பார்வை நமக்கு வராது! தடிப்பல ஆற்றலில், தண்ணீருக்குள் இருக்கும் முதலையையோ, வனத்தில் உலவும் யானையையோ, காண்டா மிருகத்தையோ விஞ்ச முடியாது! நீச்சலில் ஓர் 'அயிரை' மீனின் வல்லமையை நாம் பெறமுடியுமா, முடியாது!

என்றாலும் மனிதனே உயர்ந்தவன்; சிறந்தவன், அறிவின், பகுத்தறிவின் பலம், ஆன்மபலம் அவனை நிலவுலக ஜீவராசிகளில் உயர்த்தியிருக்கிறது! பூமி ஜனித்து, பல்லாயிரம் கோடி ஆண்டுகளாக–உயிர்க்குலச் சங்கமத்தின் 'உன்னத இனமாகத்' திகழ்ந்து வருகிறான் மனிதன்!

இயற்கையின் இரகசியங்கள் அனைத்தையும்–ஊடுருவிக் கண்டறிந்த அறிவியல் மேம்பாட்டில் அவனுக்கு இணை எந்தப் பிராணியும் இல்லை!...இத்தனை மேம்பாடு இருந்தும் மனிதனைப்போலத் துயரத்தில் உழலும் ஒரு பிறவி உண்டா?...பெரிய கேள்வி இது?... 'இன்பம்' என்பதற்கு என்ன வரையறை? அதைப்போலத் 'துன்பம்' என்பதும் விளக்கவொண்ணா விந்தை என்று நீங்கள் சொல்லலாம்!

ஒருவனுக்கு இன்பம்; மற்றவனுக்கு 'அதே' பொருள் துன்பாக இருக்கலாம்! ஒருவர் கண்ணுக்கு 'எழிலாகப்'படுவது, பிறிதொருவனுக்கு 'எழிலற்றதாக' இருக்கும். அதேபோல் 'அமைதி என்பதும்!

வாழ்க்கை எனும் போராட்டத்தில், விளையாட்டில் எந்தக் குறிக்கோளுக்குமே 'உண்மையான' பொருள் இலங்குவதாகத் தெரியவில்லை.

நாம் 'நன்மை' என்று கருதுவது, பலருக்கும் தீமையாகப் படலாம்.

எனவே 'புரைதீர்ந்த நன்மை' என்று நாம் எதனை வரிப்பது; அக்குறிக்கோள் நோக்கில் வாழ்க்கையை நடத்துவது என்ற கேள்வி, இன்று நேற்று ஏற்பட்டதில்லை. ஆதிநாள் தொட்டே நம்மை அலைக்கழித்து வருவது!

இன்றைய உலக அரங்கை ஓர் கண்ணோட்டம் செலுத்தினால் எங்கும் நெருக்கடி!... அமைதியின்மை! எல்லைப்போர், இனப்போர், இயற்கை உற்பாதங்கள், கொலை, களவு, திருட்டு என்ற செய்திகளே காதில் விழுகின்றன, கண்களில் படுகின்றன! ஒவ்வொரு பூசலுக்கும், போராட்டத்திற்கும் தர்ம நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன!

வீட்டுக்கு வீடு வாசற்படி! பிரச்சினை இல்லாத வீடோ, குடும்பமோ இல்லை. ஏன், அரண்மனையிலும் இல்லை. வனதேவதைக் கனவுக் கல்யாணம் போல–இளவரசர் சார்ல்ஸ்–டயானா திருமணம் நடந்தது. அரண்மனை வாழ்வு; போக



போக்யங்கள்! ஆள் – அம்பு அரவணைப்புகள்! நினைத்தால் போதும், எல்லா 'ஆடம்பரங்களும்' நொடிப்பொழுதில் கிடைக்கும். இத்தனைக்கு மத்தியிலும்–'வேல்ஸ் இளவரசிக்கு' வாழ்க்கை சுகப்படவில்லை! வேலம்முள் படுக்கையாக உறுத்துகிறது! 'இளவரசி' மகிழ்ச்சியுடன் இல்லை என்பதாக –'உண்மைக்கதை' என்று வெளியிடப்பட்ட, வாழ்க்கை வரலாற்று நூலைக் கொண்டு நெய்த செய்திச் சேலை, நார்நாராகக் கிழிக்கப்படுகிறது! இளவரசியார் 'எது இன்பம், மகிழ்ச்சி' என்று கருதுகிறார் என்பது

## அலகிலா விளையாட்டு

பெரிய மர்மக் கேள்வியாக–முடிச்சாக விளங்குகிறது!

'அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி' என்ற உலகப்புகழ், முடிக்குரிய - தலையில் சிறுதிடல் இருப்பினும் கூட–இளவரசர், மன்னனாகப் போகிறவர், மணவாளன், பத்தாண்டுத் திருமண இல்லற வாழ்வில் அற்புதமான இரண்டு ஆண்குழந்தைகள்! இவற்றிற்கு மேலே எதனை, என்னத்தை– 'அன்னம்' எதிர்பார்க்கிறார்? இன்னமும் பலருக்குப் புரியவில்லை!

கஞ்சியைக் குடித்துக்கொண்டாவது, கவலையற்ற வாழ்வு வாழும் சாதாரண குடிமகன் – 'பிறவிப்' பயனை உள்ளபடியே உணர்ந்தவன் என்பது தெளிவு.

பேராசை வயப்பட்டு, பெரிய எடுப்புடன் 'மனிதகுலம்' ஆடும் ஆட்டத்தின் காரணமாகத்தான் இன்றைய உலகம், 21–ஆம் நூற்றாண்டுக்குள் நுழைய இருக்கும் தருணத்தில் ஆட்டம் காணத் துவங்கியிருக்கிறது.

கடந்தகாலப் பாடங்கள், இறந்த காலப் பாடங்களாகிவிட்டன. நிகழ் காலம், எதிர்காலம் என்பதெல்லாம் பள்ளிப்பாட நூல்களின் இலக்கணப் பக்கங்களில் மட்டும் அச்சாகி, மாணவர்களை அச்சுறுத்திக் கொண்டிருப்பதைப் போல, மன்பதையையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

நாடு நகரங்கள், ஊர்க்காடுகள், கோயில் குளங்கள் எல்லாம் ஒரே குப்பை, கூச்சல்! சுத்தம் என்பது



'சுத்தமாக' இல்லை என்ற சத்தங்கள்! 'மண்ணில் தெரியுது வானம்!' என்றார் அல்லவா நம்முடைய மகாகவி பாரதி!... வானத்தின் கருணை



மழையால் இந்த வையம் பசுமையுடன், பண்புடன் பூத்துக் குலுங்குவது ஒருபுறம் இருக்கட்டும்; மண்ணகத்தில் எவ்வளவு அசுத்தமோ, குப்பையோ, அதனைப்போல வானக வெளியிலும், காற்றுமண்டலத்திலும் ஒரே கறை!...... கரை காண முடியாத கறை. 'Pollution'. பூமி தன் தலையையே காப்பாற்றிக் கொள்ளத் தவியாய்த் தவிக்கும் காட்சி!

அன்று– திங்களிலே முதல் மனிதன் திருவடிகள் பதித்தபோது–, அப்பாலுக்கு அப்பால், அப்போலோ–பதினொன்று விண்கலத்தில் சென்று சந்திர மண்டலத்தரையிலே இறங்கிய நீல் ஆம்ஸ்ட்ராங், ஹுஸ்டன்'அமெரிக்க விண்வெளி ஆய்வு' நிர்வாகக் கேந்திரத்தைக் கூப்பிடும் போது 'ஹலோ, அமெரிக்கா! என்று விளியாமல், 'Hello, Earth !'என்று கூப்பிட்ட குரல் இன்னும் காதுகளில் ஒலிசெய்கிறது!

'நமது தாயகம் பூமி' என்ற ஞானம் –விஞ்ஞானங்களையெல்லாம் விடப் பெரிய மெய்ஞானம் என்பதை உலக நாடுகள் உணர்ந்தால்– இன்றைய 'அரசியல், பொருளியல்,' நெருக்கடிகள்,ஆட்டபாட்டங்கள்,கழைக்கூத்துக்கள் எல்லாம் இப்படித் தலைவிரித்து ஆடுமா?...

தனிமரம் தோப்பு ஆகாது:தனிமரம் இல்லையேல் 'தோப்பு' உருவாகவும் செய்யாது. தனிமனித 'மனங்களின்' செம்மை, இந்த பூமியின் செம்மைக்கு



அடித்தளம் என்பதை மறக்கலாகுமோ?

இந்தத் 'தனிமனிதச்' செம்மையை எங்ஙனம் உருவாக்குவது?...அடுத்த இதழில் பார்க்கலாம்.

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே.
–திருமந்திரம்–


# VASAN LITHO PRINTER

We are offering Four Colour Offset
Litho Printing, Design, Typesetting and Desk Top Publishing
using quality equipment such as
**ORIGINAL HEIDELBERG**
Printing Machines

**QUALITY, SPEED & COMPETITIVE RATES**

Business Cards, Letterheads, Complement slips,
N.C.R Forms, Leaflets, Invoices
Wedding Cards, Menu Cards, Show Tickets,
Labels, Envelopes, Calendars,
Programme Brouchures, Magazines and Books.

**ALL PRINTING SERVICES UNDER ONE ROOF**

**60 P PITCAIRN ROAD, MITCHAM, SURREY CR4 3LL**

**TEL: (081) 640 4366**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவில் ஜனாதிபதி ஆட்சிமுறை வருமா?



சென்ற வருடம் யூன் மாதம் இதே நேரம் இந்தியப் பிரதமர் யார்? என்ற கேள்வி எழுந்தது. இந்திரா காங்கிரஸ் கட்சியின் இடைக்காலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதியவர் நரசிம்மராவ் பொதுக் கருத்து அடிப்படையில் பிரதமராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி ஏற்றார். அப்பொழுது தலைநகர் டில்லியில் ஒரு ஊகம் உலா வந்தது; அதாவது, "1992-யூலையில் ஜனாதிபதி வெங்கட்ராமன் பதவி விலகும் பொழுது நரசிம்மராவ் ஜனாதிபதி ஆவார்; சரத் பவார் பிரதமர் ஆவார்"-என்று. ஆனால் இன்றைய சூழ்நிலையில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதை முடிவு செய்யும் பொறுப்பில் இருக்கிறார் நரசிம்மராவ். கட்சி நிர்வாகக் குழு அவருக்கு அந்த அதிகாரத்தை வழங்கி இருக்கிறது. அவர் யாரை ஜனாதிபதியாக்க விரும்புகிறார் என்பது இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரம் வரை முடிவாகவில்லை. எனினும் ஒன்று மட்டும் நிச்சயம்: நரசிம்மராவ் ஜனாதிபதி ஆக மாட்டார்.


### பலவீனமே பலம்

சரி, அவர் யாரை மனதில் வைத்திருக்கிறார் என்பது அவர் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே தெரியுமா என்பது சந்தேகம். மனிதர் மிகவும் அழுத்தமானவர்; நிதானத்தின் மறு உருவம். அனைவராலும் ஏற்கப்படக்கூடிய நபர் பற்றி அவர் எதிர்க்கட்சிகளின் முக்கிய பிரமுகர்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார். வெளிப்படையாக அவர் இதுவரை எவரையும் அடையாளம் காட்டவில்லை. ஆனால் இப்போதைக்கு அனைவராலும் ஏற்கப்படக் கூடியவர் அவரே! கட்சிகள் என்று பார்த்தால் காங்கிரஸ் கட்சியிலேயே அவருக்கு எதிரான எண்ணம் கொண்டவர்கள் உண்டு. அர்ஜுன் சிங், சரத் பவார் போன்ற அமைச்சர்களுக்கு என்று தனித்தனி கோஷ்டிகள் உண்டு. அவர்களில் ஒருவரை மற்றவருக்குப் பிடிக்காது என்பது அவர்களது பலவீனம். அதுவே நரசிம்மராவின் பலம். கட்சித்தலைவரானது, பிரதமரானது, அந்தப்பதவியில் ஓராண்டு காலம் ஓட்டியது, அதிரடிப் பொருளாதார நடவடிக்கைகள் எடுத்தது- எல்லாவற்றிலுமே பிறரது பலவீனமே நரசிம்மராவின் பலம். அது ஜனாதிபதி தேர்தலிலும் கைகொடுத்து விடும் என்று நம்பலாம். அதற்குப் பிறகு அவருக்கு வேறுவிதமான தலைவலிகள் ஏற்படலாம். அது வேறு விஷயம்.

ஆக, காங்கிரசிலேயே சிலர் அவருக்கு 'அனுகூல சத்ருக்கள்' என்ற முறையில் நிஜமான எதிர்க்கட்சிகளாக இருந்தாலும் அசல் எதிர்க்கட்சி என்ற பெருமை பாரதீய ஜனதா கட்சிக்கே. முன்பு ஜனதா தளத்தின் வி.பி.சிங்குக்கு வெளியிலிருந்து ஆதரவு தந்த பாரதீய ஜனதா கட்சி இப்பொழுது நரசிம்மராவுக்கு நட்பு என்றும் பகை என்றும் சொல்லிவிடாதபடிக்கு நடந்து கொண்டு வருகிறது. ராம ஜன்ம பூமிக்காக அப்போதைய பா.ஜ.க. தலைவர் எல்.கே.அத்வானி நடத்திய யாத்திரையினால் வி.பி.சிங் அரசு ஆட்டம் கண்டது. ஆனால் நரசிம்மராவ் அரசியல் சதுரங்கத்தில் ஓசை எழுப்பாமல் காய்களை நகர்த்தி இப்போதைய பா.ஜ.க, தலைவர் முரளி மனோகர் ஜோஷியின் 'ஏக்தா யாத்திரை' பெயரளவுக்கு வெற்றி பெற காஷ்மீர் மாநிலத்தில் கொந்தளிப்புக்கும் வன்முறைக்கும் இடையே பா.ஜ.க.தலைவர்களுக்கு ராணுவப் பாதுகாப்பு அளித்தார். அந்த யாத்திரை சேர்வான்டிஸ் என்ற ஆங்கில எழுத்தாளன் படைத்த "டான் க்விக்ஸாட்" என்பவரின் கேலி யாத்திரை போன்றதே. ஆயினும் அதை நரசிம்மராவ் கொஞ்சமும் விமரிசிக்கவில்லை. பா.ஜ.க. வின் கௌரவத்தைக் காப்பாற்றினார்.

அது மட்டுமல்ல, அதற்கு முன்பே துணை சபாநாயகர் பதவியில் பா.ஜ.க. நபர் தேர்ந்தெடுக்கப்பட உதவினார். முதிய பா.ஜ.க. தலைவர் (எல்லாக் கட்சியிலுமே தலைவர்கள் முதியவர்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை!) அடல் பிஹாரி வாஜ்பாயிக்கு பத்மவிபூஷண் என்ற தேசீய விருதினை வழங்கி கௌரவித்தார்.

இப்படியாக நரசிம்மராவ் பா.ஜ.க. வுடன் அதிகம் இழைகிறார் என்பதனால் பா.ஜ.க. வை மறைமுகமாகக் கண்டிக்கும் வகையில் ஏப்ரல் மாதம் திருப்பதியில் நடைபெற்ற காங்கிரஸ்கட்சியின் அகில இந்திய மாநாட்டில் அமைச்சர் அர்ஜுன் சிங் கொண்டு வந்த தீர்மானத்திற்கு நரசிம்மராவ் கொஞ்சமும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. இதற்கு பதிலடியாக பா.ஜ.க.வும் மறுமாதம் குஜராத் மாநிலத்தில நடைபெற்ற தனது தேசீய



மாநாட்டில் காங்கிரசைக் குறை கூறியது. இதுவே இப்போது இந்த இரண்டு கட்சிகளிடையேயான உரசல். இந்த உரசல் ஜனாதிபதி தேர்தலின் போது எப்படி வெளிப்படும் என்பது தெரியவில்லை. ஆயினும் நரசிம்மராவுக்கு ஒரு நிம்மதி. அவர் தனது கட்சிக்காரர்களை விட மற்றவர்களை நம்புவது நல்லது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார். அதுவே இதுவரை அவரது வெற்றிக்குக் காரணம்.

ஆக, பாரதீய ஜனதாகட்சியை நரசிம்மராவ் ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரை தமது எண்ணத்திற்கு உடன்பட வைப்பார். அப்படி அது முடியாத பட்சத்தில், அடுத்த பிரதான எதிர்க்கட்சியாகிய ஜனதா தளம் பா.ஜ.க.-வை கவனித்துக் கொள்ளும்- அதாவது ஜனதா தளத்தை நீங்கள்

**அகராதி**

ஒரு கட்சியாகக் கருதும் பட்சத்தில். நிஜமாகவே அது ஒரு ஆண்டி மடம். அதன் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட கருத்து, கட்சிக் கருத்து என்று எல்லா விஷயங்களிலும் இரண்டு முரண்படும் நிலைகள் உண்டு. ஜனதா தளம் இடம் பெற்றுள்ள தேசீய முன்னணியும் அப்படியே.கொசுக்கள் கூட்டமாக வந்தால் ஒரு வேளை யானை மந்தையைக்கூட மிரட்டலாம்; ஆனால் ஜனதா தளமும் தேசீய முன்னணியும் தனி ஒரு கொசுவைக்கூட நசுக்கிவிட முடியாது. அது ஓய்வு பெற்றவர்களின் கவைக்கு உதவாத அகந்தையின் தொகுப்பு. எனவே அதைப் பற்றியும் நரசிம்மராவ் கவலைப்பட வேண்டாம்.

### 'ஜெ' பிரைவேட் லிமிட்டெட்

ஆனால் அகந்தையின் மொத்த உரு-மொ...த்...த உரு-ஒன்று சென்னையில் இருக்கிறது. அதுதான் அகில இந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் என்று பெரிய நீ....ண்....ட பெயர் கொண்ட "ஜெயலலிதா பிரைவேட் லிமிட்டெட்"



(அகந்தையைப் பொறுத்தவரை அன் லிமிட்டெட் என்றும் வைத்துக் கொள்ளலாம்!) விட்டுக் கொடுப்பது போல வெற்றி கொள்வது எப்படி என்பது நரசிம்மராவுக்குப் பிடிபட்டிருக்கிறது. அவ்வப்போது அவர் ஜெ.பிரைவேட் லிமிட்டெடுக்கு ஏதாவது எலும்புத்துண்டை வீசி எறிவார். இப்போதைய எலும்புத் துண்டு ராஜ்யசபை தேர்தலில் தமிழ்நாடு சட்டசபையிலிருந்து ஐந்து ஜெ.அடிமைகள் தேர்வுபெற சம்மதம் தெரிவித்திருக்கிறார். இது ஜெ.அரசியல் கமிஷன் மண்டிக்குப் பெரிய லாபமும் இல்லை. இ.காங்கிரஸ் கட்சிக்கு இழப்பும் இல்லை. ஏனென்றால் இரண்டு காங்கிரஸ் உறுப்பினர்களை மாநிலங்கள் அவைக்கு அனுப்புவதற்கு போதிய வாக்காளர் வலு அந்தக் கட்சிக்கு இல்லை. எனவே இல்லாத ஒன்றை காங்கிரஸ் விட்டுக் கொடுத்ததாகச் சொல்ல முடியாது. நரசிம்மராவ் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் சில காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஜெ.பக்தர்கள் என்ற முறையில் ஐயா பேச்சை விட அம்மா பேச்சையே கேட்பவர்கள்!

ஆனால் இப்படி ஓர் ஒப்புதல் தருவதன் மூலம் நரசிம்மராவ் ஜனாதிபதி தேர்தலில் ஜெ.யின் ஆதரவை விலைக்கு வாங்கி விட்டார், பெரிய மீனைப் பிடிக்க, அபார்ஷன் ஆகக்கூடிய சின்ன மீனை அவர் தந்திருக்கிறார். இது அவரது ராஜ தந்திரம். அகந்தையை ராஜ தந்திரம் வெல்லும் என்பது அன்றும் இன்றும் உண்மை.

ஆக, ஆடுகிற மாட்டை ஆடியும் பாடுகிற மாட்டைப் பாடியும் கறக்கத் தெரிந்து கொண்டுள்ள நரசிம்மராவ் ஜனாதிபதி தேர்தலில் போட்டியைத் தவிர்ப்பார் என்று எதிர்பார்க்கலாம். பொதுக்கருத்தை உருவாக்கி ஜனாதிபதி (துணை ஜனாதிபதி-அந்த நிலை ஏற்பட்டால்) பதவிக்கு ஒருமனதான தேர்வினை ஏற்படுத்தலாம்.

சரி, நரசிம்மராவ் யாரை மனதில் வைத்திருக்கக் கூடும்? அல்லது யாருக்குப் பொதுக்கருத்துத் தேர்வு சாதகமாக இருக்கும்.


### சங்கர் தயாள் சர்மா

இப்போதைக்கு அந்தப் பெருமையைப் பெற முழுமையாகத் தகுதி பெற்றவர் துணை ஜனாதிபதிடாக்டர் சங்கர் தயாள் சர்மா. பொதுவாக எல்லாக் கட்சிகளுமே இவரை ஏற்கின்றன. பிராமணர்கள் மீது வெறுப்பு கொண்ட ஒரு தி.மு.க. தலைவர் சர்மா காங்கிரஸ் கட்சியின் பிரமுகர்களிடையே அந்தப் பதவிக்கான தகுதிகள் அதிகம் உடையவர் என்கிறார்.

ஆனால் தி.மு.க.வுடன் தேசீய முன்னணியில் அங்கம் பெற்றுள்ள ஜனதா தளத்தலைவர் வி.பி.சிங் சர்மாவை எதிர்பதாகச் சொல்லாமல்-இந்தப் பதவிக்கு ஒரு தாழ்த்தப்பட்டவர் தேர்வு செய்யப்பட வேண்டும் என்கிறார். அவரது கட்சியின் வேறு பெரிய தலைவர்களே இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர், குறிப்பாக ஒரிசா முதல்வர் பிஜு பட்நாயக். ஜாதி அரசியல் உச்சத்தில் உள்ள தமிழ் நாட்டில் கூட சிலர் "என்ன சென்னை மேயர் பதவியா, ஜாதிச் சுற்று முறைக்கு? என்று கேட்கிறார்கள்.

ஒரு வேளை சர்மா ஜனாதிபதியாக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஜாதிப்பிரச்னை துணை ஜனாதிபதி விஷயத்தில் முக்கை நுழைக்கலாம். அப்பொழுது நிச்சயம் பிராமணர் அல்லாத ஒருவர் துணை ஜனாதிபதியாக வேண்டும் என எல்லாக் கட்சியிலும் பொதுக்கருத்து உருவாக வாய்ப்பு இருக்கிறது..

ஏதாவது காரணத்தினால் 'ஜாதி' நுழையாவிட்டால் தெற்கு-வடக்கு பிரச்னை எழலாம்; அதாவது ஜனாதிபதி வடநாட்டவர் என்பதனால் துணை ஜனாதிபதி தென் நாட்டவராக இருக்க வேண்டும் என்று சிலர் பிரதேசப் பிரச்னையைக் கிளப்பி விடலாம். அல்லது ஜாதி பிரதேசப்



பிரச்சனை இரண்டும் தலைகாட்டலாம். இரண்டும் இல்லாவிட்டால் அரசியல் இருக்கிறது. பாரதீய ஜனதாகட்சி துணை சபாநாயகர் பதவி கேட்பது போல துணை ஜனாதிபதி பதவியையும் கேட்கலாம். அதில் சிக்கல் ஏற்பட்டு பிரச்னை முற்றினால் பா.ஜ.க. ராமர் கோவிலைக் கட்டுகிறேன் என்று உறங்கும் பூதத்தைத் தட்டி எழுப்பி விடலாம். அந்த பூதம் பிறகு, அதாவது அடுத்த சில மாதங்களில், நரசிம்மராவ் ஆட்சி (காங்கிரஸ் ஆட்சி என்றே வைத்துக் கொள்ளவும்!) கவிழவும் காரணமாகலாம்.

ஜனாதிபதி தேர்தலின் பிரச்னை முற்றினால் நரசிம்மராவ் அடுத்த நான்கு வருடங்களுக்குப் பிரதமராகத் தொடர்வாரா என்று சொல்லமுடியாது.. ஆனால் அவரே ஜனாதிபதியாகி விட்டால் அடுத்த ஐந்து வருடங்களுக்கு யாரும் அவரது நாற்காலியை அசைக்க முடியாது! பிரதமர் பதவியிலிருந்து விலகினால், விலக்கப்பட்டால் நரசிம்மராவ் பிறகு ஜனாதிபதி ஆக முடியாது. ஒரு வேளை இப்பொழுது தானே ஜனாதிபதியானால், காங்கிரசில், நாடாளுமன்றத்தில், நாட்டில் ஏற்படக்கூடிய சில சிக்கல்களை மிகவும் சாமர்த்தியமாகப் பயன்படுத்தி அவர் அமெரிக்க பாணி ஆட்சி முறையைக் கொண்டு வந்து அலங்கார ஜனாதிபதி பதவியை அதிகாரப் பொறுப்பு உள்ளதாகவும் செய்ய முடியும். செய்வாரா?

அப்படி ஒரு நிலமை உருவானால் அது நாட்டுக்கு நன்மை தரக்கூடியதே. நாடு நெடுக தனிநபர் வழிபாடு என்பது ஓர் அரசியல் நாகரிகமாக, பண்பாடாக மாறிவிட்ட பிறகு இந்தியாவுக்கு ஏற்ற நிர்வாக முறை அமெரிக்கபாணி ஜனாதிபதி தேர்வே. தனிநபர் வழிபாடு மூலம் மாநிலங்களில் சில தலைவர்கள், மத்தியில் சில தலைவர்கள், இவர்களுக்கிடையே மோதல், அதனால் அரசியலில் நிலையற்ற தன்மை என்பதை மாற்றி நாட்டு நிர்வாகத்தில் இனி போகப்போக உருவாக இருக்கக்கூடிய பிரதமர்-ஜனாதிபதி மோதல்களையும் தவிர்க்க நேரடி ஜனாதிபதி தேர்தல் முறை பெரிதும் உதவும். அதனால் ஆங்காங்கே ஊழல் என்ற நிலையை மாற்றி அதையுமே ஒருமுகப்படுத்தலாம்! பலர் நாட்டைக் கொள்ளையடிப்பதை விட சிலர் மட்டுமே கொள்ளையடிப்பது மக்களுக்கு நன்மை தரும்! அதை இப்போதுள்ள ஊழல் பெருச்சாளிகள் ஒருவேளை விரும்பாமல் இருக்கலாம்.

எனவே இந்த அகராதியின் யோசனை நரசிம்மராவ் இப்போதுள்ள தேர்தல் முறையில் ஜனாதிபதியாகி பிறகு அரசியல் அமைப்பு முறையைத் தன் காலத்திலேயே மாற்றி, அலங்காரப் பதவியை அதிகாரப் பொறுப்புள்ளதாக மாற்றிக் கொள் ளலாம். அதிரடிப் பொருளாதாரப் புரட்சியைச் செய்த இந்த மனிதர் அப்படி ஒரு நிர்வாக மாற்றத்தையும் செய்வது வரவேற்கத்தக்கதே.

## கலா பவனம் ஒரு புதிய நுண்கலை மையம்

நமது நிருபர்

தெற்கு லண்டனில் குரோய்டன் பேட்டையைச் சேர்ந்த கலாரசிகர்கள், கர்நாடக இசையிலும் நாட்டியத்திலும் ஈடுபடுபவர்களின் ரசனைக்காக ஆரம்பித்திருக்கும் கலாபவனம் என்ற புதிய நுண்கலை மையத்தின் ஆரம்ப விழா கடந்த 28.6.92 ஞாயிற்றுக்கிழமை மாலை தெற்கு நோவூட் கல்வி மையத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

எடுத்த எடுப்பிலேயே ஆரம்ப விழாவில் மிக உயர்ந்த கர்நாடக சங்கீதக் கச்சேரியும் நாட்டியக் கச்சேரியும் ஏற்பாடு செய்திருந்தார்கள். பெங்களூரைச் சேர்ந்த பாடகி மனோரமா கிருஷ்ணபிரசாத் ஒன்றரை மணி நேரம் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் தியாகராஜர், தீக்ஷிதர், கோபாலகிருஷ்ண பாரதி, மைசூர் வாசுதேவச்சாரியார் ஆகியோரது கீர்த்தனைகளை சாஸ்திரீய நுட்பத்தோடு பாடி, சபையோரை மகிழ்வித்தார். திருமதி மனோரமா அகில இந்திய வானொலிக் கலைஞர்களில் ஒருவர். இவருக்குப் பக்கவாத்தியமாக வயலின் வாசித்தவர் திருவாரூர் கோதண்டபாணி; மிருதங்கம் முத்து சிவராஜா, கடம் அஞ்சலோ குமாரதாசன், மோர்சிங் சிதம்பரநாதன்.

பரதநாட்டியம் ஆடிய மலர்விழி கருணாநிதியும் அனுஷா வரதலிங்கமும் பாவலயத்துடன் மிகச்சிறப்பான நடன விருந்தையளித்தார்கள். இவர்களின் நடன ஆசிரியை திருமதி பத்மினி குணசீலனின் நட்டுவாங்கம் உறுதியாகவும் எடுப்பாகவும் இருந்தது. இந்த நிகழ்ச்சியில் விமர்சனமான அறிவித்தல் செய்தவர் கச்சேரியின் பந்தாவைச் சோபிக்கச் செய்தார்.

கலாபவனம் என்ற இந்தப் புதிய கலை மையம் நமது புராதன கலைகளின் வரலாற்றையும் அமைப்பையும் பொருளையும் பற்றி ரசிகர்கள் தெரிந்து கொள்ளும் வகையில், விளக்க உரைகள், கலந்துரையாடல்கள், விமர்சன நிகழ்ச்சிகள் முதலியன கொண்ட கூட்டங்களாக மாதந்தோறும் ஏற்பாடு செய்ய, நிர்வாகிகள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்று அறிகிறோம். இந்தத் திட்டத்தைப்பற்றி அறிந்த திருவாளர் ஏ.ரி.ரத்னசிங்கம் அவர்கள், ஆரம்ப விழா சிறப்பை ரசித்ததும் வாழ்த்தி வரவேற்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ANGLO ASIAN MINI MART

## Beckons You To

### EXPERIENCE THE DIFFERENCE

### OF

## SRI LANKAN PRODUTS

### IN

# WEMBLEY

## HURRY CURRY

## DYNA FAB

ஆனந்தவிகடன், பொம்மை, பேசும்படம், குமுதம், கல்கி,
மற்றும் சகல வாரப் பத்திரிகைகளுக்கும்


# ANGLO ASIAN MINI MART

**513 HIGH ROAD, WEMBLEY**
**TEL: 081-903 8202 FAX: 081-868 4918**

www.tamilarangam.net



# தன்வழி நடந்தவர் தனிவழி சென்றார்



காலஞ்சென்ற சங்கீத கலாநிதி மகாராஜபுரம் சந்தானம் இசைமேதை மகாராஜபுரம் விஸ்வநாத ஐயரின் புதல்வராக 1928ல் பிறந்தார். இளமையிலேயே மெலட்டூர் சர்மா தீட்சிதரிடமும் பின்னர் தமது தந்தையாரிடமும் இசைபயின்று தமது இருபதாவது வயதில் தந்தையாருடன் கச்சேரிகளில் சேர்ந்து பாடி முன்வரிசை வித்வானாக அங்கீகாரம் பெற்றார்.

தந்தை விஸ்வநாத ஐயரின் பாணியையே இவரும் பின்பற்றிய போதும் தமது தனித் திறமையில் புதிய பாணியை வளர்த்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார். வயலின் கோவிந்தசாமி நாயக்கர், மிருதங்கம் ராமநாதபுரம் ஈஸ்வரன் முதலிய முன்னணி வித்வான்களின் பக்க வாத்தியங்களுடன் சந்தானம் ஆரம்ப நாட்களிலேயே கச்சேரி செய்யும் திறமையைப் பெற்றார். பல காலமாகத் தந்தையார் கச்சேரிகளில் சேர்ந்து பாடினார்.

தமது வாழ்நாளில் சந்தானம் பல பரிசுகளையும் பட்டங்களையும் பெற்றார். தமிழ்நாடு அரசின் கலைமாமணி பட்டம், இந்திய அரசின் சங்கீத நாடக அகாதெமி விருது, காஞ்சி காமகோடி பீடத்தின் விருது, சிவானந்த ஆசிரமத்தின் விருது, சிருங்கேரி மடத்தின் விருது, மற்றும் பல சபாக்களின் பட்டங்களையும் பெற்றார். திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கும், காஞ்சி காமகோடி பீடத்துக்கும், அமெரிக்காவில் பிட்ஸ்பர்க் வெங்கடேஸ்வர ஆலயத்துக்கும் ஆஸ்தான வித்வானாக இருந்தார்.

வித்வான் சந்தானம் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளுக்கெல்லாம் விஜயம் செய்து கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் நடத்தியிருக்கிறார். வெளிநாடுகளில் முக்கியமாக இலங்கையில் சந்தானத்தின் தொடர்பு அதிகம்.

1960 முதல் ஐந்து ஆண்டுகள் சந்தானம் யாழ்ப்பாணம் இராமநாதன் இசைக்கல்லூரியின் தலைவராகக் கடமையாற்றியதில் பல சிறந்த மாணவர்களை வித்வான்களாக்கி வைத்தார். யாழ்ப்பாண இசை மரபுக்குப் புத்துயிர் அளித்தவர் என்றால் மிகையாது. கருணாகரன், கணபதிப்பிள்ளை, ரஞ்சனா தங்கராசா, ஜெகதாம்பிகை பரமநாதன், சிவசக்தி சிவநேசன், பரந்தாமன் மாலினி தனபாலசிங்கம் ஆகிய இன்றைய முன்னணி வித்வான்கள் சந்தானம் தயாரித்த கலைஞர்கள்.



What're you upto ?
Practising! Santhanam gets applause every time he touches the rishabham.

விதி தன் வலிமையை நிருபிக்க மகோன்னத நிலையிலிருந்த ஓர் இசைவாணரை வீழ்த்திக் காட்டியதுபோலும். புகழ், செல்வாக்கு, செல்வம் இவை அனைத்திலும் தன் வசிகரம்மிக்க இசையால் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த மகாராஜபுரம் சந்தானத்தை, விதி இவ்வளவு கொடூரமான சம்பவத்தின் மூலம் நம்மிடமிருந்து பிரித்திருக்க வேண்டாம்.

இசையில் நல்ல ரசனை உள்ளவர்கள் மட்டுமே ரசிக்கக் கூடிய கர்நாடக சங்கீதத்தில் நக்ஷத்திர அந்தஸ்து பெற்றவராக விளங்கினார் சந்தானம். சாஸ்திரீய சங்கீதத்திற்குத் தன்னுடைய கற்பனை வளத்தால் ஒரு ஜொலிப்பை சந்தானம் அளித்ததன் காரணமாக ஆயிரக்கணக்கான ரசிகர்கள் அவர் பாட்டின்மீது மோகமுற்றிருந்தார்கள்.

மக்களைக் கவர்வதற்காக, அழுத்தமான, கனமான மார்க்கத்திலிருந்து விலகி, சந்தானம் கொஞ்சம் மெல்லிசைப் பக்கமாகச் சென்று கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டு ஆங்காங்கே தொடுக்கப்பட்டிருந்தபோதும், செல்வாக்குமிக்கவர்கள் மத்தியிலே சந்தானத்திற்குப் பரவலாகப் பெரும் வரவேற்பு இருந்தது. இதற்குக் காரணம் கர்நாடக இசைக்கு மக்களின் ஆதரவு குறைந்துகொண்டு வருகிறது என்ற அபிப்பிராயம் வலுப்பட்டிருந்த காலகட்டத்தில், சந்தானம் இசை அரங்குகளை நிரம்பி வழியச் செய்ததுதான்.

மாபெரும் இசை மேதையான மகாராஜபுரம் விஸ்வநாத அய்யரின் வாரிசாக சந்தானம் இருந்தபோதிலும், தன்னுடைய சுய கற்பனை மூலமும் ஒரு தனி இடத்தைப் பிடித்தார். "மனோதர்மம்" என்று சொல்லக்கூடிய கற்பனை சக்தி அதிகமாகப் பரிணமிக்கும் இசையில் என் தந்தை சிறந்து விளங்கினார். இதற்கு மாறாக என்னுடைய இசை ஒரு 'செட் அப்தான்' என்று ஒருமுறை என்னிடம் கூறியிருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால் சந்தானத்தின் இசைப் பாணி வளர்ந்து செழிப்படைந்தது இலங்கையில்தான். தன் தந்தைக்குப் பின்பாட்டுப் பாடிக் கொண்டிருந்த சந்தானம் அவருடன் இசைப்பயணமாக அந்தத் தீவுக்கு சென்றபோது தனிப்பட்டு நிற்பதற்கான முதல் வாய்ப்பைப் பெற்றார். அங்குள்ள ராமநாதன் இசைக் கல்லூரியின் முதல்வரானார்.

இசையைக் கற்பிக்கும் பொழுது, அந்தக் கலையைப் பற்றிய அவருடைய எண்ணங்கள் தெளிவு பெற்றன. இலங்கையின் மிகச்சிறந்த ரசிகர்களின் மத்தியிலே, அந்த நாட்டின் மூலை முடுக்குதோறும் கச்சேரிகள் செய்து, மக்களை எப்படிக் கவர வேண்டும் என்றுணர்ந்தார். ஆனால் ஒரு பத்து ஆண்டுகளுக்குப் பின் அவர் தமிழகம் திரும்பியபோது, இங்குள்ள சூழ்நிலையில் இசைவாணர்கள் மத்தியிலே தனக்கு ஒரு இடம் இல்லை என்பதை அறிந்தார்.

இந்நிலையில் சில ஆண்டுகள் வீடுகளைக் கட்டி விற்கும் தொழிலில்கூட ஈடுபட்டு அதில் லாபமும் சம்பாதித்தார். (ஒரு முறை அவர் கூறினார்: 'ரியல் எஸ்டேட் பிஸினஸில்' நான் இருந்திருந்தால் கோடிக்கணக்கில் சம்பாதித்திருப்பேன் என்று)

பிறகு, அவர் இசைத்துறையில் மீண்டும் பிரவேசித்தபோது, புகழ் பெற்ற பக்க வாத்தியக்காரர்களின் பலத்தில் முன்னுக்கு வர விரும்பாமல், தன்னுடைய சொந்தக் காலில் நிற்கத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் அவருடைய புதுமை கலந்த இசைப்பாணிக்குப் பல எதிர்ப்புகள் இருந்த போதிலும், காலம் துணை செய்யத் தொடங்கிய பொழுது அவருக்கு ஒரு தனி இடம் கிடைத்தது.

சந்தானம் ரசிகர்களின் நாடித்துடிப்பை அறிந்தவராக இருந்தார். ஆழ்ந்த இலக்கணம் உள்ள கர்நாடக இசையை லகுவாகப் பாடியதால் மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றார்.

பாடல்களையெல்லாம் பக்தி நயத்தோடு பாடியதால், ரசிகர்கள் ஈடுபாட்டோடு கேட்டார்கள். ராக ஆலாபனையை விஸ்தாரமாக மட்டுமல்ல, விமரிசையாகவும் பாடக்கூடியவர். மோகனம், ஆரபி, கேதாரகௌளை போன்ற ராகங்களை மிகச் சுந்தரமான முறையில் பாடக்கூடியவர் என்றால், பூர்வி கல்யாணி, சங்கராபரணம், தோடி போன்ற கனமான ராகங்களிலும் கைதேர்ந்தவர்.

அவரே மெட்டமைத்துப் பாடிய 'துக்கடா' உருப்படிகளுக்கு ஒரு பெரும் 'நேயர் விருப்ப'மே இருந்தது. கச்சேரி முடியும் தறுவாயில், ரசிகர்கள் எழுந்து நின்று இன்னும் இன்னும் என்று கேட்க வைத்த பாடல்கள் இவை.


சுய முயற்சியால், பொது மக்களின் மகோன்னதப் பாராட்டைப் பெற்றுத் தன் புகழ்க் கொடியை நாட்டிய கலைஞர் என்பதால், சந்தானத்திற்குச் சில விஷயங்களில் அலாதியான ஒரு தைரியம் இருந்தது.

ஏவி.எம்.நிறுவனத்திற்காக அவர் கர்நாடக இசையில் ஞானம் இல்லாதவர்களும் ரசிக்கும்படியாகப் பக்திப்பாடல்கள் அடங்கிய இரண்டு கேஸட்டுகளை அளித்திருக்கிறார். இந்தப் பாடல்களில் ராக பாவம் நிறைந்திருந்தாலும் அவை மெல்லிசையைச் சார்ந்திருக்கிறபடியால் சந்தானம் சில கண்டனக்கணைகளுக்கு ஆளானார். அவருடைய முயற்சி அதிக வெற்றி பெறவில்லையென்றாலும் இந்த நூதன அணுகுமுறையைப் போகப் போக ரசிகர்கள் வரவேற்பார்கள் என்பது சில விமர்சகர்களின் கருத்து.

சில மாதங்களுக்கு முன்புதான் சந்தானம் 'மெல்லிசை மன்னர்' எம்.எஸ்.விஸ்வநாதனோடு இணைந்து, வாத்திய கோஷ்டியோடு கச்சேரியை வழங்கும் புதிய முயற்சியில் ஈடுபட்டார். வெற்றி-தோல்வி எப்படி இருந்தபோதிலும், இவை சந்தானத்தின் அசாத்தியத் தன்னம்பிக்கைக்கு எடுத்துக் காட்டாக உள்ளன.

இன்றைய வியாபார உலகின் நோக்கையும் போக்கையும் முழுதுமாக உணர்ந்து சம்பிரதாயம் மேலோங்குகிற ஒரு இசை வடிவத்தை நூதனமான முறையில் கையாண்டு, வெகு சிலரே ரசிக்கக் கூடிய கர்நாடக சங்கீதத்திற்கு ஒரு வெகுஜன வரவேற்பைக் கொடுத்த சந்தானம் கண் இமைக்கும் நொடியிலே நம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். ஒரு தனி வழியில் நடந்தவர் நாம் எதிர்பாராத தனி வழியில் சென்று விட்டார்.

தினமணி என்.கிருஷ்ணசாமி








தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# விம்பிள்டன் இந்திர விழா

லண்டனின் தென் மேற்கு வட்டகையில் உள்ளது விம்பிள்டன் என்ற அமைதியான சிறு நகரம். இந்த நகரை அடுத்து இருப்பது விம்பிள்டன் கிராமம் (வில்லேஜ்!) வருடத்தில் ஒரு தடவை 15 நாட்களுக்கு இந்த விம்பிள்டன் வில்லேஜ் இந்திர விழாக்கோலம் பூணும்! அங்கு வாழும் வீட்டுக்காரார்கள் தமது வீட்டு முற்றத்தை வாடகைக்கு விட்டு விடுவார்கள். இங்கு கடைகள், கார் பார்க்குகள் திறக்கப்படும். சிலசமயம் வீடுக்காரரே ஒரு வைன்-சான்ட்விச் சிற்றுண்டிக்கடை நடத்த ஆரம்பித் துவிடுவார்.

உலகமெங்கும் இருந்து டென்னிஸ் அபிமானிகள் இந்த கிராமம் நோக்கிப் படை எடுப்பார்கள். டிக்கட்டுக்காக தவமிருந்து முதல்நாளே போர்வை தலையணையுடன் வந்து தூங்கு வோரும் உண்டு! இம்முறை விளையாட்டுகளில் போட்டியிடும் ஒரு வீராங்கனை ஆர்ஜன்டைன் நாட்டு அழகி கப்ரியேலா சபற்றினி. வயது 22. பெண்ணுக்கு பெண்ணே ஆசை கொள்ளக்கூடிய ஒரு தோற்றம்! டென்னிஸ் ஆட்டக்காரர்களை தமது பொருட்களின் விளம்பரத்திற்காக பயன்படுத்த விரும்பும் வர்த்தக நிறுவனங்களின் கனவுக்கன்னி கப்ரியேலா! டயற்பெப்சி, பியூஜி, யமஹா இப்படி உலக முன்னணி நிறுவனங்கள் எல்லாம் இவரது ஆடை அணிகளில் தமது பெயரைப் பொறித்து விளம்பரம் செய்கின்றன.

இது போதாது என்று கப்ரியேலே சொந்தமாக ஒரு வாசனை சென்டையும் தயாரித்து விற்பனை செய்கிறார். இவற்றின் மூலம் அவருக்கு வருடாந்த வருமானம் பல கோடி ஸ்டேலிங் பவுண்டுகள்! இதைத்தவிர டென்னிஸ் ஆட்டங் களில் மட்டும் இரண்டரை மில்லியன் பவுண்டுகள் சம்பாதித்துள்ள அழகி கப்ரியேலா 1992ன் பெண்கள் சம்பியனாக வருவாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# விளையாட்டுச் செய்திகள்

## கால்பந்து காடையர்கள்

"ஆங்கிலேயர் என்பது ஒரு காடையர்கள் இனமா?.." பிரபல ஆங்கிலப் பத்திரிகை, பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று தனது முன்பக்கச் செய்திக்கு கொடுத்திருந்த தலைப்பு இது ஆங்கில கோஷ்டி வெளி நாடுகளில் போட்டியிடும்போது கால்பந்தாட்ட அபிமானிகள்-ரசிகர்கள் என்ற போர்வையில் கூடவே செல்கிறது ஒரு காடையர் குழு! போகும்போது ரயிலில் கப்பலில் கலாட்டா. போட்டி நடக்கும் வெளிநாட்டில் போட்டி ஆரம்ப மாகுமுன் அடிதடி! போட்டியில் ஆங்கிலக் கோஷ்டி தோற்றுவிட் டாலோ கேட்கவே வேண்டாம். போத்தல் குண்டுகள் என்ன அரிவாள் கள் என்ன-ரத்தக் களரிதான்! பலியாகுபவர்கள் பெரும் பாலும் அந்த வெளிநாட்டு போலிசார்; வெளிநாட்டு கால்பந்தாட்ட ரசிகர் கள்; மற்றும் அந்த நாட்டு சாதாரண அப்பாவி மக்கள்.

சுவீடன் நாட்டின் தலைநகர் ஸ்டொக் ஹோமில் கடந்த வாரம் ஆங்கிலக் கோஷ்டி சுவீடிஷ் கோஷ்டியினால் தோற்கடிக் கப்பட்டது. போட்டியில் தான் நாம் தோற்றுவிட்டோம். காடைத் தனத்தில் நீங்கள் எங்களை வெல்ல முடியாது. அதில் சூராதிசூரர்கள் நாம் என்று சுவீடனுக்கு நிருபிப்பது போல ஆங்கில கால்பந்து காடையர்கள் நடந்து கொண்டார்கள்.

கடைக்கண்ணாடிகளை அடித்து நொறுக்கி, நிலத்தில் வீழ்ந்த சுவீடிஷ் ரசிகர்களை 15-20 பேர் சேர்ந்து உதைத்து நசுக்கி, இப்படியாக தலைநகரம் கொலைநகரமாக மாறியது. மொத்தம் சுமார் 2,000 சுவீடிஷ் போலீசார் நிலைமையை மிகுந்த சிரமப்பட்டு கட்டுப்படுத்தி காடையர்களை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார்கள்.

1996ல் ஐரோப்பிய சாம்பியன்ஷிப் போட்டியில் ஆங்கிலக் கோஷ்டிக்கு தடைவிதிக்கப்படும் நிலை கூட இப்போது ஆராயப்பட்டு வருகிறது. ஆங்கில காற்பந்து காடையர்கள் இங்கிலாந்தை விட்டு புறப்படுவதை பிரிட்டிஷ் அரசு தடைசெய்திருக்க வேண்டும் என்று சுவீடன் நாட்டு கால்பந்தாட்ட கழகம் குற்றஞ்சாட் டியிருக்கிறது. ஒரு சில நூறு காடையர்களின் நடத்தைக்கு பிரிட்டிஷ் அரசையோ ஆங்கில இனத்தையோ ஏன் குறை சொல்ல வேண்டும்?

கால்பந்து காடையர்கள் பற்றி பிரிட்டிஷ் மக்கள், பிரிட்டிஷ் பத்திரிகைகள், அரசியல்வாதிகள் அனைவருமே கவலை கொண்டிருக் கிறார்கள். சனிக்கிழமைகளில் பிரிட்டனின் நகரங்களில் எல்லாம் கால்பந்தாட்டங்கள் நடக்கும்போது ஆங்கில குடும்பங்கள் - அப்பா அம்மா அக்கா தம்பி அனைவரும் தாம் ஆதரிக்கும் கோஷ்டியின் சால்வை, குல்லாய் அணிந்து கொடிகளைத் தாங்கி கால்பந்தாட்ட மைதானத்தில் போட்டியை நேரில் பார்த்து குதூகலிப்பது வழக்கம். கடந்த சில வருடங்களாக உள்ளூரில்கூட கால் பந்து காடையர்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்ததால் மரியாதை யான குடும்பங்கள்-பெண்கள்-கால்பந்தாட்டம் பார்க்க வருவது பிரிட்டனில் குறைந்து விட்டது. கால்பந்தாட்டத்திற்கு மட்டும் தான் இந்தக் கதி என்றில்லை. இங்கு லண்டனில் நடக்கும் நட்சத்திர இரவு நிகழ்ச்சிகளில் வடஇந்திய தென் இந்திய சிங்கள நட்சத்திரங்கள் பாட வரும்போது கையில் 'பியர்-கான்' சகிதம் கூத்தடிக்க- விரசமான வார்த்தைகளை அள்ளி எறிய- குடும்பங்களை தலைகுனியச் செய்து நிகழ்ச்சியைக் குழப்ப ஒரு சில கும்பல்கள். இவர்களைப் பற்றி பிறிதொரு இதழில் கவனிப்போம்.

-விமல்

# ஐரோப்பிய பாராளுமன்ற குழு

(ஏ.ஸி.எம்.சாலி)

இலங்கையில் மனித உரிமைகள் பற்றி ஆராய்வதற்காக ஐரோப்பிய பாராளுமன்றத்தைச் சேர்ந்த இரண்டு அங்கத்தவர் குழு ஒன்று இம்மாத முற்பகுதியில் இங்கு வரவிருக்கிறது. இது இலங்கைக்கு அதன் இரண் டாவது விஜயமாகும்.

பிரிட்டனின் தொழிற்கட்சி எம்.பி.செல்வி.கிறிஸ்ரின் ஒடி தலைமையில், பல ஐரோப்பிய மனித உரிமைவாதிகளைக் கொண்ட முதலாவது குழு, ஜே.வி.பி.யின் நெருக்கடிகள் மிகுந்திருந்த 1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கையின் மேற்கு, மத்திய, தென் மாகாணங்களுக்கு விஜயம் செய்திருந் தது. இப்பிரதேசங்களில் 60 ஆயிரம்

இன்னமும் ஒரு மாத காலத்தில் வழங்கப்படவிருக்கும் இச்சன்மானத் தைப் பெறுபவர்களில் ஐவர் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் மீதமானோர் தமிழ்நாட்டைச் சேர்ந் தவர்கள் எனவும் திரு.கார்த்திகேயன் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்நாடு, கர்நாடக பொலிசாரும், மத்திய உளவு ஸ்தாபனமும் குறிப்பிடத்தக்க விதத்தில் உழைத்திருப்பதாகவும் இவர்களுக்கும் சன்மானங்கள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.







தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகம்

அளிக்கும்

நாடக விழா 92-(2)

19-07-1992

ஞாயிறு மாலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை

WALTHAM FOREST THEATRE

LLOYD PARK, WINNS TERRACE, WALTHAMSTOW

LONDON E17

நாடகங்கள்:

1. தப்பி வந்த தாடி ஆடு (சிறுவர் நாடகம்)
2. மழை
3. இரு துயரங்கள்
4. "துன்பக் கேணியிலே..." (கவிதா நாடக நிகழ்வு)

நெறியாள்கை . பாலேந்திரா

பிரவேசம்
£ 3.00
£ 5.00 (இருவர்)
சிறுவர் இலவசம்

சிற்றுண்டி விற்பனைக்குண்டு

சிறுவர் நாடகந் தவிர்ந்த மற்றைய நேரங்களில் குழந்தைகளுக்கென பிரத்தியேக வீடியோ காட்சி காண்பிக்கப்படும்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உலக அரங்கில்..

5ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டில் கட்சிவிட்டு கட்சி தாவுதல் சர்வ சாதாரணம். நாம் அப்படி எல்லாம் செய்யமாட்டோம்; எமது விசுவாசம் என்றும் எமது ஜெயலலிதா அம்மையாருக்கே என்று முதலமைச்சரின் முகத்தை தமது தோள் அருகில் பச்சைகுத்திக் கொண்ட இந்தப் பெண்கள் கட்சிதாவ விரும்பினால் என்ன செய்வது? வெட்டிய விரலை டாக்டர் ஒட்டித்தைக்கலாம். குத்திய பச்சையை டாக்டர்கள் அழிக்க முடியுமா—என்ன?

**செக் நாடே!**
**ஓ! சிலாவாக்கிய நாடே!**

சுமார் 75 ஆண்டுகளுக்கு முன் விசித்திரமான ஒரு சூழ்நிலையில் உருவாக்கப்பட்டது 'செக்கோஸ்லாவாக்கியா' என்ற நாடு. இந்த 75 ஆண்டுகளில் அது நடந்து வந்த பாதையில் தான் எத்தனை காட்டாறுகள்! தத்துவார்த்த குழப்பங்கள்!

1989வாக்கில் சோவியத்தலைவர் கோர்பச்சேவ்வின் துணிச்சலான நடவடிக்கைகள்— சீட்டுக்கட்டுகளை சரிப்பது போல உலக கம்யூனிச நாடுகளை சரித்துக்கொண்டு வந்தன. பேர்லின் சுவர் உடைந்தது. ருமேனிய சர்வாதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐரோப்பிய வரைபடம் மீண்டும் அழித்து எழுதப்பட்டது. செக்—சிலாவாக் தலைவர்கள்— தமது நாடுகளை பிரித்து தனித்தனி நாடுகளாக்க தீர்மானித்தார்கள். கத்தியின்றி ரத்தமின்றி—சிலாவக் தனிநாடு பிரிந்தது. பிரிந்து செல்லும் சிலாவாக்கியாவின் ஒருபக்கம் அவுஸ்திரியா, மறுபக்கம் போலந்து, ஹங்கேரி, உக்ரைன். இன்னோர் பக்கம் முன்னாள் உறவினன் செக் நாடு! சிலாவக்கில் கணிசமான ஹங்கேரியன் சிறுபான்மையினர் வாழ்கிறார்கள். எனவே சிலாவக்கில் அரசியல் ஆகர்ஷண சக்தி ஹங்கேரியின் பக்கமும் அவுஸ்திரியாவின் பக்கமும் ஈர்க்கப்படுவதை புதிய சிலாவக்கிய தலைவர்கள் விரைவில் உணரக்கூடும்.

## ஏன் சிரித்தார்?..

13ம் பக்கத் தொடர்ச்சி

அவர் முகத்தில் முழிக்கமுடியுமா? பிறகு உயிர் வாழ்ந்து தான் என்ன? மறுகணம், உலகம் என்ன சொன்னால் நமக்கென்ன. பயப்பட வேண்டுமா, ஏன்? சில நாட்கள் வாயில் வந்தபடி பேசுவார்கள். நாளைக்கு எல்லாம் சரியாய்ப் போய்விடும். இது தான் உலகம். இங்ஙனம் ஓர் அலைவர, எதிரே வேறோர் அலை வந்து அதையும் அடித்துக் கொண்டு போய்விடும்.

சின்னம்மா கோபாலபிள்ளையின் வீட்டை அடைந்த போது, தூரத்திலே ஒரு நாய் குரைப்பது கேட்டது. மெல்ல ஓசைப்படாமல் படலையைத் திறந்ததும், படலை 'கிரீச்' என்றது. சின்னம்மாவின் உடல் நடுக்கமெடுத்தது. யாரேனும் கண்டு விட்டால் ...? இல்லை, யாரோ கூவி அழைப்பது போல் இருந்தது. 'என்னை மறந்திடுவாயா?' என்று அவள் புருஷன் கேட்பது போல் உணர்ந்தாள்.

சின்னம்மா அந்தக் கேள்விக்கு மறுமொழி கொடுக்கவில்லையே என்று முன்னொரு நாள் மறுகினாளல்லவா? அதே கேள்வி.

"இல்லை, என் உயிருள்ளவரையும் உன்னை மறக்கமாட்டேன், என் துரையே" என்று வாய் முணுமுணுத்தது.

இதுகாறும் கொந்தளித்துக் கொண்டிருந்த சின்னம்மாவின் உள்ளத்தில் இப்போ அலைப் பாய்ச்சல் இல்லை. மனம் தெளிந்து அமைதி பெற்று விட்டது.

கோபாலபிள்ளையிடம் நேரே போனாள். "எசமான் நான் என் புருஷனுக்குத் துரோகஞ் செய்யமாட்டேன். அவர் என்னைத் தொட்டு தாலி கட்டியவர். தெய்வத்துக்கு சமானம். என்னை மன்னித்து விடுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தன் குடிசையை நோக்கி ஓடினாள். கோபாலபிள்ளை ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றார்.

சின்னம்மா தன் குடிசையை அடைந்து கீழே வீழ்ந்து புரண்டு கதறினாள்.

பொழுது புலர்ந்தது. புஷ்பங்கள் குலுங்கின. "என் தாயே, பாவப்படுகுழியில் விழாமல் என்னைக் காப்பாற்றினாய். என் கணவரை நான் மறக்கமாட்டேன். அவர் சீக்கிரம் திரும்பிவர அருள் புரிவாய், அம்மா" என்று நிலத்தில் வீழ்ந்து வணங்கினாள் சின்னம்மா.

## ராசி பலன்..

8ம் பக்கத் தொடர்ச்சி

அடிக்கலாம். நண்பர்களைப் பகைக்க வேண்டாம். வீடு சம்பந்தமாகப் பிரச்சனை ஏற்படலாம். குடும்பத்தை அமைதிப்படுத்த வேண்டிவரும். எல்லாருக்குமுள்ள பிரச்சினை தான். மருமக்கள் உள்ளவர்கள் மனதை உறுதிப் படுத்தவும்.

அதிஷ்ட எண் 3.



### மகரம்

பிரயாணத்தை ஒத்தி வைக்கவும். வாகன சுகம் குறைவு. எதிர்பாராத விருந்தினர் வரலாம். செலவைக் குறைக்கவும். குழந்தைகள் விஷயத்தில் படிப்பு திடீர் மகிழ்ச்சியைத் தரும். புதிய நண்பர்கள் உறவு கிடைக்கும்.


அதிஷ்ட எண் 1.



### கும்பம்

உத்தியோகம் புருஷலட்சணம் என்ற வாக்கியம் உங்களுக்குப் பொருந்தும். சுமுகமான காலம். அதேபோல், குடும்ப லட்சணமும் இருக்கும். புதிய உறவுக்கும் வழியுண்டு. செலவுக்கும் வழியுண்டு என்பதை கவனிக்கவும்.

அதிஷ்ட எண் 5.



### மீனம்

கையிலிருக்கும் தொழிலை நழுவ விடவேண்டாம். நண்பர்கள் உதவி குறைவு. செலவினங்கள் அதிகரிக்கும். புதிய வழியில் பணம் வரவும் இடமுண்டு. தூரத்து உறவில் துயரச் செய்தி வரலாம். விரைவில் விவாகப் பேச்சுக்கள் தொடர இடமுண்டு. லாபஸ்தானம் நன்றாயிருக்கிறது.

அதிஷ்ட எண் 2.

## சன்மானம்!

(ஹைதராபாத்)

ராஜீவ் காந்தி கொலைவழக்கில் அதிதீவிரமாகத் தேடப்பட்ட சிவராசன், சுபா ஆகியோர் பற்றிய தகவல்கள் தருவோருக்காக அரசு அறிவித்திருந்த 15 லட்சம் ரூபா சன்மானத்தொகை 21 பேருக்கு பகிர்ந்து அளிக்கப்படவிருக்கிறது.

சென்னை நகரில் சேகரிக்கப்பட்ட பல தகவல்கள் கோயம்புத்தூரிலும் பின்னர் பெங்களூரிலும் இவர்கள் தொடர்பான விசேட புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகளுக்கு வழி சமைத்தது என்று புலனாய்வுப்பிரிவின் தலைவர் திரு.டி.ஆர்.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார். ஒவ்வோர் இடத்திலும் சிவராசனையும் சுபாவையும் நாள் ஒன்றினால் தாம் தவறவிட்டதாக அவர் கூறினார். கொடுக்கப்பட்ட தகவல்களின் தரம், வகை என்பனவற்றின் அடிப்படையில் 3 பிரிவாக இச்சன்மானத்தொகை வழங்கப்படவிருக்கிறது.

அந்த வகையில் 8 பேருக்கு ரூபா 95 ஆயிரமும் மேலும் 8 பேருக்கு ரூபா 60 ஆயிரமும் மீதமான 5 பேருக்கு ரூபா 52 ஆயிரமும் வழங்கப்படும்.

## ஒரு ரயில் கிழக்கே போகிறது....

(கொழும்பு நிருபர்)

ஜூன் 18, வியாழக்கிழமை. நேரம் சுமார் பி.ப. 2மணி. முதல்நாள் இரவு கொழும்பிலிருந்து புறப்பட்ட பிரயாணிகள் ரயில் மட்டக்களப்பை நோக்கி நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. வழக்கம் போலவே ரயிலில் தமிழர்களும் முஸ்லிம்களும் நெரிசலாக இருந்தார்கள். வியாழக்கிழமையாதலால் முஸ்லிம்கள் சற்று அதிகம். ஏனெனில் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதிகளில் முஸ்லிம்கள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் தான் பிரயாணஞ் செய்ய முடியும். அந்நாள்களில் தான் ஆயுத படைகளின் பாதுகாப்பு கொழும்பு - மட்டக்களப்பு வீதிகளில் இருக்கும். அதுவும் காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை. அதன் பின்னர் வீதிகளில் வேறு இயக்கத்தவரின் நடமாட்டம் இருக்கும். அவ்வேளைகளில் பிரயாணஞ் செய்வதாயின் ரயில் மூலம் செல்வதே பாதுகாப்பு.

ஆயுதப்படையினர் ரயில் பாதைகளை சோதனையிட்ட பின்னர் பாதுகாப்பும் அளிப்பார்கள். குறித்த அன்றைய தினம் வாழைச்சேனையில் ஆயுதப்படையினர் ரயிலில் பிரயாணஞ் செய்யவில்லை. ஆனால் மட்டக்களப்பு வரை ரயில் பாதையை சோதனையிட்டு அநுமதித்திருந்தனர்.

பகல் 2 மணியளவில் ரயில் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற சத்துருகொண்டான் என்னுமிடத்துக்கூடாக சென்று கொண்டிருந்தது. யாரோ சிவப்புக்கொடி யொன்றைக் காட்டவும் ரயில் சடுதியாக கிரீச்சிட்டு நின்றது. திடீரென்று ரயிலில் ஏறிய ஆயுதங்கள் தரித்த 3 இளைஞர்கள் எல்லோரையும் கீழே இறங்கும்படி உத்தரவிடவும் எல்லோரும் இறங்கினார்கள். பிரயாணிகளில் தமிழரையும் காத்தான்குடியில் வசிக்கும் முஸ்லிம்களையும் அந்த ஆயுதந்தாங்கியவர்கள் வேறுபடுத்தினார்கள். அப்படி நூறுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் வேறுபடுத்தப் பட்டார்கள்.

நிலைமையை உணர்ந்து கொண்ட தமிழர்கள், உடனேயே, 'அவர்களை ஒன்றும் செய்துவிட வேண்டாம்' என்று சத்தமிட்டார்கள். அவர்களைச் சுற்றி வளையமாக நின்று கொண்டு "எங்களைக் கொன்ற பின்னர் அவர்களைக் கொல்லுங்கள்" என்று கூவினார்கள். அந்தத் தமிழர்களின், குறிப்பாக இளைஞர் யுவதிகளின் அந்தத் துணிச்சல்மிக்க செயலைக் கண்டு செய்வதறியாத அந்த இளைஞர்கள் மூவரும் காட்டுக்குள் ஓடி மறைந்து கொண்டார்கள்.


—அவர்கள் மறைந்து செல்லவும் தமிழ்ப்பெண்கள் முஸ்லிம்பெண்களின் முக்காடுகளை, அவர்களை அடையாளம் காணாமலிருப்பதற்காக நீக்கிவிட்டார்கள். சுமார் 100 ஜீவன்களின் வாழ்வும் தொடர ரயிலும் தொடர்ந்து நகர்ந்தது.

அதிர்ச்சியும், அழுகையும், நடுக்கமுமாக அவர் களைச் சுமந்து கொண்டு ரயில் மட்டக்களப்பு நிலையத்தை அடைந்தபோது, அங்கு நிகழ்ந்த காட்சிகள் மனதை உருக்குவனவாக இருந்தன. கன்னங்களில் வழிந்தோடும் கண்ணீரோடு தமிழர்களைக் கட்டி ஆரத்தழுவி கொண்டார்கள் முஸ்லிம்கள்.

இந்த சத்துரு கொண்டான் சம்பவம் தமிழ்—முஸ்லிம் உறவு சீர்குலைந்துவிட்ட மட்ட்க்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் எங்குமே எதிரொலித்தது. பல முஸ்லிம் இயக்கங்கள் தமிழ் மக்களுக்கு தங்களுடைய நன்றியைத் தெரிவித்து தீர்மானங்களும் பிரசுரங்களும் வெளியிட்டன. கிழக்கில் இனங்களுக்கிடையில்—சமூகங்களுக்கிடையில் அவர்களின் நடவடிக்கைகளுக்கிடையில் ஒரு திருப்பத்தை சத்துரு கொண்டான் சம்பவம் ஏற்படுத்துமா? தூசு படிந்த திரையில் ஒரு ரம்மியமான புதிய காற்று வீசுகிறது.

## திருமண வாழ்த்து

**மணமக்கள்**
**மோகனதாஸ், ஞானமலர்**
**திருமண நாள்: 13.06.92 வைகாசி 31ஆம் நாள்**



சுகம் தனம் ஞானம் துலங்கு நன் மக்கள்
அகவை நீட்சி ஆம் பதினாறும்
சூழவே அன்பினிர் நீவிர்
வாழிய பெரிதே!
வாழிய பெரிதே!!

-நண்பர்கள்-

கே.எஸ்.சிவகுமாரன்

## கலையையும் அரசியலையும்

ஒரு பொருளைப் பற்றிப் பாடுவது கவிதையாகாது. பொருளே கவிதையாக வேண்டும் என்பது பல மேலைநாட்டு ஆங்கில விமர்சகர்களின் அபிப்பிராயம். அப்படியாயின் அரசியலைப் பற்றிப் பாடுவது எங்ஙனம் கவிதையாகும்?அதற்கு முன் அரசியற் கவிதை என்று எதனைக் குறிக்கிறோம் என்று பார்ப்போம்.

பொதுமக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளையும், கொள்கையாக்கங்களையும் குறிப்பன. விரும்பத்தகாத போக்குகளை வெறுமனே சுட்டிக் காட்டுவதுடன் நின்றுவிடாது, அவற்றை மாற்றவும், வலியுறுத்தவும் துணிவன. மக்கள் சமுதாயத்தில் கவிஞனும் ஓர் அங்கத்தவனேயாகையால் 'கலை' என்ற பெயரில் சமூகத்தினின்று அந்நியப் பட்டோ, ஒதுங்கி நின்றோ இல்லாமல் படைக்கப்படுவன.

மேற்கண்டவற்றை அரசியற் கவிதை எனலாம் என்கிறார் பிரபல பிரிட்டிஷ் விமர்சகர் ஆர்னல்ட் கெட்டில். கவிதைக்கும் அரசியலுக்கும் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. வரலாற்று வளர்ச்சி, தொடர்பு சாதனங்களில் மாற்றம், இலக்கியத்தின் சமூகப் பணி, சித்தாந்தப் பிரதிபலிப்புகள் போன்றவை யாவும் கவிதையுடன் தொடர்பு கொண்டதாய் இருக்கக் காண்கிறோம். அது அவ்வாறிருக்க இந்தக் கவிதைதான் என்ன?

ஏதாவது ஒன்றை உன்னதமான, தனித்துவமான முறையில் சொல்வதுதான் கவிதை என்பது பல விமர்சகர்களின் விவரணை. அப்படியாயின், அரசியலை உன்னதமான, தனித்துவமான முறையில் சொல்லும் படைப்பும் கவிதையாகிறது. அரசியற் கவிதையில் பிரசாரம் கலைநுட்பமாக அமையின் அது எழுப்பும் சலனம் வீறு கொண்டதாக இருக்கும்..நமக்கு உகந்த கருத்தைத் தரும் அரசியற் கவிதை பரிவர்த்தனை செய்யும் அனுபவத்தைப் பாராட்டுகிறோம். எதிர்க் கருத்துக் கொண்ட கவிதையாயின், அதனைப் பிரச்சார வாடைக் கவிதை என்கிறோம். ஆகவே யார் யார் எதற்காகப் பாராட்டுகிறார்கள் என்பதையும் அவதானித்தல் வேண்டும்.அதே சமயத்தில் நமக்கு உகந்த கருத்தைக் கொண்டதால் மட்டும் ஒரு படைப்பு நல்ல கவிதையாகிவிட முடியாது. அதேபோலவே, கவிதை சொல்லும் பொருள் ஏற்றுக் கொள்ளப்படாவிட்டாலும், கவிதை எழுதப்பட்ட முறை ஒன்றுதான் என்று கூறிச் சான்றிதழ் வழங்குவதும் நேர்மையாகாது.

ஒரு விமர்சகன் ஒரு படைப்பை வரவேற்கும் பொழுது, அதன் உள்ளடக்கம், உருவம் இரண்டையுமே வரவேற்கிறான்.மொழியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தி, வித்தியாசமான முறையில் கூற வருவதைக் கூறுவது கவிதை எனலாம்.

பல்லாயிரக்கணக்கான கவிதைகளில், பெரும்பாலானவற்றைப் பெரும்பாலான வாசகர்கள் புறக்கணித்து விடுகிறார்கள். இது ஏன்? அக் கவிதைகள் மக்களைப் பற்றியதாக அமையாமற் போனதே இதற்குக் காரணம்.எனவே அரசியல் மக்களின் வாழ்க்கையுடன் இணைந்ததாக இருப்பதனால், அதுபற்றி உன்னதமான, தனித்துவமான முறையில் சொல்லுவது யாவுமே கவிதைதான். அரசியலைக் காண முடியாதவாறு அரசியலே கவிதையாக வேண்டும். அது கவிஞனின் உள்ளத்தின் ஒளியிலிருந்துதான் வெளிப்படும்..




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# SHANKAR

## NEW AVM CLASSICAL MUSIC CD COLLECTION AVAILABLE FROM US








**WHOLESALE OR RETAIL**

**OPEN 7 DAYS A WEEK**




**FROM 9.30 A.M. TO 10.30 P.M**







## SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX. U.K..

TEL: 081-426-8960 FAX: 081-861 5248

GALA ADS

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்